SOUTHERN LANGUAGES BOOK TRUST

UNESCO

ரூ. 2-10



# இந்தோனேஷ்யா

தமிழாக்கம் :

நா. சே. நாராயணன்

00130




Dorothy de Fontaine

# இந்தோனேஷ்யா

உலகத்தமிழ்க் கருத்தரங்கு
336
கலைக்காட்சிக் குழு
சென்னை

தமிழாக்கம்:

நா. சே. நாராயணன்

நா. சே. இராமநாதன்

ஔவை நூலகம்

ஔவை வெளியீடு : 37.
முதற்பதிப்பு : நவம்பர், 1959.

விலை : ரூ. 2-10.

யுனெஸ்கோவின் உதவியுடன்
தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப் பெற்றது

# இந்தோனேஷ்யா

தமிழாக்கம் :

நா. சே. நாராயணன்

நா. சே. இராமநாதன்

ஔவை நூலகம்

4/141 பிராட்வே, சென்னை-1

TAMIL
FIRST EDITION 5,000 Copies.
November 1959

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
2122
LIBRARY.
Acc. No. ...
Date ...
MADRAS-28.

# INDONESIA

## ( COLLECTIONS )

*Translated by*:

**N. S. NARAYANAN**

and

**N. S. RAMANATHAN**

**Price: Rs. 2-10**

---

Published with the Assistance of UNESCO,
Under the auspices of
The Southern Languages Book Trust, Madras.
**TAMIL : 59**

---

*Copyright of this Tamil Edition belongs to* :

**AVVAI NOOLAGAM**
PUBLISHERS & BOOK SELLERS,
**4/141, BROADWAY, :: MADRAS-1.**

# இந்தோனேஷ்யா

நியூயார்க்கிலிருந்து இன்டர் கல்சுரல் பப்ளிகேஷன்ஸ் இன்கார்பரேடட் அமைப்பினரால் நடத்தப் பெறும் அட்லாண்டிக் மந்த்லி எனப்படும் வெளியீட்டகம், இந்தோனேஷ்யா— ஒரு கண்ணேட்டம் என்னும் தலைப்பில் வெளியிட்ட சிறப்பு மலரிலிருந்து பலதிறப்பட்ட திரனய்வுக் கட்டுரைகள் தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

# INDONESIA

A collection from the supplement of An Atlantic Monthly in English published by the Intercultural Publications inc. New york, under the head lines Perspective of Indonesia.

# அணிந்துரை

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட்டு, தன்னுடைய முன் அனுபவங்களாலும், பொதுமக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும், இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பலதிறப்பட்ட சுவைகளுக்கு ஏற்பவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையின் பலவகைக் கூறுபாடுகளையும் பற்றிய பலபல பொருள்கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந்தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கரைகொண்டு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக போராடவும், நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப் பெருந்தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப்பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்துகொள்வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் என்பனவும் இவ்வரிசையில் இடம் பெற்றுள் ளன. சிறு கதைகளுக்கும் பண்டைய கலைகளைப் பொதுமக்க ளிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப்பட்டுள் ளது என்பதை தெரிந்துகொள்வது நலமாகும். நடனநாடகக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்றென்றும் வியத்தகு பொருள் களாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவையும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பொழுது வெளியிடப்பெறும் இந்த நூல் வரிசை படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப்பட்ட பொருள்களை வழங்கும் என்பது என் துணிபு. பொதுமுறைக் கல்விக்குரிய பொருள்களைக்கொண்ட இத்தகைய வெளியீடு கள் மேன்மேலும் பெருகும் பெருந்தொகையினராகிய வாச கர்களைக் கவர்ந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் வெளியீட்டுத் திட்டத்தில், தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழி பெயர்க் கும் அம்சம், பாராட்டத் தகுதியுடையதாகும். இவ்வரிசை முற்றுப்பெற்றதும், எழுதப்படிக்க மட்டும் தெரிந்த ஏராள மான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்துவரும் தொகையினருடன் இணைத்து, அவர்கள் தாங்களாகவே மிக்கதிறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிபு. தென்னிந் திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங் களோடு தொடங்கப்பெற்றதோ அந்நோக்கங்கள் அஃது ஆற்றிவரும் அரும்பணியால் மேன்மேலும் நிறைவேறி வரும் என்று நம்புகிறேன்.

ஏ. எல். முதலியார்
துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

# சிறப்புரை

இன்று நாம் விழிப்படைந்த, வீறுகொண்ட ஒரு புதிய ஆசியாவைக் காண்கிறோம். நாம் விடுதலை பெற்ற பின்னர் நமது வரலாற்றில் பல சிறப்புமிகு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் இப்போது நம் முன்னர் இருக்கும் இதுவும் ஒன்றாகும். நாம் ஆசியப் பெரு நிலப் பகுதியைச் சேர்ந்தவர்கள்; அப்பெரு நிலப் பகுதியிலிருந்து பல தாயகமூலங்களை நமதாக்கிக் கொண்டவர்கள்; அப்பெருநிலப் பகுதிக்குப் பல பண்பாட்டுச் செல்வங்களை வாரி வழங்கியவர்கள். இத்தன்மையதான ஆசியப் பெரு நிலப் பகுதியைச் சேர்ந்ததொரு நாடான இந்தோனேஷ்யா இப்போது புது வாழ்வு தொடங்கியுள்ளது.

கடந்த காலத்தில் இந்தியாவையும் இந்தோனேஷ்யாவையும் சில வரலாற்று முறைமையான தொடர்புகள் பிணைத்திருந்ததுண்டு. இப்போதையப் புதிய தொடர்புகளும் இவ்விரு நாடுகளையும் பிணைத்து நிற்கின்றன.

இந்தோனேஷ்யா ஒரு இஸ்லாமிய நாடு. எனினும் இந்தோனேஷ்யா செல்லும் இந்தியப் பார்வையாளர்கள்; அந்நாட்டின் பண்பாட்டில் ஹிந்து சமயத் தனித்திறம் படிந்து, இன்றும் நடைமுறையிலிருப்பதைக் கண்டு வியப்புறுதிக்க முடியாது. எடுத்துக்காட்டாக ஒன்று கூறலாம். இந்தோனேஷ்யாவில் நடனமாடுபவர்கள் முஸ்லிம்களாகவே இருந்த போதிலும் கூட, அவர்களுடைய நடனங்கள் இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்து வருவதை இன்றும் பார்க்கலாம். இது மட்டுமல்லாமல், இந்தோனேஷ்யாவிலுள்ள பல கோவில்களிலும், பாலித் தீவிற்குரியதான நடனங்களிலும், இந்தப் பண்டைய ஹிந்து சமயப் பண்பாட்டின் செல்வாக்குப் படர்ந்து பரவியிருப்பதையும் மிகத் தெளிவாகக் காணமுடியும். ஜாவாவிலுள்ள போரோபுதூர் இடிபாடுகள் புத்த சமயக் காலத்தின் வரலாற்றினைக் கூறி நிற்கின்றன. அதே போன்று ஹிந்து சமய ஊழியின் வரலாற்றினைப் பிரம்பனனிலுள்ள சைவசமயக் கோவில்கள் எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் இவை போன்ற பல பொதுதாயக மூலங்களால் நம்மிரு நாடுகளும் இணங்

திருந்த போதிலும் கூட, புதிய உலகில் நம்மிரு நாடுகளும் மேலும் ஒன்றையொன்று நன்கு புரிந்து கொள்ளவேண்டியது கட்டாயமாகிறது.

இருநாடுகளுமே ஒரு தாயகப் போராட்டத்திற்குப் பிறகு விடுதலையடைந்தவைகளாகும்; அதே போன்று தன்னுரிமை பெற்றதின் குறிக்கோளை நிறைவேற்ற இருநாடுகளும் பாடுபட்டு வருகின்றன. ஆகவே 'பிற்போக்கும் வளர்ச்சியுமடையாத நாடுகளில் காணப்படும் பொதுச் சிக்கல்களைத் தீர்ப்பதில் இந்தியாவும் இந்தோனேஷ்யாவும் ஒன்றனுக்கொன்று தங்களது பழக்க அறிவைப் பரிமாறிக்கொள்ளலாம். மேலும் ஒரு மக்களாட்சி வாழ்வைக் கட்டி வளர்க்க இரு நாடுகளுமே மேற்கொண்டு செயல்பட்டு வரும் முயற்சிகள் அனைத்தும் ஒரே வகையான இடர்ப்பாடுகளாலும் நம்பிக்கைகளாலும் சூழப்பட்டுள்ளன.

இந்தப் பகைப்புலனுக்கிடையே இந்தோனேஷ்யாவில் பாண்டுங்கில் ஆசிய-ஆப்ரிக்க நாடுகளின் மாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். பாண்டுங் மாநாடு, இன்று உலகெங்குமுள்ள குடியேற்ற ஆட்சியின் கீழ்ப்பட்ட மக்களின், அடிமைப்பட்ட மக்களின், குறிப்பாகச் சொன்னல் வெள்ளையரல்லாதோரின் மறுமலர்ச்சிக் குறியாகிவிட்டது. இந்தியாவையும், இந்தோனேஷ்யாவையும் பொறுத்தவரையில் உலகியல் நடைமுறைச் செயலில் ஒரே விதமான கொள்கையையே பின்பற்றி வருகின்றன. அதோடு ஆசிய-ஆப்ரிக்க மக்

வின் பெருமையையும், பெருமதிப்பையும் நிலை நாட்டுவதில் பண்டிட் நேருவுக்கும், இந்தோனேஷ்யக் குடியரசுத் தலைவர் சுகர்னோவுக்குமிடையே வியப்படையத்தக்க முறையில் ஒரே விதமான கண்ணோட்டம் இருந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இதனிலும் மேலாக, அனைத்துலகக் கொள்கை முறையில், இந்தியாவின் செயல் முறைமையான நடுநிலைமைக் கொள்கையை முதன் முதலாக ஏற்றுக்கொண்ட நாடுகளில் இந்தோனேஷ்யாவும் ஒன்ருக அமைந்தது சிறப்புடையதாகும். இந்தக்கொள்கையின் அடிச்சுவட்டில் இந்தியாவைப் பின்பற்றிச்செல்ல இந்தோனேஷ்யா பேரவாவுடனிருக்கிறது என்று கூறினலும் மிகைப்பட்ட சொல்லாகாதென்பதுறுதி.

இந்தோனேஷ்யாவின் வரலாற்றின் மிக நெருக்கடியான கட்டத்தில், அந்நாட்டின் விடுதலை வேட்கைக்குச் சார்பாக டெல்லியில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. டச்சு குடியேற்ற உரிமை ஆட்சி அழுத்திப் பிடித்திருந்த அடிமை நுகத்தடியின் கொடும் பிடியினின்று இந்தோனேஷ்யத் தாய், தன்னை விடுவித்துக்கொள்ள இந்த மாநாடு சிறப்புமிகு கருவியாகிப் பேருதவி செய்ததென்பது யாரும் மறுக்க முடியாத தொன்ருகும். பண்டிட் நெருவின் தெளிவுமிகு துணிகரமான இந்தப் பெருஞ்செயல் காரணமாக, இந்தியாவின் பால் நல்லெண்ண உணர்வும், பற்றும் இந்தோனேஷ்யாவிற்கு ஏற்பட்டது. எனினும் இது பற்ருக்குறையளவு நிலையேயாகும்.

இந்த இரு நாடுகளும் ஒன்றையொன்று நன்கு அறிந்துகொண்டு, அதன் பயனைப் பெறும் தெளிவு நிலைதான், இந்த நல்லெண்ண உணர்வையும் பற்றையும் மேலும் வலுவுடன் இணைக்கவல்லதாகும். இந்த வகையில் இந்நூல் இந்தோனேஷ்யாவை நமக்குப் படமாக்கிக் காட்ட ஓரளவு பயன்படுமென்று நம்புகிறேன். உலக நடுக்கோட்டை ஒட்டிக் கிட்டத்தட்ட ஆயிரம்கல் தொலைவுகள் நெடுகிலும் விரிந்து படர்ந்து கிடக்கும் இந்தோனேஷ்யாவின் வாழ்வையும் கலைச் சிறப்பையும் பண்பாட்டையும் பற்றிய சில சிறப்பான செய்திகளை இந்நூல் கொடுத்துள்ளது. ஆசியப் பெருநிலப் பரப்பில் நமக்கு மிகவும் அண்மையிலிருக்கும் நட்புமிகு நாடுகளில் ஒன்றான இந்தோனேஷ்யாவைப் பற்றி, மேலும் பல செய்திகளை அறிந்துகொள்ள வேண்டும், என்னும் ஆர்வத்தை மிகையான அளவில் நமக்களிப்பதுடன், அவ்வழியில் நம்மை நன்முறையிலும் இந்நூல் இட்டுச் செல்லுமென எதிர்பார்க்கிறேன்.

**சந்திரா தேவநேசன்.**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை<br>எழுதியவர் : பேபியன் போவர்ஸ் | 17-25 |
| 2. | மாறும் உலகில் இந்தோனேஷ்யாவின் இடம்<br>எழுதியவர் : அலி சாஸ்ரோமிட் ஜோஜோ<br>இந்தோனேஷ்யாவின் முன்னாள் முதலமைச்சர் | 27-39 |
| 3. | இறந்தவர்களுக்கான நடனம்<br>எழுதியவர் : பெப் வுயிக் | 41-56 |
| 4. | இந்தோனேஷ்யப் பொருள்நிலை வாழ்வின் தன்மை<br>எழுதியவர் : மகமது ஹட்டா | 57-75 |
| 5. | விடிவுக்கு முன் பிறந்தவன்<br>எழுதியவர் : பிரமோத்யா ஆனந்தா டோயர் | 77-96 |
| 6. | இந்தோனேஷ்யாவை எதிர்நோக்கியுள்ள சிக்கலான வினாக்கள்<br>எழுதியவர் : சுடான் ஜாரீர் | 97-124 |
| 7. | இந்தோனேஷ்யப் பண்பாட்டில் சில முரண்பாடுகளும் வேற்றுமைகளும்<br>எழுதியவர் : எஸ். தக்தீர் அலிஸ்ஜாபானா | 125-137 |
| 8. | இந்தோனேஷ்யக் கலையின் போக்குகள் : நாடோடிக் கலைமரபும் மேற்கத்தியச் செல்வாக்கும்<br>எழுதியவர் : டிரிஸ்னோ சுமார்ட்ஜோ | 139-149 |
| 9. | ஹாஜி ஐகாரியாவின் பரிசுச் சீட்டுக்கள்<br>எழுதியவர் : மோச்டார் லூபிஸ் | 151-166 |
| 10. | இந்தோனேஷ்யாவின் ஆடல் கலைகள்<br>எழுதியவர் : காவ் ஹர்ட்ஜாசுமண்ட்ரி | 167-181 |
| 11. | இந்தோனேஷ்யாவின் சமயநெறிகள்<br>எழுதியவர் : ஆர். முகமது கப்ராவி | 183-187 |
| | இந்தோனேஷ்ய ஓவியக்கலை மரபின் தடத்தை விளக்கும் படங்கள் | 189-192 |

# INDEX


| No. | | Page |
|---|---|---|
| 1. | Introduction<br>By Foubion Bowers | 17-25 |
| 2. | Indonesia's Place in a changing World<br>By H. E. Ali Sastroamidjojo<br>Former Prime Minister of Indonesia | 27-39 |
| 3. | Dance to the Dead<br>By Beb Vuyk | 41-56 |
| 4. | Facets of Indonesia's Economy<br>By H. E. Mohammad Hatta | 57-75 |
| 5. | Born Before the Dawn<br>By Pramoedya Ananta Toer | 77-96 |
| 6. | Problems the Country Faces<br>By Sutan Sjahrir | 97-124 |
| 7. | Some Intellectual Conflicts<br>Tensions in Indonesia's Culture<br>By S. Takdir Alisjahbana | 125-137 |
| 8. | The Tendencies of Indonesia's Art<br>Folk Traditions and Western Influence<br>By Trisno Sumardjo | 139-149 |
| 9. | The Lotteries of Haji Zakaria-A story<br>By Mochtar Lubis | 151-165 |
| 10. | Dances of the Islands<br>By Gaos Hardjasumantri | 167-181 |
| 11. | Indonesia's Religions<br>By R. Mohammad Kafrawi | 183-187 |
| | Reproductions of Indonesian Art | 189-192 |

# 1. முன்னுரை

எழுதியவர் ;

## பேபியன் போவர்ஸ்

உலக நடுக்கோட்டின் வட்டத்தில் (பூமத்திய ரேகை மண்டலத்தில்) ஆசியா, ஆஸ்திரேலியாக் கண்டங்களின் சிறப்பு மிக்க நிலப் பகுதிகளுக்கிடையே படர்ந்து பரவிக் கிடக்கிறது வளமிக்க, அதிக வெப்பமான, எரிமலைகள் நிறைந்த இந்தோனேஷ்யா. இது ஒரு பெரிய தீவுக்கூட்டம். இவ்விதம் ஒரு பெரிய அளவில் தீவுக்கூட்டங்கள் ஒன்று சேர்ந்து ஒரு நாடக உருப்பெற்றிருப்பது உலகில் வேறு எங்கும் இல்லை. ஜெர்மானியர்கள் இந்த நாட்டை 'இந்தோனேஷ்யா' என்று அழைத்தார்கள் இந்தச் சொல் 'இந்தியத் தீவுகள்' எனப் பொருள்படும். ஆனால்

இந்தோனேஷியர்கள் தங்கள் நாட்டை 'நுசான்டரா' அல்லது 'தீவுக்கூட்டம்' என்று அன்போடு அழைத் தார்கள். ஜெர்மானியர்கள் அழைத்ததை விட இது பொருத்தமான பெயர் என்று தோன்றுகிறது. இந்தத் தீவுகளில் மிகப்பெரியது 'கலிமண்டான்' என இப்போது அழைக்கப்பெறும் போர்னியோவாகும். பரப்பளவில் இது ஏறக்குறைய பிரான்ஸ்சுக்கு ஈடா கும். இங்கேயுள்ள சிறுசிறு நிலப்பகுதிகள் மணல் திட்டுகளைவிடப் பெரியவைகளாக இருப்பது அருமை யாகும். இவைகள் மிகவும் தாழ்ந்து காணப்படு கின்றன. ஏனைய காலங்களில் தண்ணீரில் அமிழ்ந்து கிடக்கின்றன. இதனால் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குச் செல்வதற்கும் சிறு படகுகளின் உதவியே வேண்டப்படுகிறது.

இந்தோனேஷ்யா ஆசியாவின் தென் கோடியையும் கீழ்க்கோடியையும் தழுவி நிற்கிறது. நில அமைப்புப் படத்தைப் பார்த்தால் இந்தோனேஷ்யாவிற்குக் கீழே, 'அன்டார் புக்கா' வரை பரவியுள்ள, ஆழ்ந்து அகண்ட இந்துமாக்கடலில் சின்னஞ்சிறு புள்ளிபோல 'கிறிஸ்து மஸ் தீவு' மட்டும் இருப்பதைக் காணலாம். பாலித் தீவுக்கும் அதனை அடுத்துள்ள லோம்புக் தீவுக்கு மிடையே செல்லும் புகழ் பெற்ற 'வாலஸ்கோடு' ஆஸ் திரேலியாவிலிருந்து ஆசியாவின் முதன்மையான நிலப் பகுதியைப் பிரிக்கிறது. தாவர உயிரினங்கள் பற்றிய ஒரு சரியான தெளிவான எல்லைக்கோடு என இதனைக் கூறலாம். எனவேதான், எடுத்துக் காட்டாக ஆசியாக் கண்டத்திற்குரிய விலங்கான புலி, பாலிக்கு அப்பால் கிழக்கே காணப்படுவதில்லை. இதே போல ஆஸ்திரேலியாவுக்கு உரித்தான 'காக்கடு' என்னும் ஒரு

வகைக் கிளி, மேற்கே வெகு தொலேவுக்கப்பால் தென் படுவதில்லே. இவ்விதம் வாலஸ்கோட்டில் தாவரவகைகளும் விலங்கினங்களும் மாறுபடுவதைப்போலவே மனிதர்களும் மாறுபடுகிருர்கள். இந்தோனேஷ்யாவின் அடிப்படை இனத்தைச் சார்ந்தவர்களான மலாய்கள், சற்றுத் தள்ளிக் கிழக்கே வாழும் 'மேலனேசிய, மைக்ரோனேசிய' தீவுக்காரர்களேக் காட்டிலும் மெல்லிய தோலுடையவர்கள், குணத்திலும் மாறுபட்டவர்கள்.

பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில் இந்தோனேஷ்யா பெட்ரோல், ரப்பர், தகரம் இன்னும் ஏனேய பல இயற்கைச் செல்வங்களேப் பெற்று உலகின் வளமிக்க நாடுகளில் ஒன்ருகத் திகழ்கிறது. சமயச் சார்பில் பார்க்கும் பொழுது இந்தோனேஷ்யா உலகின் மிகப்பெரிய முஸ்லீம் நாடாகத் திகழ்கிறது. ஆயிரக்கணக்கான நெடுங்கல் தொலேவு பிரித்து வைத்த போதிலும் தொழுகையின் போது இந்தோனேஷ்யர்கள் தங்கள் கண்களே 'மெக்கா' வின் பக்கமே திருப்புகிருர்கள்.

இவ்விதம் இந்தோனேஷ்யா பல துறைகளில் சிறப்புற்றிருந்த போதிலும், அது பல நூற்ருண்டு காலமாக விந்தையான முறையில் வெளியுலகிலிருந்து ஒதுங்கியே வாழ்ந்தது. கப்பலும், விமானமும் எளிமைமிக்க போக்குவரத்துக் கருவிகளான பிறகும் கூட ஒரு துணிகரமான வழிப்போக்கர், மிகுந்த துன்பங்களுக்கிடையே பயணம் செய்யத்தக்க ஒரு துணேவழியாகவே இந்தோனேஷ்யா விளங்கிற்று. ஏன் இன்றும் கூட என்ன நடக்கிறது? உலகம் முழுதும் சுற்றிவரும் கப்பல்கள் செய்வதென்ன ? அவைகள் இந்தோனேஷ்யாவைத் தங்கள் பயணத்திட்டத்தில் சேர்த்துக்

கொண்டபோதிலும் கூட, தங்களுடன் பயனம் செய்வோரை பாலித்தீவில் சில நாட்கள் தங்க வாய்ப்பளிப்பதோடு மன நிறைவு அடைந்து விடுகின்றன. மற்றப்படி முறையற்ற தன்மையிலே ஏனைய தீவுக் கூட்டத்தைப் பொருட் படுத்தா தமைகின்றன.

'டச்சு கிழக்கிந்தியத் தீவுகள்' என்று முன்பு அழைக்கப்பட்ட இந்தோனேஷ்யாவைக் குறித்து, ஏராளமான நூல்கள் கடந்த காலத்தில் டச்சுக்காரர்களால் எழுதப்பட்ட போதிலும், இவைகளில் வெகு சிலவே ஹாலந்துக்கு வெளியே படிக்கப்பட்டும். பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டும் உள்ளன. எப்போதாவது இந்தோனேஷ்யாவின் சிறு கதை ஒன்று ஏதாவதொரு மேலே நாட்டுச் சிறு இலக்கிய இதழில் வெளியாகும், அல்லது யாராவது சில அயலவர்கள் தங்களது விரைவு மிக்கச் சுற்றுப் பயணத்தின்போது தாங்கள் கண்டவைகளைப்பற்றிப் பயணக் கட்டுரைகள் எழுதுவார்கள். இந்த அரை குறையான செய்திகளைத் தவிர, பெரும்பாலான அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் இந்தோனேஷ்யாவைக் குறித்து எதுவும் தெரியாதிருந்தார்கள். அவர்களுக்கு ஓரளவு தெரிந்திருந்ததெல்லாம் சின்னஞ்சிறிய பாலித் தீவைப் பற்றித்தான்.

நான் இருமுறைகள் இந்தோனேஷ்யாவிற்குச் சென்றிருக்கிறேன். ஒன்று 'படேவியா' என்று அழைக்கப்பட்ட ஜாகர்தாவில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் இருந்தபோது. இரண்டு, புரட்சி நடைபெற்று இப்போது ஜனாதிபதியாக உள்ள சுகர்னோ ஒரு தீவில் சிறை வைக்கப் பட்டிருந்தபோது. ஆனால் இன்று இந்தோனேஷ்யா தன்னாட்சி பெற்று, தனது நல்வாழ்வைத் தானே முடிவு செய்து கொள்ளும் தலைமை பெற்றுவிட்டது.

பிரிட்டன் போர்னியோவின் ஒரு பகுதியை இன்னும் பிடித்துக் கொண்டிருக்கலாம், டிமூரில் பாதி போர்ச்சுக் கீசியர்களிடம் இருக்கலாம், டச்சுக்காரர்கள் தொடர்ந்து நியூகினியில் (மேற்கு இரியன்) குந்திக் கொண்டிருக்கலாம், எனினும் இன்று உலகியலில் இந்தோனேஷ்யா தன்னுட்சியுடன் தன்னிச்சைப்படி செயல்படுகிறது. தனது உறுப்பினர்களை ஐக்கிய நாடுகள் அவைக்கு அனுப்பி வைக்கிறது, பிற நாடுகளுக்கு வாணிப ஒப்பந்தங்கள் செய்து கொள்வதில் நேரடியாகவே சொல்லடல்கள் நடத்துகிறது. இன்னும் சென்ற ஆண்டு ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் வரலாற்றுப் புகழ் பெற்ற பாண்டுங் மாநாட்டைத் தனது மண்ணில் நடத்த முன்னின்று ஏற்பாடு செய்தது.

இவ்விதம் இந்தோனேஷ்யாவின் நிலைமை வெகுவாக முன்னேற்ற மடைந்த நிலையில், அங்கு மகிழ்ச்சியையும் பூரிபபையும் எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்தபடியே அங்கே உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கண்டேன். ஆனால் இந்த நம்பிக்கை; கவலை, உட்பகை, முரண்பாடு முதலியவற்றால் சூழப்பட்டிருப்பதையும் பார்த்தேன். முழு நிறைவு என்னும் நிலை இன்னும் அங்கு ஏற்பட வில்லை. இந்தோனேஷ்யா மிகவும் பெருமிதமும் நிறைவும் பெற்றிருந்த காலம் புரட்சி உச்சக்கட்டம் அடைந்திருந்த காலம் என்று சொல்லவேண்டும். இந்தக் காலக் கட்டத்தில்தான் பல நூற்றாண்டுகளில் இல்லாதபடி மக்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்தார்கள். தவிர்க்க முடியாத தன்னுரிமை எழுச்சியை ஏற்றுக் கொள்ள மனமில்லாத ஒரு சில மரமண்டைகளைத் தவிர ஏனைய

எல்லா உள்ளங்களுமே மிகுதியாக ஒன்றுபட்டன. ஒவ்வொருவர் எண்ணத்திலும் கருத்திலும் எந்தச் சிக்கல் பற்றியும் தடுமாற்றமில்லாத தெளிவு இருந்தது. ஆனால் புரட்சி வெறியும் தன்னுரிமை எழுச்சியும் தணிந்து விட்ட பிறகு, இந்தோனேஷ்ய மக்களிடையே ஒரு வித உள்ளத் தளர்ச்சி ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. எனினும் இத் தற்காலிக நம்பிக்கையின்மை உணர்வுக்கு இந்தோனேஷ்யர்களின்பால் எவர்தான் இரக்கம் காட்டாமல் இருக்கமுடியும்? 'வாய்மைதவறாத எதிர்க்கட்சி' (Loyal Opposition) யின் கொள்கைகளை எதிரொலிக்கும் சோஷலிஸ்ட் தலைவரான சுடான் ஜாரீர் (Sutan Sjahrir) இந்தத் தொகுப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார் அல்லவா? அதிலே நாம் என்ன காண்கிறோம்? தன் பழக்க அறிவு இல்லாத ஒரு இளம் நாட்டின் மீது தாக்குப்பிடிக்க முடியாத பொருள்நிலைத் தொழில் நுட்பத் துன்பங்கள் நிறைந்த எத்தகைய தொரு சுமை சுமத்தப்பட்டுள்ளது என்பதைப் பார்க்கிறோம். இதையேதான் உதவி ஜனாதிபதி டாக்டர் ஹட்டா பொருள்நிலைத்தன்மை பற்றித் தந்துள்ள படப்பிடிப்பிலும் கூடக் காண்கிறோம். இந்தோனேஷ்யாவில் டச்சுக்காரர்கள் நெடுகிலும் ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார்கள். அதாவது மக்கள் நெருக்கமுள்ள தங்கள்நாட்டில் எல்லோருக்கும்வேலைக்கு வாய்ப்புகள் கொடுக்க முடியாத நிலையில், இந்தோனேஷ்யாவிலே தொழில் நிலையங்களிலும், அரசாங்கத்திலும் உள்ள எல்லா முதன்மையான உயர் நிலைகளையும் தங்கள் நாட்டவர்களுக்கே ஒதுக்கி வைத்தார்கள். இதனால் இந்தோனேஷ்யா தன்னாட்சிப் பொறுப்பை ஏற்றதும் செயலாட்சித் துறையில் பெரும் ஆள் பஞ்சத்தை எதிர் நோக்க வேண்டிவந்தது. இந்தப் பஞ்சம்

எவ்வளவு கடுமையானது என்பது பற்றி எனக்குச் சில விவரங்கள் கொடுக்கப்பட்டன. வேளாண்மைத் துறை அமைச்சர் அலுவலகம் முழுவதிலுமே ஒரே ஒருவர்தான் பி. எஸ். பட்டம் பெற்றிருக்கிருர். டாக்டர் பட்டம் பெற்ற எவருமே இல்லே. 8 கோடி மக்களின் மருத்துவத் தேவையை இரண்டாயிரத்துக்கும் குறை வான டாக்டர்கள்தான் நிறைவுறச் செய்யவேண்டும். ராணுவத்திலோ தகுதிவாய்ந்தவர்கள் வேண்டிய அளவு கிடைக்காததால் சில நேரங்களில் கீழ் மட்டத்தி லுள்ள 'கார்போரல்' கள், 'இரண்டாவது லெப்டி னென்டு'கள் முதலியோர் ஒரே அடியாக மேலே தூக்கிவிடப்பட்டு 'ஜெனரல்களாக' அமர்த்தப்படும் நிலே ஏற்பட்டுள்ளது.

இவ்விதம் முந்திய ஆட்சியாளர்களிடமிருந்து இந்தோனேஷ்யா தனதாக்கிக்கொண்ட இந்தக் குறை பாடுகளுக்கெல்லாம் மேலாக, டச்சுக்காரர்கள் இன் ஞெரு தீமை செய்தார்கள். அதாவது தாங்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு விலேயாகவும், தங்க ளது பொருள்நிலே அமைப்புத் திடீரென்று சீர்குலேந்து விடாமல் தடுக்கவும் இந்தோனேஷ்யாவின் மீது கட்டுப் படுத்தப்பட்ட சில ஒப்பந்தங்களேத் திணித்தார்கள். இந்த ஒப்பந்தங்கள் அண்மையில் இந்தோனேஷ்யா வால் மறுத்து ஒதுக்கப்பட்டன. தொழில், கப்பல் போக்குவரத்து, பொருள்மனேகள், அயல் நாட்டுத் தொழில் தொடர்பு முதலிய துறைகளில் புதிய நாடு இன்னும் போதிய பலமும் திறமையும் அடைய வில்லே என்று கருதப்படுகிறது. இதேபோல வளர்ந்து வரும் மக்கள் தொகையின் வாழ்க்கை நிலேயை மேம்பாடடை யச் செய்யும் உணவு, மற்ருெரு கடுமையான சிக்கலாக இருக்கிறது. இன்று இந்தோனேஷ்யாவில் புதிய

பண்ணை முறைகளிலும் நீர்த்தேக்க முறைகளிலும் வெகுவாக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. என்ற போதிலும் தேவைக்கு மிகுதியாக உள்ள வேளாண்மைப் பொருள்களை அமெரிக்காவிடமிருந்து சிறிய அளவில் வாங்கச் சென்ற மார்ச் திங்களில்தான் ஒரு உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது.

தன்னாட்சி இந்தோனேஷ்யா ஏற்படப் பாடுபட்ட தலைவர்களில் ஒருவரான டாக்டர் எஸ். தக்தீர் அலிஸ் ஜாபானா (Dr. S. Takdir Alisjahbana) தமது கட்டுரையில் புதிய நாட்டிற்கு ஒரு ஒருமைப்பாடான உதவி செய்ய வல்ல பயனுள்ள மொழியைத் தோற்றுவிப்பதிலுள்ள துன்பங்களையும் இன்னும் பொதுமக்களுக்குக் கல்வி நலன்கள் செய்து தருவதில் உள்ள சில முதன்மையான சிக்கல்களையும் விளக்கியுள்ளார். இந்தோனேஷ்யச் சீன இனத்தைச் சேர்ந்தவரும் புகழ்படைத்த செய்தி இதழ் ஆசிரியருமான டான் எங்-கீ (Tan Eng-kie) என்வபர் சீனர்கள், அராபியர்கள், இந்தோ-ஐரோப்பியர்கள், மற்றும் இந்தோனேஷ்யாவில் இன்னும் தங்கியுள்ள டச்சுக்காரர்கள் முதலிய சிறுபான்மையோரின் நலன்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான சில நடுநிலைமை மிக்க திட்டங்களை விளக்கியுள்ளார்.

இந்தோனேஷ்யா நல்ல குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது; மிக உறுதியும் திடமும் கொண்ட ஒரு ஆற்றல், நாடெங்கும் செழித்து வளர்ந்து வருகிறது. மிகவும் துன்பம் மிக்க, கருமை படர்ந்த கட்டத்திலே இந்தோனேஷ்ய மக்களிடையே ஒரு துலக்கமிக்க ஒளி, சுடர் விட்டு நிற்கிறது. நாட்டை எதிர் நோக்கியுள்ள பணிகள் சிறப்பு மிக்கவை - பெரியவை. எனினும் இதற்

குள்ளாகவே நாடு சீரமைப்புப் பணியில் மிகுதியான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு புதிய சிறந்த சமுதாயத்தை உண்டு பண்ணுவதற்கான அடிப்படை அமைப்பு உருவாக்கப்பட்டு விட்டது. இனி நாளடைவில் மேலை நாடுகளின் இரக்கப் பார்வையோடும், துணை யோடும் இந்தோனேஷ்யா தனக் குரித்தான இடத்தைப் பெற்று, உலக நாடுகளின் அரங்கில் ஒரு முதன்மையான பங்கை மேற்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இந்தப் புதிய நாடு வளரவளர, நாம் இன்னும் நெருங்கி அதனிடம் வரமுடியும். அதனைப் பற்றி இன்னும் மிகுதியாகத் தெரிந்து கொள்ள முடியும்; பொருள்நிலையிலும், பண் பாட்டு முறையிலும், ஏன் அரசியல் முறையிலும் கூட, நாம் ஒரு நாள் அதனிடமிருந்து வளம்பெற முடியும்.

# 2. மாறும் உலகில் இந்தோனேஷ்யாவின் இடம்

எழுதியவர் :

அலி சாஸ்ட்ரோமிட் ஜோஜோ

(இந்தோனேஷ்யாவின் முன்னாள் முதலமைச்சர்)

எந்த ஒரு நாட்டின் அயல் நாட்டுக் கொள்கையும் எண்ணியது எண்ணியபடி எல்லாம் முடிவு செய்யக் கூடியது அல்ல; எளிதாகவும் விரைவாகவும் மாற்றக் கூடியதுமல்ல, வேண்டுமானால் அயல் நாட்டுக் கொள்கையின் நயமிக்க நடவடிக்கைகள் (Tactics) நெகிழ்ந்து கொடுப்பதாக இருக்கலாம்; அந்தக் கொள்கையைச் செயல் நடத்தக்கூடிய அரசியல் சூழ்ச்சித் திறம் (diplomacy) சற்று இணங்கிப் போகக்கூடியதாக இருக்

கலாம். ஆயினும் அதன் சாரத்தில், நடைமுறையில் எந்த ஒரு நாட்டின் அயல் நாட்டுக் கொள்கையும் சில குறிப்பிட்ட நிலேயான நிகழ்ச்சிகளோடு இசைந்ததாகவே இருக்கவேண்டும். இன்றைய வேறுபட்ட உலகில் மாருது நிலேயாக இருக்கின்றவைகளிலே, ஒரு நாட்டின் நில அமைப்பு, நிலப்பொருளியல் உண்மை, அந்த நாட்டு மக்களின் பண்பு, உயிர் நிலே அல்லது அவர்களின் நாட்டுப்பற்று, அந்த நாட்டின் வரலாறு அதன் கடந்த காலப் பழக்க வழக்கங்கள் முதலியனவும் அடங்கும்.

ஒரு காலத்தில், மாருது என்று எண்ணப்பட்டவையும் சில வேளேகளில் மாறவும் செய்கின்றன. அப்போது அதற்கேற்ப புதிய முறைமைகளும் புதிய உருவங்களும் பின்பற்றப்பட வேண்டும்; அயல் நாட்டுக் கொள்கை புதிய முறையில் கையாளப்படவேண்டும். இதனேத்தான் அமெரிக்காவினிடத்தில் பார்க்கிருேம். இரண்டாவது உலகப்பொரும் போருக்குப் பிறகு ஏனேய தொழில் வல்லரசுகள் வெகுவாக ஒடுங்கிப் போயின; அமெரிக்கா மட்டும் மிகப்பெரிய தொழில் ஆற்றல் உடையதாகத் திகழ்ந்தது. ஆக, இத்தகைய ஒரு மாற்றம் ஏற்பட்ட காரணத்தால் அதற்கிணங்க ஒரு புதிய அயல் நாட்டுக்கொள்கையை அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. ஆனுல் ஒன்று, முன் முறைமையோ, முன் நடைமுறைப் பழக்கமோ இல்லாத ஒரு புதிய வெளிநாட்டுக் கொள்கை, அதன் நிலேயான உருவை அடைவதற்கு முன்னதாகப் பல தேர்வுகளுக்கும், மாற்றங்களுக்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது.

1945ல் இந்தோனேஷ்யா தன்னுட்சி நாடாகத், தன்னுரிமை நாடாகப் புதிய உலகில் நுழைந்தது. அதற்கு

வெளிநாட்டுக் கொள்கையில் முன் முறைமை கிடையாது. ஏனென்றால் 300 ஆண்டுகளுக்குக் கூடுதலாக ஒரு குடியேற்ற நாடாக—தனது உண்மையான குரலை எதிரொலிக்க முடியாத ஒரு நாடாக அது இருந்தது. மேலும் அதனை வழி நடத்திச் செல்வதற்கு அண்மைக் காலப் பழக்கங்களும் இல்லை. ஆயினும் குடியேற்ற உரிமை ஆட்சிக்கு முன்பு இந்தோனேஷ்யாவிற்கு ஒரு நீண்ட நெடுங்கால அனைத்துலகத் தொடர்பு முறைமையும், வரலாறும் உண்டு. குடியேற்ற அடிமைத் தனத்திற்கு முன்னர், உலகில் இந்தோனேஷ்யாவின் நிலை சில வகைகளில் இப்போதுள்ளது போலவே இருந்தது. அதாவது பல்வேறு சிறப்பு மிக்க பண்பாடுகளைத் தன்னுள் பெற்றிருந்தது; இந்தியா, சீனா, தென்கிழக்கு ஆசியா மற்றும் வெகு தொலைவிலுள்ள அராபிய நாடுகள் முதலியவற்றிலிருந்தெல்லாம் மக்கள் வந்து குடியேற இடம் கொடுத்தது; இன்னும் அனைத்துலகத் தொழில் நிலைக்கு ஒரு நடுவிடமாகவும் விளங்கிற்று. ஆக இதிலிருந்து ஒரு செய்தி தெளிவு: அதாவது 17–18–1945ல் இந்தோனேஷ்யாவின் தன்னாட்சி அறிவிப்பில் முடிந்த பல நூற்றாண்டுக்கால வரலாற்றிலிருந்துதான் எனது நாட்டின் கொள்கைகள், பொருள் நிலை முன்னேற்றத்திற்கான வழி முறைகள், ஐக்கிய நாடுகள் அவையில் எதிரொலித்த அதன் அனைத்துலகக் கண்ணோட்டம் முதலியனவெல்லாம் பிறந்து வளர்ந்தன எனலாம். இந்தோனேஷ்யாவின் நாட்டுப்பற்றும் விழிப்பும் மிகவும் வலிமைவாய்ந்தது, உறுதியான அடிப்படை கொண்டது. இதனால்தான் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகக் குடியேற்ற நாட்டு ஆளுகைக்குட்பட்டிருந்த போதிலும், அது பிறகு தப்பிப் பிழைக்க முடிந்தது.

எனவே நடைமுறையில் இந்தோனேஷ்யாவின் அயல் நாட்டுக் கொள்கையின் சாரம் குடியேற்ற ஆளுகைக்கு எதிர்ப்பும், அமைதிக்குச் சார்பும் காட்டுவதுதான்.

பெரும்பாலான ஆசிய ஆபிரிக்க நாடுகளைப் போலவே எங்களுக்கும் குடியேற்ற உரிமை ஒரு விந்தையானதன்று, எப்போதோ நடைபெற்ற கதைகள் அல்ல. குடியேற்ற உரிமையை நாங்கள் அறிந்திருக்கிறோம். அதன் நுகத்தடி எங்கள் மக்களின் முதுகுகளை அழுத்தி நின்றதை உணர்ந்திருக்கிறோம். எங்கள் குழந்தைகளின் உள்ளமும் உடலும் வளராதவாறு நசுக்கப்பட்டதை, பாழ்படுத்தப்பட்டதைப் பார்த்திருக்கிறோம். என் நாட்டின் ஒரு பகுதியான மேற்கு இரியன் (மேற்கு நியூகினி) இன்னும் குடியேற்ற உரிமை ஆட்சியின் இரும்புப் பிடியின் கீழ் இருக்கிறது. ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் குடியேற்ற ஆட்சி எங்கிருந்து வந்தாலும், எவரிடமிருந்து வந்தாலும் அதனை நஞ்சென வெறுப்போம், ஒதுக்குவோம், எதிர்ப்போம். ஆசியாவின் குடியேற்ற எதிர்ப்பு ஆற்றலை எவரும் குறைத்து மதிப்பிடக்கூடாது; குடியேற்ற ஆட்சி எதிர்ப்பையும் பொதுவுடைமை (communism)யையும் ஒன்றாகப் பார்க்கக்கூடாது. அப்படிச் செய்வது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதாகும். பொதுவுடைமை எதிர்ப்பும் குடியேற்ற ஆட்சிச் சார்பான ஒன்று என்று நினைப்பது தவறு. இதே போலத்தான் தனியரசு ஆட்சி எதிர்ப்பும், குடியேற்ற ஆட்சி எதிர்ப்பும், பொதுவுடைமையும் ஒரேமாதிரியானவை என்று எண்ணுவதும் தவறு.

இன்று இந்தோனேஷ்யா குடியேற்ற உரிமையை வன்மையாக எதிர்க்கிறதென்றால், அமைதிக்காக அரும் பெரும் தொண்டு செய்கிறதென்றால், இதற்குத் தெளிவான பொருளியல் உண்மையான அடித்தளங்கள் உண்டு. 'பின்னேகா துங்கல் இகா' என்பதே எங்கள் நாட்டின் குறிக்கோளாகும். "வேற்றுமையில் ஒற்றுமை" என்று இதற்குப்பொருள். ஒற்றுமையைப் பற்றிய இந்தக் கண்ணோட்டம் எங்கிருந்து தோன்றியது? எங்களது தொன்மையான பண்பாட்டின் வழிவந்த சிலவகை நம்பிக்கைகளிலிருந்தே இந்தக் கண்ணோட்டம் பிறந்தது என்று சொல்லவேண்டும். எங்களது அரசியல் சட்டத்தில்கூட இவைகள் 'பஞ்சசீலம்' அல்லது 'ஐந்து கொள்கைகள்' என்று குறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகளை உருவாக்கியதில் இஸ்லாமும் ஓரளவு துணை செய்தது என்பதை மறுப்பதற்கில்லை. இனி இந்த ஐந்து கொள்கைகள் என்ன என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்:

1. கடவுள் நம்பிக்கை. அனைவருக்கும் சமய உரிமை.

2. மனிதப் பற்று அல்லது அனைத்துலக அமைப்பு. உலகம் முழுவதிலுமுள்ள மனித இனத்திடம் மதிப்பு வைத்தல்.

3. நாட்டுணர்ச்சி. எல்லா இந்தோனேஷ்யாவின் ஒற்றுமையில் நம்பிக்கை.

4. மக்களாட்சி. தேர்ந்தெடுத்த அரசுமூலம் மக்களுக்கு எல்லா உரிமைகளும் என்னும் கொள்கையைச் செயற்படுத்தல்.

5. சமூக நெறி. நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் சமூக, பொருளியல்நிலை, அரசியலில் ஒத்த உரிமை.

எங்களது பண்பாட்டு முறைமையின் வழிவந்த இன்னொரு ஆற்றல் பொருந்திய அடிப்படைக் கண்ணோட்டம் உண்டு. இது 'ருகுன்' (Rukun) என்று அழைக்கப்படுகிறது. நடுநிலை உணர்வு என்று இதற்குப்பொருள். அதாவது சச்சரவுகள் ஏற்படாமல் சினம் வெறுப்புகளுக்குச் சிறிதும் இடம் கொடுக்காமல், ஒரு முறையான பரிகாரத்திற்கு, வேறுபாடின்மைக்கு வழிகான வேண்டுமென்பதே இதன் குறிக்கோள். இந்த அடிப்படையில் தான் எந்தச் சிக்கலைப் பற்றியும் ஐ. நா. விலோ அல்லது வேறு எங்குமோ சொல்லாடல்கள் நடத்துவதில் நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம்.

இன்று உலகில் இந்தோனேஷ்யாவின் நிலை என்ன? தகுதி என்ன? 'ருகுன்' மற்றும் அது போன்ற 'கோடோன்ரோயாங்' (gotongroyong) அதாவது ஒருவருக்கொருவர் உதவி செய்தல் முதலிய கொள்கைகளைக் காட்டுவதில் எங்கள் நாட்டின் விருப்பங்களை நாங்களே நிறைவு செய்ய முயன்று கொண்டிருக்கிறோம்; இன்னும் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளில் எங்களுக் குரித்தான பங்கைச் செய்து கொண்டிருக்கிறோம்.

மேலே கூறிய ஐந்து கொள்கைகளில் அரசியல் நெறி விளக்கப்பட்ட முறையிலிருந்து ஒரு செய்தியை எளிதில் புரிந்துகொள்ளலாம். அதாவது உலகிலுள்ள நாடுகள் அனைத்துடனும் நல்லுறவுடன் நட்புறவும் கொள்வதையே இந்தோனேஷ்யா தனது வெளி நாட்டுக் கொள்கையின் ஒரு அடிப்படையாக வைத்துக் கொண்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

முதலில் எங்கள் அண்டை அயல் நாடுகளோடு நட்புறவு ஏற்படுத்திக்கொள்ள நாங்கள் முயன்று வருகிறோம் என்பது உண்மையே. ஆனால் இந்த முயற்சி ஆசியா ஆப்ரிக்காவோடு மட்டும் நின்றுவிடக் கூடியது அல்ல. ஐ. நா. அவையின் ஒரு உறுப்பினர் என்கிற வகையில், உலகின் எந்த நாட்டிடமும் ஓரம் கட்டுவதை நாங்கள் விரும்பவில்லை.

இன்று பொருள்நிலை அமைப்பிலும், அரசியல் நிலையிலும் எங்களை வலுவும் வளமும் படுத்திக்கொள்வதற்கு எங்களது நேரத்திலும், ஆற்றலிலும் மிகப் பெரும் பகுதியைச் செலவிட வேண்டிய நிலையிலிருக்கிறோம். உலக அமைதி என்பது எங்களைப் பொறுத்தவரையில் சில நாடுகளைப்போல நடுநிலை நோக்கங்களால் மட்டும் உந்தப்பட்டதல்ல. எங்களுக்கு இவற்றைவிடப் பழக்க முறைமையான பலமான காரணங்கள் உண்டு. எங்களது நாட்டைச் சீரமைப்பதிலிருந்து நாங்கள் ஒரு விநாடிகூட விலகி நிற்க முடியாது. எங்கள் புதிய நாட்டைக் கட்டிவளர்த்து உருவாக்கும் வேலை மிகவும் பெரியது—சிறப்பானது, மிக மிக விரைவானது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் எதுவும் குறுக்கிட நாங்கள் இடமளிக்க மாட்டோம். இன்றைய நிலையில் இன்னொரு உலகப் பெரும் போர் என்பது, சொந்தத் தன்னாட்சிபற்றிய எங்களது இன்பக் கனவுகளையெல்லாம் தவிடுபொடியாக்கிவிடும்; சொல்லொண்ணா தியாகங்கள் செய்து அண்மையில் நாங்கள் மிக அருமையாய் அடைந்தவற்றை யெல்லாம் இழக்கும்படி செய்து விடும். எனவேதான் அமைதியைப் பாதுகாப்போம் என்ற உறுதி கொண்டு, எங்கள் வெளிநாட்டுக் கொள்கையை அமைத்துக் கொண்டுள்ளோம்.

உலகில் எல்லா நாட்டு மக்களுமே அமைதியை விரும்புகிறார்கள் என்று நான் கருதுகிறேன். பிற நாடுகள் அனைத்தின் அரசுகளும்கூட இதே குறிக்கோளைத்தான் எதிரொலிக்கின்றன. ஆனால் தீவினைப் பயனாகச் சில நாடுகள், முறையான உடன்பாட்டிற்குக் கட்டுப்பாடுகள் வகுத்துள்ளன; இவற்றை மற்ற நாடுகள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் எந்நேரமும் ஒரு பேரிடுக்கண் நிலவி நிற்கின்றது. அதாவது உலகத்திற்கு நன்மை யான, இன்றியமையாததான அமைதி குறித்து இன்று எழுந்துள்ள முரண்பட்ட விளக்கங்கள் எங்கே, எல்லா நாடுகளையும் ஒரு பேரழிவில் இடறிவிழச் செய்து விடுமோ என்ற கவலையை உண்டு பண்ணியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் இந்தோனேஷ்யாவின் நிலை வெகு தெளிவானது. இன்னொரு உலகப்போர் ஏற்பட வழிகோலக்கூடிய பதற்ற நிலைமையையும் நெருக்கடி யையும் தணிக்க எனது நாடு தன்னால் இயன்ற எல்லா வற்றையும் செய்யும். அமைதியை ஒரு ஆரவாரமாகவோ அல்லது போருக்குப் பதிலாக விரும்பக்கூடிய ஏதோ ஒன்றாகவோ நாங்கள் கருதவில்லை; மாறாக அமைதி மிகவும் விலை உயர்ந்தது, ஆகவே அது கட்டாயம் வேண்டும் என்று கருதுகிறோம். மனித முயற்சிக்கு உட் பட்டதையெல்லாம் செய்து அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்று என் நாட்டு மக்களும் அரசினரும் எண்ணுகிறார்கள். இந்தத் திசை வழியிலேயே ஐ. நா. வுக்கு உள்ளும் வெளியிலும் எப்பொழுதுமே பணியாற்றி வந்திருக்கிறோம்; இனியும் தொடர்ந்து பணியாற்று வோம்.

எனது நாடு ஒரு தன்னிச்சையான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதற்கு இதுதான்

காரணம். ஆனால் உலக நிகழ்ச்சிகளில் நடுநிலைமைக் கொள்கையைக் கைக்கொள்வது போன்றதல்ல இந்த வெளிநாட்டுக் கொள்கை. இந்தக் கொள்கையானது நாடுசீரமைப்பு முயற்சிகளால் சிறப்பாக உறுதிப் படுத்தப்படுகிற நாட்டின் நலன்களையே அடித்தளமாகக் கொண்டதாகும்.

இந்த வெளிநாட்டுக்கொள்கையை நாங்கள் விளக்கு கிறபொழுது, இது ஒரு தன்னிச்சையான, செயல் முறை மையான கொள்கை என்று சொல்லுகிறோம். இது திண்ணமாக நடுநிலைமையின்பாற்பட்டதல்ல. அதற்குப் பதில் எந்த வல்லரசுக் குழுவிலும் சேராத ஒரு கொள்கை. 'நடுநிலைமை' என்னும் சொல், போர் நிகழும் காலத்திற்கு மட்டும்தான் பொருத்தமாக இருக்கமுடியும். அந்தநேரம் இது போரில் ஈடுபடுவதையோ அல்லது ஒதுங்கி நிற் பதையோ குறிக்கலாம். இதைத்தவிர எங்கள் குறிக் கோளான தன்னுரிமை ஆட்சிக் கொள்கைக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. நாங்கள் விரும்புவதெல் லாம் அமைதியைப் பலப்படுதக்கூடிய, நிலை நிறுத்தக் கூடிய ஒரு தன்னிச்சையான வெளிநாட்டுக்கொள் கையே.

ஒருவருக்கொருவர் தரும் மதிப்பின் அடிப்படையில் எழும் இத்தகைய ஒரு வெளிநாட்டுக் கொள்கையினால் பயனுள்ள விளைவுகள் என்ன? எனக்கேட்டால், முதலில் எல்லா நாடுகளோடும் நாங்கள் நட்புறவு கொள்ள முடி கிறது; அடுத்தபடியாகப் பகைமைகளை நீங்கச்செய்து, கட்சி எதிர்க்கட்சி அமைவதால் ஏற்படக்கூடிய அழிவி லிருந்து எங்களைத் தற்காத்துக் கொள்ளமுடிகிறது. ஆனால் இது மட்டும் போதாது. ஒரு தன்னுரிமையான கொள்கைதான் ஒரு எதிர்மறையான கொள்கையாக

இருக்க முடியும். ஆக, உலகில் இரண்டு பெரிய வல்லரசுக்குழுக்கள் ஏற்படுத்தியுள்ள நெருக்கடிகளை மட்டுப்படுத்துவதிலும், அமைதியைப் பாதுகாப்பதிலும் ஊக்கத்தோடும், சுறுசுறுப்போடும் செயலாற்றுவது இன்றியமையாமையாகும்.

இந்தோனேஷ்யக் குடியரசுக்கு அரசியல், ஒழுக்கத் துறைகளுக்குரிய இருக்கையாக விளங்கும் ஒரு அரசியல் மெய்ம்மையின் பின்னணியிலிருந்தே இந்தத் தன் இச்சையான; செயல் முறையான கொள்கை விரிவடைந்து வந்திருக்கிறது. இன்று எனது நாடு இந்தப் பிளவுபட்ட உலகில் எந்தக் குழுவிலும் சேர மறுக்கின்றதென்ருல், அதற்குக்காரணம் உண்டு. அதாவது ஏற்கனவே உலகில் ஒத்த வலிமை நிலை இல்லை. இந் நிலையில் ஏதாவது ஒரு குழுவில் சேருவது இந்த ஒத்த வலிமையற்ற நிலையை மேலும் கேடுறச் செய்யும் என்று நாங்கள் நம்புகிருேம். அதனுல்தான் எந்தக் குழுவிலும் சேர மறுக்கிருேம். இப்போதைய மகிழ்ச்சியற்ற உலக நடைமுறை நிலையில் யாரையும் ஏற்றிப் பேசுவதோ, அல்லது தூற்றிப்பேசுவதோ எங்கள் நோக்கமல்ல. ஆனுல் ஒன்றை மட்டும் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தோனேஷ்யா புதிதாகத் தான்பெற்ற விடுதலையையும் தன்னுட்சியையும், வேறெதையும் விட மேலாக, உயர்வாக, உயிருக்குயிராக மதிக்கிறது. இத்தகைய தன்னுட்சி உரிமையை நசுக்க, சீர்குலைக்க எந்தப் பகுதியிலிருந்து முயற்சி நடந்தாலும் அதனை எனது நாடு தன் முழு ஆற்றலையும் கொண்டு எதிர்த்துப் போராடும்.

இங்கே மிக முதன்மையானதொரு செய்தியைச் கவனித்தல் வேண்டும். இந்தோனேஷ்யர்களாகிய நாங்கள்

அண்மையில்தான் குடியேற்ற ஆட்சி இருளிலிருந்து விடு பட்டு, நாட்டு விடுதலை பெற்ேறோம். இங்கிலையிலே மீண்டும் அந்தக் குடியேற்ற ஆட்சிக் காரிருளுக்கு ஒரு போதும் திரும்போம். இந்த உண்மை இந்தோனேஷ்யா வுக்கு மட்டுமன்றி; ஆசியா, ஆப்ரிக்கா முழுவதற்குமே பொருந்துமென்பதை நாளறிவேன். எனவே, இது உலக நாடுகள் அனைத்திற்குமே ஒரு முதன்மையான குறிக் கோளாகவேண்டும்.

இருபெரும் குழுக்களுக்கிடையே போராட்டம் நடைபெறும் இடம் ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கு வந்து விட்டது. கெடுபிடிப்போர் நம்மீது திணிக்கப் பட்டுள்ளது—ஆசியாவின் சில இடங்களில் சுடும் போர் கூட நடக்கிறது. சண்டை நடக்காதபடி தடுக்கவும் அப்படி எங்காவதுபோர் நெருப்பு மூண்டால் அதனை அணைக்கவும் ஆசிய மக்கள் தங்களால் முடிந்ததத் தனையும் செய்துள்ளார்கள். 1954ல் கொழும்பில் நடை பெற்ற ஐந்து ஆசிய முதலமைச்சர்களின் மாநாடு, அப் போது இந்தோ—சீனு பற்றி விவாதம் செய்து கொண் டிருந்த ஜெனிவா மாநாட்டின் மீது நேரடியான, உடனடி யான பலனை விளைவித்தது. அங்கே ஆசிய நாடுகள் தலை யிட்டன, அதிலும் மிக வெற்றிகரமாகத் தலையிட்டன. இதிலிருந்து ஆசிய நாடுகளைக் கலந்து கொள்ளாமல் ஆசியாவின் எந்த ஒரு சிக்கலிலும் இனித்தெளிவு காண முடியாது என்பதனை உலகம் தெரிந்து கொண்டது. உலக நாடுகளின் நடவடிக்கைகளில் இது ஒரு மிக முக்கிய திருப்பு முனை என்பதில் ஐயமில்லை.

இது ஒரு திரும்புமுனை மட்டுமே. நாம் செல்ல வேண்டிய பாதை இன்னும் நெடுந்தொலைவுடைய

தாகும். கொழும்பு, ஜெனிவாக் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டியிருக்கின்றன. ஆசிய நாடுகளுக்கு, ஒரே விதமான சிக்கல்களும், நம்பிக்கைகளும், பயங்களும் கொண்ட நண்பர் ஆப்ரிக்க நிலப்பரப்பில் இருக்கிறார்கள். ஆகவே நம்மிடையே ஒரு நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படவேண்டும். இந்தகையதொரு ஒத்துழைப்பு அமைதிக்கான பேராற்றலை மிக வலுப்படுத்தவும் உரப்படுத்தவும் உதவும்.

தனித்திருப்பதின் வலுவைவிட ஒன்றுபட்டிருப்பதால் விளையும் வலு எப்போதுமே சிறப்பானது, உயர்வானது. இந்தவகையில் ஆசிய–ஆப்பிரிக்க ஒற்றுமையின் வலு, அரசியல் முறைமையாலும், பண்பாட்டின் முறைமையாலும் மிகப் பெருவலுவாக இருக்கும், அதன் படைபலம் சிறியதாக இருந்தாலும் கூட அது உலகின் மிகப் பெரியதொரு பேராற்றலாகத் திகழும்; அதனுடைய வலிமை அமைதியைக் கட்டிக் காப்பதற்குப் பயன்படும். ஆக, வீறுகொண்டு எழுந்துள்ள ஆசிய ஆப்ரிக்காவின் குரலை இனி எவராலும் புறக்கணிக்க முடியாது.

இன்றைய சூழ்நிலையில் ஆசிய ஆப்ரிக்க நாடுகளிடையே நல்லெண்ணத்தையும், நட்புறவையும், சிறந்த அண்டை அயல் உறவையும் வளர்த்து வளப்படுத்த வேண்டியது மிக முதன்மையான பணியாகும். இதனால் சிறப்புமிக்க பலன்கள் கிடைக்கப்பெறும். அதிலும் குறிப்பாக உலக நாடுகள் அனைத்திடமும் அமைதியையும் ஒத்துழைப்பையும் உறுதியாக நிலை நாட்டுவதில் இந்த நாடுகள் தனிப்பட்ட முறையிலும் கூட்டு முறையிலும் எந்த அளவுக்குத் தங்கள் பங்கையாற்ற முடியும் என்பதைத் திட்டவட்டமாகக் கணக்கிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் மிகவும் உதவி செய்வதாகவும் இருக்கும்.

1955ல் பாண்டுங் மாநாடு நடைபெற்றது அனைவருக்கும் தெரியும். ஆசியா ஆப்ரிக்காவைச் சேர்ந்த 29 தன்னாட்சி நாடுகள் தங்களுடைய பொதுச் சிக்கலுடன் உலகச் சிக்கல்களையும் பற்றி உரையாடுவதற்காக வரலாற்றிலேயே முதல் தடவையாக இங்குக் கூடின. இவ்வாறு கூடிய இந்த மாநாடு உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டோரின் உறுப்பினரைக் கொண்டிருந்ததோடு, இன்றைய உலக நெருக்கடி பற்றிய தனது கவலை நிறைந்த கருத்துக்களையும் எதிரொலித்தது.

மேலும் இந்த மாநாட்டில் நாங்கள் ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொண்டோம்; நீண்ட காலமாக எங்களைப் பிரித்து வைத்திருந்த, செயற்கையான தட்டுத் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்தோம்; மேலும் உலக அமைதிக்கான பணியில் எங்களது ஒன்றுபட்ட வலுவை முன் வைத்தோம்.

இதனால்தான் இந்த முதலாவது ஆசியா—ஆப்ரிக்க மாநாடு மனித இனவரலாற்றில் சிறப்புமிகு நிகழ்ச்சியாக, பொன்னேட்டுப் பிரிவாகத் திகழ்கிறது. அதோடு இந்தோனேஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதிலும் தெளிவாக்குவதிலும் இந்த மாநாடு மிகப்பெரிய பங்காற்றியிருக்கிறது.

# 3. இறந்தவர்களுக்கான நடனம்

எழுதியவர் :

## பெப் வுயிக்

**காபுவாசு**க்கு ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள **புடுசிபாவு**க்கு **சாம்பான்** எனப்படும் சீனப் படகின் மூலம் நதியோடும் வழியாக ஒரு நாள் மாலை நாங்கள் திரும்பி வந்து கொண்டிருந்தபோது **டயாக்** வீட்டைப் பார்த்தோம். அது ஆற்றங்கரையில் ரப்பர் தோட்டங் களுக்கிடையே வானளாவி நின்றது. எங்கள் வழி காட்டி **புடுசிபாவு**வைச் சேர்ந்த **டெமாங்**; அவர் அந்த மாவட்டத்தின் உயர்நிலைத் தலைவர்களில் ஒருவர். டயாக் வகுப்பைச் சேர்ந்த அவர் தமது சொந்த மக்களை நன்கு அறிந்திருந்தார். எங்கள் சுற்றுப்பயணம் வீர ஆற்றல் களும், ஊக்கமுமிக்கதாக இருப்பதற்காக நாங்கள்

என்னென்ன பார்க்க விரும்புகிருேம் என்பதையும் உணர்ந்திருந்தார். ஆகவே அந்த வீடு அந்தப் பகுதி லேயே மிகப் பழமையானவைகளில் ஒன்று என்றும் சற்று நேரம் தங்கி அதனைப் பார்க்கலாம் என்றும் கூறினுர்.

வானத்தை நோக்கினேம். கருமேகங்கள் திரண் டிருந்தன. எந்த விநாடியும் மழை பெய்யும் போலிருந் தது. இன்னும் மணி ஐந்தாகவில்லை, ஆனல் அதற் குள்ளாகவே மரங்களுக்கடியில் உருவங்கள் மங்கலடை யத் தொடங்கி விட்டன. நீண்டு நிமிர்ந்து நின்ற அந்த வீடும் இந்த மங்கிய ஒளியில் கானகத்தோடு கானகமாக ஒன்ருகித் தோற்றமளித்தது.

நாங்கள் படகை நிறுத்திக் கரையேறினேம். எங்கள் முன்னே ஒரு சிறிய பாலம். இப்போது அந்தப் பாலத்தின் அடியில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கவில்லை. அதன் வழியாக அந்த வீட்டின் உயரமான வாசற் படிகளை நோக்கிச் சென்ருேம். புதுமையான பொறி இயல் திறமைக்கு அந்த வீடு ஒரு எடுத்துக் காட்டு. அதன் தளம் தரையிலிருந்து பன்னிரண்டு முழம் உயரத் திற்கு மேலே கனமான உத்திரங்கள் மீது எழுப்பப்பட் டிருந்தது; அதிலும் உயரமும் உறுதியும் கொண்ட மேற் கூரையைத் தாங்கும் வகையில் முன்னலும் பின்னலும் இன்னும் சற்று அதிகமாகவே உயர்த்தப்பட்டிருந்தது. தளத்தின் தரை முழுவதும் பலகையால் ப்ரவப்பட்டு அதன் மீது பாய் விரிக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய நானூறு முழ நீளமுள்ள அந்த வீடு இருபது அறைகளா கத் தடுக்கப்பட்டு, அவற்றில் இருபது குடும்பங்கள் வாழ்ந்தன. இந்த அறைகளுக்கு நேர் எதிராகப் பத்து முழ அகலமுள்ள ஒரு தாழ்வாரம் இருந்தது. இதுதான்

அந்த வீட்டில் வாழ்கின்றவர்கள் வேலை செய்யுமிடம், விளையாடுமிடம். இங்கே அவர்கள் வீட்டுப் பெண்கள் அழகான நார்ப் பாய் முடைந்தார்கள்; குழந்தைகள் ஓடியாடி விளையாடின; கோழிகளும் நாய்களும் சண்டையிட்டுக் கொண்டன; மேலும் இங்கேதான் பெரிய நடன நிகழ்ச்சிகள் கூட நடைபெற்றன.

நான்கு பெண்கள் இரண்டு பெரிய மண் பானைகளில் மர அகப்பைகளைக் கொண்டு எதையோ ஓயாது கலக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களது கொப்பூழுக் (தொப்புள்)குக் கீழே முழங்காலுக்கு மேலே கையகலத் துணி இருந்ததைத் தவிர ஏறக்குறைய அவர்கள் நிர்வாணமாகவே இருந்தார்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் அவர்கள் தலையில் முன்னிருந்து பின்புறமாக ஒரு சிவப்புத் துணியைக் கட்டியிருந்தார்கள். அதில் பறவைகளின் இறகுகளை ஏராளமாகச் சொருகியிருந்தார்கள். ஆக, உடலின் வேறு எந்த உறுப்புக்களையும் விடத் தலையை நன்றாக மூடி மறைத்திருந்தார்கள் என்று சொல்லலாம்.

மழை தூற ஆரம்பித்தது. ரப்பர் மரங்களுக்கிடையே காரிருள் கவிழ்ந்து நின்றது.

நூறு ஆண்டுகளுக்கு இரண்டே முறை மட்டும் தலைமுறை தலைமுறையாக நடைபெறும் ஒரு திருவிழாவிற்காகவே இப்போது இனிப்பான உணவுப் பொருள் தயாரித்துக் கொண்டிருப்பதாக அந்தப் பெண்கள் கூறினார்கள். அத் திருவிழா இன்னும் மூன்று நாட்களில் நடைபெறப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். பானையில் பாகு போன்றிருந்த எதையோ கலக்கிக் கொண்டே என்னுடைய இளம் தோழர்களான

**சாவே**யையும் **புர்பாடி**யையும் பார்த்து நகைத்தார்கள். அதோடு இந்த விழாவில் நாங்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

இதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம். இதன்படியே மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு பிற்பகலில் எங்கள் படகில் புறப்பட்டோம். கரையை நெருங்கும் போதே கொட்டும் கும்மாளமும் முரசொலியும் எங்கள் செவிகளிலே தாக்கி ரீங்காரம் செய்தன. படகுத் துறையும் மற்றும் நீண்ட பாலம் முழுவதும் இளந் தென்னங் கீற்றுகளாலான வளைவுகளாலும், தோரணங் களாலும், கொடிகளாலும் அழகுபடுத்தப் பட்டிருந்தன. பாலத்தின் பக்கத்தில் கொஞ்சம் நிலத்தில், கழிகளைக் கொண்டு சுற்றிலும் ஒரு வேலி அமைக்கப்பட்டிருந்தது. அதனுள்ளே பலியிடுவதற்காக நான்கு மாடுகளும், நான்கு பன்றிகளும், நான்கு வெள்ளாடுகளும் அடைக் கப் பட்டிருந்தன. நாங்கள் பாலத்திலிருந்து நேராக அந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அப் போது அங்கே அந்த வேலியைச் சுற்றிச் சுற்றி ஒரு விதச் சடங்குக் கூத்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு நாளுக்கு ஒரு முறை அந்த மக்கள் இக் கூத்தை ஆட வேண்டும். ஒவ்வொரு முறையிலும், சிறிவளவும் நகர முடியாதவாறு மிக நெறுக்கமாக வேள்விக்கான மிருகங் கள் அடைக்கப்பட்டிருந்த அந்த வேலியை ஒரு முறை சுற்றிவர வேண்டும்.

இவர்களுக்கெல்லாம் தலைமை பூண்டு கூத்தாடி ஞன், வயதால் கூனிக் குறுகிப்போன ஒரு குள்ளமனிதன். ஏதோ ஒரு தோல் நோயால் அவனது தோலெல்லாம் வெளுப்பாயிருந்தது. அவனது வலக் கையிலே **மாண்டாவ்** என்னும் அச்சம் தரும் தலைவெட்டி வாள்

இருந்தது. அதன் கைப்பிடி மனிதனது மயிரால் அழகு செய்யப்பட்டிருந்தது. அவன் தனது இடக் கையிலே ஒரு இளமையான மண்டை ஓட்டை வைத்திருந்தான். அதன் மூக்குத் துளைகளிலே தென்னங் குருத்துக்கள் திணித்துத் தொங்கவிடப்பட்டிருந்தன. இதனைக் காண்பவர்கள் அந்த வற்றி உலர்ந்த ஓடுகளில் 'கரு கரு' வென்று புதிய நீண்ட மீசை முளைத்துத் துளிர்த்து விட்டதோ என்று எண்ணுமாறு பேரச்சம் தரும் முறையில் தோற்றமளித்தது.

அந்தக் கிழவனுக்குப் பின்னால் வயது வந்த ஆண்கள் கூட்டம் கூத்தாடிய வண்ணம் வந்தது. அவர்களிலே சிலர் மரவுரியாலான இருப்புக் கச்சையையும், இறகுகள் சொருகிய வெள்ளி நிறமான தலை முடியையும் அணிந்திருந்தனர்; மற்றவர்கள் வழக்கமாக உடுத்தும் ஆடைகளை அணிந்திருந்தனர்; இவர்களுக்குப் பின்னால் பெண்கள் கூத்தாடிக்கொண்டு வந்தனர். இந்த வரிசையில் முதலாவதாக வந்தவள் பழுத்த பழமான ஒரு ஒற்றைக் கண் கிழவி. அவள் சாமியாடி என்று கூறப்பட்டாள். அவளது கட்டையான பாவாடையும் நீளமான மேலங்கியும் கறுப்பு நிறமாக இருக்க, அவற்றிலே மஞ்சள் சிவப்பு நிறங்கள் கொண்ட கண்ணாடி மணிகள் வைத்துத் தைக்கப்பட்டிருந்தன. இந்த ஒளிமிக்க நிறங்கள் அவளது முதிர்ந்த வயதையும், எலும்பும் தோலுமான உடலமைப்பையும் இன்னும் தெளிவாக எடுத்துக் காட்டின. விரைவில் சாகப்போகும் அவள் ஏற்கனவே செத்துப் போனவர்களுக்காக வழிபாடு செய்து, மெல்லிய 'கீச்சு'க் குரலிலே பாடிக்கொண்டு வந்தாள். ஆண்களோ அவ்வப்போது உரத்த குரலில் அச்சமூட்டும் முறையில் கூச்சலிட்டு, பார்த்தாலே குலை நடுங்கத் தங்க

ளது அரிவாள்களைத் தலைக்கு மேலே உயர்த்திச் சுழற்ற, கூத்தின்வேகம் மேலும் மிகுதியாயிற்று. இவற்றையெல்லாம் கண்டு வேலிக்குள் அடைபட்டுக்கிடந்த விலங்குகள் பயத்தால் நடுநடுங்கி மிரட்சி கொண்டன; ஆடுகளில் ஒன்று 'ம்ம்மே' என்று இரக்கமாகக் கத்திற்று.

எனக்குப் பக்கத்தில் **டுமெங்கங்** நின்றுகொண்டிருந்தார். ஒரு **டயாக்** கிராமத்தின் தலைவருக்குத் தான் டுமெங்கங் என்று பெயர். அவர்தான் கிராமம் முழுவதின் அறிவுப் பெட்டகம்; நினைவாற்றலில் அவர் கிராம மக்களுக்கு ஒரு உயிருள்ள வரலாற்று நூல். இன்னும் தம் மக்கள் சார்பாகப் பேச அவருக்குத்தான் உரிமையுண்டு. இப்போது அவர் பேசினார். "முன்பெல்லாம் நாங்கள் விலங்குகளைப் பலியிடுவதில்லை. அடிமைகளையும் சிறை பிடிக்கப்பட்டவர்களையும் தான் பலியிடுவோம்," என்றார் மிகவும் எளிமையான முறையில்.

தாங்க முடியாத ஒரு உணர்வு என்னை ஆட்கொண்டது—ஏதாவது துன்பம் நேர்ந்து விடுமோ என்னும் அச்சத்தால் அல்ல, அதற்குப் பதில் அந்த விழாவின் வியப்புமிகு சூழ்நிலையைக் கண்டுதான். அம்மக்களது வழிபாடு, பாட்டு, கூத்து எல்லாமே செத்துப் போனவர்களையும் இறந்த காலத்தையும் எங்கள் கண்முன் கொண்டுவந்து நிறுத்தின.

எனதருகிலிருந்த **டெமாங்** ஆடாது அசையாது உணர்ச்சி வழிப்படாது பேசாது நின்று கொண்டிருந்தார். ஆனால் எனது இரண்டு இளம் நண்பர்கள் மட்டும் இந்த அச்சம் மிக்க தோற்றத்தால் பாதிக்கப் பட்டவர்கள் போல் தோன்றினர். " இந்த இடத்தில் உண்மையிலேயே ஆவிகள் சுற்றிக் கொண்

டிருக்க வேண்டும்,'' என்று ஒருவர் மற்றொருவரிடம் காதுக்குள் குசுகுசு வெனக் கூறியதைக் கேட்டேன்.

ஏழாவது சுற்று முடிந்ததும் நடனம் நின்றது; கிழவி வழிபாட்டுப் பாடல்கள் பாடுவதையும் முடித்துக்கொண்டாள். இசைக்கருவிகளின் முழக்கம் மட்டும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது; ஆனால் முன்பு போல் அவ்வளவு அச்சுறுத்துமாறு இல்லை. நாங்கள் இதற்கு முன் வந்திருந்தபோது கண்ட பல கூத்தாடிகள் இப்போது எங்களிடம் வந்து பேசி அளவளாவினார்கள். பின்னர் வீட்டிற்குள் வருமாறு **டெமாங்** எங்களுக்குச் சைகை காட்டினார்.

இப்போது நாங்கள் உரிமை முறையுடன் அழைக்கப்பட்ட விருந்தினர்கள். ஒரு மரத் தொட்டியிலிருந்து ஒரு குறுகிய மூங்கிற் குழாயில் சாராயம் ஊற்றி இரண்டு வாய் குடிக்குமாறு சொன்னார்கள். அந்த வீட்டுத் தாழ்வாரத்தின் கடைக்கோடியில் இரண்டு வட்ட மேஜைகளைச் சுற்றி நாற்காலிகள் போடப் பட்டிருந்தன. பல இளம் பெண்கள் எங்களுக்கு உணவுப் பொருள்களும் மதுவும் கொண்டுவந்தார்கள். எங்களுடன் அமர்ந்திருந்த **டுமெங்கங்** சிலவற்றை விளக்கினார். அதாவது கல்லறைக்குச் சென்று வழிபாடு முதலியன செய்து விட்டுத் திரும்பும்வரையில் இந்த மக்கள் அதிகமாகக் குடிக்க மாட்டார்கள். ஏனென்றால் குடி வெறியில் தங்கள் கடமையை மறந்து பணிவில்லாது நடந்துக்கொண்டு ஆவிகளின் கோபத்தைக் கிண்டிக் கிளறி விட்டு விடுவோமோ என்று அவர்களுக்கு அச்சம். ஆனால் சுடுகாட்டிற்குச் சென்று திரும்பியதும் விரும்பிய வாறெல்லாம் குடித்து மகிழ்ந்து கூத்தடிப்

பார்கள். ஏனென்றால் இதற்குள்ளாக ஆவிகள் அமைதி பெற்றிருக்கும்; உயிரோடிருப்பவர்களும் இறந்தவர்களும் கிளர்ச்சி நிலையில் இருப்பார்கள். இவ்வாறெல்லாம் அவர் விளக்கம் கூறினர்.

**டுமெங்கங்**கின் வயது பற்றி நான் வியப்படைந்த வண்ண மிருந்தேன். படுகிழமாகி விட்ட நிலையிலும் அவரது கண்கள் இன்னும் தெளிவோடும் ஒளியோடும் விளங்கின. அவரது மெல்லிய மீசைகள் சூதுவாதுள்ள ஒரு எலியின் தோற்றத்தை அவருக்கு அளித்தது.

" **டுமெங்கங்** தாத்தா, உங்களுக்கு என்ன வயதாகிறது?" என்று நாங்கள் கேட்டோம்.

"நான் திருமணம் செய்து கொண்ட ஆண்டில் **கிராகடாவ்** எரிமலை வெடித்து, இங்கெல்லாம் ஒரே சாம்பல் மழை பொழிந்தது," என்று அவர் பதிலளித்தார்.

இது நடந்து எழுபது ஆண்டுகளுக்கு மேலாகிறது என்பதைத் தெரிந்து கொண்டோம். சாமியாடியான கிழவிக்கோ இவரை விட அதிக வயதாகியிருக்க வேண்டும். எனவே இதைப் பற்றிக் கேட்டோம். நாங்கள் எண்ணியது சரிதான் என்றாகி விட்டது. **கிராகடாவ்** எரிமலை வெடித்த நேரத்தில் அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகி, அந்தக்குழந்தை நடந்துக் கொண்டுமிருந்தது!

பேச்சு மீண்டும் **டுமெங்கங்** பற்றித் திரும்பிற்று, நான் கேட்டேன், "நீங்கள் பல திருவிழாக்களிலும் பல குலச்சண்டைகளிலும் ஈடுபட்டிருந்திருக்க வேண்டுமே?" என்று.

"ஆமாம் ஏராளமான விழாக்களிலும் சண்டைகளிலும் பங்கெடுத்திருக்கிறேன்," என்று அவர் ஒப்புக்கொண்டார்.

பிறகு, தற்பாதுகாப்புக்காக எவ்வாறு அந்தக் காலத்தில் எல்லா வீடுகளைச் சுற்றிலும் மூங்கிற் கழிகளைக் கொண்டு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன என்பதைக் கூறினார். ஆற்றங்கரையில் குழிகள் வெட்டி, அவற்றில் மூங்கிற்கழிகளைப் போட்டு குழிகள் தெரியாதவாறு மேலே புற்பூண்டுகளால் மூடி, எவ்விதம் புலிப்பொறிகள் தயாரிக்கப்பட்டன என்பதையும் தெரிவித்தார். இளம் வயதில் துணிவாக அவர் பலதடவை தமது பகைவர்களை எதிர்த்துத் தலைவேட்டைக்குச் சென்றிருக்க வேண்டும். அப்படிப் பட்டவர் இப்போது எங்கள் பக்கத்தில் அமர்ந்து, சிறிது கூடக் கலக்கமின்றிப் பழஞ் சண்டைகளைப் பற்றிக் கதைகதையாகக் கூறிக்கொண்டிருந்தார். அப்போது **சாவே**யையும் **புர்பாடி**யையும் கடைக்கண்ணால் நோக்கினேன். வழக்கத்தைவிட அவர்களது கண்கள் அகலத் திறந்திருந்தன. என்னைப் பொறுத்தவரையிலோ ஒரு இனம் தெரியாத உணர்ச்சிக்கு ஆளானேன்; இன்னதென்று கூற முடியாத ஒரு அச்ச உணர்வு என் உடலில் ஊடுருவிச் சென்றது.

இவ்விதம் நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு சிறப்பான விருந்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தாழ்வாரத்தின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வரிசையாக டமாரங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு டமாரத்தின் முன்பும் கனமான பித்தளைக் கலங்களில் சோறும் வேறு கறிவகைகளும் பரிமாறப்பட்டிருந்தன. ஆண்

களும் பெண்களும் விருந்துக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

கட்டிடத்தின் மேற் கூறையைத் தாங்கிக் கொண்டிருந்த உத்திரங்களிலிருந்து இங்கும் அங்குமாகக் காந்த விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. தரையிலே சீன மெழுகு வர்த்திகள் உயரத்திற்கு பித்தளை விளக்குகள் சுடர் விட்டுக்கொண்டிருந்தன. அவைகள் மண்ணெண்ணெயை எரித்து, தீ நாக்கிலிருந்து சிவப்பு வெளிச்சத்தைத் தந்து கொண்டிருந்தன.

கிழவி பாட ஆரம்பித்தாள். பிறரும் அவளைப் பின்பற்றிப் பாடினர். அவள் உணவை ஆவிகளுக்குக் கொடுத்தாள். தாழ்வாரத்தில் வெகு தூரத்திற்கப்பால் கடைசியில் அவள் உட்கார்ந்து கொண்டிருந்ததால், உணவை எவ்வாறு ஆவிகளுக்கு அவள் ஒப்புவித்தாள் என்பதை எங்களால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

எங்கள் மேஜைகளின் மீது தட்டுகளில் சோறும் சிறு வட்டில்களில் பன்றி இறைச்சியும் வைக்கப் பட்டன. முஸ்லீம்களுக்கு ஆற்று மீன்கள் பரிமாறப் பட்டன. இனி நாங்கள் சாப்பிடத் துவங்கலாம் என்றார்கள். எங்களது கொடுமையான பசியிலிருந்தே பொழுது நெடுந்தொலைவு சென்று விட்டது என்பதைத் தெரிந்து கொண்டோம். வெளியே மழைபெய்து கொண்டிருக்கும் ஒலி கேட்டது. நாங்கள் பேசிக் கொண்டே சாப்பிட்டோம்.

திடீரெனத் தாழ்வாரத்தில் இரண்டு ஆண்கள் எழுந்து எதிரும் புதிருமாக நின்றனர். அவர்களது

TAMILNADU STATE DEPT. OF ARCHAEOLOGY LIBRARY, ACC NO... Date... MADRAS-28

தலைகளை ஜரிகைத் துணிகள் அழகு செய்துகொண்டிருந்தன. அவற்றில் பெரிய பெரிய இறகுகள் சொருகப்பட்டிருந்தன. அவர்கள் தாங்கள் உடுத்தியிருந்த தொய்வான நெடுஞ்சட்டைகளுக்கு மேலே வேங்கைப்புலித்தோல்களை இரும்பு மூடிபோல் அணிந்திருந்தனர். அவற்றிலும் இறகுகள் இடம்பெற்றிருந்தன. இருவரும் அச்சம் தரவல்ல **டயாக்** வாட்களை மரப்பட்டை உறைகளோடு வைத்திருந்தனர். இந்த உறைகள் கறுப்பாக, பளபளப்பாக தோல்போலவே இருந்தன. அதோடு மணிக்குஞ்சங்கள் தொங்க, அவைகளைச் சுற்றிலும் ஜரிகை வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவர்கள் போர்க்கூத்து ஆடினார்கள். அவர்களது ஆட்டங்களும் அசைவுகளும் விரைவு நிலையிலும் அழகாகவும் இருந்தன. அவர்கள் கால்களைத் தரையில் உதைத்து உதைத்து உண்டாக்கிய ஓசையும் காது செவிடுபட எழுப்பிய பேரொலியும் பல்வேறு இசைக் கருவிகளின் தாளத்தை மேலும் மிகுதிப் படுத்தின. ஒரு வல்லூறு தனது இரையின் மீது பாய்வது போலிருந்தது அவர்களின் கூத்து.

இந்தக் கூத்து முடிந்ததும், பெண்கள் கூத்து ஆடினார்கள். இது மெதுவாகவும் மென்மையான காலடி யோசைகளோடும் விளங்கிற்று. முன்னங்கால் நார்ப்பாய் மீது அடித்து ஒருவகைத் தாளத்தை உண்டாக்கிற்று. இந்தக் கூத்து எளிமையானது போலத் தோன்றினாலும் உண்மையில் மிகத்துன்பமான கலை நுணுக்கம் கொண்டதாக இருந்தது. அதிலும் சிறப்பாகத் தாள்களின் அசைவுகள் வியக்கத்தக்க மென்மையோடு திகழ்ந்தன.

பிறகு வலிமை பொருந்திய ஒரு முதியவர் பாட ஆரம்பித்தார், பிறரும் அவரைப் பின்பற்றிப் பாடினார்கள். அப்பாடல் ஒரு பழங்கதையைப் பற்றியது. இதனை **டெமாங்** எங்களுக்கு மொழி பெயர்த்துக் கூறினார்.

"நதிக்கரையொன்றில் ஒரு மாபெரும் மன்னன் வாழ்ந்து வந்தான். அவனது அரண்மனை மிகவும் செல்வம் படைத்தது. ஒவ்வொரு தூணும் நாய், புலி, முதலை முதலியவற்றின் தலைகளால் அழகு படுத்தப் பட்டிருந்தது. அதனைக் கண்ணுறுவோர் எவரும் அதன் மீது பறந்து செல்லத் தங்களுக்கு இறக்கைகள் முளைக்கக்கூடாதா என்று ஏங்குவார்கள். நதியிலே பயணம் செய்பவர்கள் தங்களது துடுப்புகளிலே சாய்ந்து அண்ணாந்து பார்ப்பார்கள். அவ்வளவு பெரியதாகவும் அழகானதாகவும் இருந்தது அந்த அரண்மனை."

இந்தக் கதையை எல்லோருமே அறிந்திருந்தது போல் தோன்றிற்று. மேலும் மேலும் குரல்கள் சேரப் பாட்டு விரிவடைந்தது. இது போன்ற பாடல்கள் ஒருவித மாய ஆற்றலை எழுப்பும் என்பது வாழையடி வாழையாக வந்துள்ள நம்பிக்கை. எனவே இன்றளவும் கூட இவற்றை நெல்வயல்களில் இந்த மக்கள் பாடுகின்றார்கள். பழங்காலத்தில் தலைவெட்டி எதிரிகள் படை எடுத்து வரும் பொழுது பெண்கள் இக்கதையைப் பாட ஆண்கள் சண்டை செய்வார்களாம்.

மழைக்காலத்தில் ஒரு வீட்டிற்கும் மற்றொரு வீட்டிற்கும் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுவிடும், நெல்வயல்களில் மக்கள் வேலை செய்ய முடியாது, மிகத் தொலைவிலுள்ள பள்ளிக்கூடங்களுக்குப் போகும்

வழி, குழந்தைகள் கடந்து செல்ல முடியாதபடி இருக்கும். அந்தக்காலங்களில் பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பண்டைக்காலப் பாடல்களையும் கூத்துகளையும் கற்பிப்பார்கள்.

ஆறு வயது உள்ள ஒரு சிறு பையன் திடுமென எங்கள் முன்னுள் கூத்தாட ஆரம்பித்தான். அது அழகான, மேன்மையான அசைவுகளைக் கொண்ட பறவைக் கூத்து. நீண்ட மழைக் காலத்தில் அவனுக்குச் சொல்லித் தரப்பட்ட பாடங்கள். அவன் நன்கு கற்றுக் கொண்டிருந்தான் என்பது அவனது கூத்திலிருந்து தெரிந்தது.

ஆனல் இவையெல்லாவற்றையும் விடப் பேரழகாக இருந்தது இருபது ஆண்கள் கூட்டாக ஆடியதொரு கூத்து. முன் காலத்தில் தங்கள் பகைவர்களை முறியடித்து அவர்களது தலைகளோடு வீடு திரும்பும் பொழுது ஆடும் ஆட்டத்திலிருந்து தான் இந்தக் கூத்து வந்தது. கூத்தாடியவர்களில் இருவர்தான் தங்கள் தலையில் இறகுகளைக் கொண்டு அழகு செய்திருந்தார்கள்; முழு இரும்பு மூடி அணிந்திருந்தார்கள். இதிலிருந்து அவர்களது சட்டைகளின் கைகள் நகைப்பூட்டும் முறையில் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. மற்றவர்கள் தங்களது வழக்கமான உடைகளையே அணிந்திருந்தார்கள். பழங் காலத்தில் எல்லோருமே போர் உடை அணிந்திருந்தது என்னவோ உண்மைதான். ஆயினும் பல தலைமுறைக்கு முந்திய ஆடைகளோடு நகைப்பூட்டும் புதிய ஆடைகளை அவர்கள் இன்று அணிந்திருந்த நிலையிலும் கூட, இந்தக் கூத்து அச்சம் தரும் முறையிலே தான் தோற்றமளித்தது.

இதனை மேலும் நன்ருகப் பார்ப்பதற்காக இருளில், தாழ்வாரத்தின் குறுக்கே, அரை குறையாகச் செதுக்கப்பட்ட மர விட்டங்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருந்த தாழ்வான வேலியின் மீது சாய்ந்து நின்று கொண்டிருந்தேன். வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. நீர்த் துளிகள் என் கழுத்தின் மீது தெறித்து விழுந்து கொண்டிருந்த போதிலும் அதன் ஒலியை, இசைக் கருவிகளின் பேரொலியின் காரணமாகக் கேட்க முடியவில்லை. ஒரு பெரிய டமாரம் மிகுதியான ஓசையை எழுப்பி, மழைக்கு எதிர்த் தாளம் போட்டுக் கொண்டிருந்தது. கூத்தாடுபவர்கள் ஐந்து அல்லது ஆறு அடிகள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு தடவைக்கும் ஒரு நீண்ட ஓலமிட்டார்கள். இந்த ஓலம் பல விநாடிகளுக்கு நீடித்திருந்தது. இந்த வன்மை மிக்க கூக்குரலில் வெற்றி உணர்வும், அச்ச உணர்வும் கலந்து நின்று; வெறும் மனிதக் குரலைவிட ஒரு வகையான அச்சத்தையும் சிலிர்ப்பையும் ஏற்படுத்தின. எல்லோருக்கும் முன்னதாக இருந்த திறமுள்ள ஒரு கூத்தாடுபவர் ஒரு கையில் உருவிய வாளையும், இன்னொரு கையில் மீசையோடு கூடிய மண்டை ஓட்டையும் பிடித்திருந்தார். ஏனைய பல கூத்தாடுபவர்களும் தென்னங் கீற்றில் மண்டை ஓடுகளையும் ஏந்தியிருந்தனர். கடைசியாக, ஆண்கள் கூத்தாடும் அதே நேரத்தில் ஒரு பெண்கள் கூட்டமும் கூத்தாடத் தொடங்கியது. இவர்களின் நளினத்திற்கும் ஆண்களின் கலவரம் கலந்த வீரத்திற்கும் தான் என்ன வேறுபாடு! இந்த வேறுபாடு அந்தக் குரலின் சூழ் நிலையை மேலும் மிகைப் படுத்திக் காட்டிற்று.

காந்தவிளக்குகளுக்குக் காற்றடிக்க அவர்கள் மறந்து விட்டார்கள். இதனுல் பழைய பித்தளை விளக்கு

களைத் தவிர வேறு வெளிச்சமில்லை. காற்றின் காரண மாகத் தீச்சுடரின் நாக்குகள் இங்குமங்கும் அலைந்தாட, அந்தப் பித்தளை, விளக்குகள் நெருப்புப் பந்தங்கள் போல் எரிந்து கொண்டிருந்தன.

முதுமையான **டுமெங்கங்கு** அருகில் ஒரு நாற்காலி யில் **டெமாங்** அமர்ந்திருந்தார். அவர் ஒரு சிகரெட்டைப் பிடித்த வண்ணம் நாற்காலியில் அமர்ந்திருந்ததால் கிழவரின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. நான் **டெமாங்**குக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தேன்.

"**சாலே**யும் **புர்பாடி**யும் எங்கே?" என்று நான் கேட்டேன்.

"அங்கேதான் எங்கேயாவது அவர்கள் இருப்பார் கள்," என்று அமைதியாக அவர் பதிலளித்தார்.

இசை இன்பத்தில் நேரம் போனதே தெரியவில்லை. இப்போது இரவு வெகு நேரம் ஆகியிருக்க வேண்டும். கூத்தாடியவர்களில் பலர் உறங்கிக் கொண்டிருந்தார் கள். ஆயினும் அவர்களிலே பலர் திடீரென்று விழித் தெழுந்து மீண்டும் கூத்து ஆடத் தொடங்கினார்கள். இந்த நேரத்தில் தான் **புர்பாடி** ஒரு நாற்காலியில் அயர்ந்து தூங்கி விட்டதைப் பார்த்தேன். அவனைச் சிலர் தூக்கிப் பாயில் படுக்க வைத்தார்கள்.

கூத்தாடுபவர்களின் தொகை குறைந்து கொண்டே வந்தது. மேலும் மேலும் பலர் தூங்கத் தொடங்கினார் கள். **சாலே** எழுந்து வந்து எங்கள் பக்கம் உட்கார்ந் தான். அவன் ஒரு **டயாக்** தலைப்பாகை அணிந்திருந் தான். கூத்தில் அவனும் கலந்து கொண்டிருந்திருக்க வேண்டும்.

அந்த வீட்டையே அதிரவைத்த பெரும் கூக்குரல்கள் இப்போது நின்று விட்டன. பெண்களும் தாங்கள் கூத்தாடுவதை நிறுத்தி விட்டனர். அவர்களது கண்களெல்லாம் தங்களது வீட்டுக் கதவுகளின் மீதே நிலைத்திருந்தன. எனக்கு மிகவும் அலுப்பாகவும், தூக்க மயக்கமாகவும் இருந்தது. பத்து மனிதர்கள் மட்டும் தான் அமைதியான தாளத்துடன் இன்னும் கூத்தாடிக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களெல்லாம் அந்தப் பரந்த இடத்தில் எங்கெங்கு இருந்தார்களோ, அங்கங்கே படுத்துறங்கி விட்டார்கள்.

அந்த அறைகளில் ஒன்றில் நான் உறங்கலாமா என்று **டெமாங்**கிடம் வினவினேன். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அவர் சென்றார். சிறிது நேரத்தில யாரோ ஒருவர் வந்து கொசுவலை எனக்குப் பிடிக்குமா என்று கேட்டார். கொசு, மூட்டைப் பூச்சித் தொந்தரவு வெகுவாக அடைந்தவன் நான். ஆகவே கொசுவலைகள் இருந்தால் நல்லது தான் என்றேன். கால் மணி நேரத்தில் எல்லாம் தயாராகி விட்டது. பல பெண்கள் என்னை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அதனுள்ளே இரண்டு வரிசையாகப் பன்னிரண்டு கொசுவலைகள் கட்டப்பட்டிருந்தன. இவற்றிற்கு இடைப்பட்ட திறந்த இடத்தில், துப்பட்டி தலையணைகளோடு ஒரு மெத்தை விரிக்கப்பட்டிருந்தது. அதன் ஒவ்வொரு புறத்திலும் ஒரு உயரமான பித்தளை விளக்கு வைக்கப் பட்டிருந்தது. அந்த விளக்கின் செஞ்சுடரும் கூத்தாடிய நிலையிலிருந்தது.

நான் அந்தப் படுக்கையில் உடலை நீட்டிப் படுத்தேன்.

# 4. இந்தோனேஷ்யப் பொருள்நிலை வாழ்வின் தன்மை

---

எழுதியவர் :

## மதுமது ஹட்டா

இந்தோனேஷ்யாவின் பொருள் நிலை வளர்ச்சியைக் கவனமாக ஆராய்பவர்கள் ஒரு நிலையைக் காண்பார்கள். அதாவது கற்பனை நிலைக்கும் உண்மை நிலைக்குமிடையே ஒரு விரைவான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்ப்பார்கள். இந்தப் போராட்டம் பற்றிய விளக்கம் காண்பதற்கு அதன் அடிப்படையிலுள்ள வரலாறு ஓரளவாவது தெரிந்திருப்பது இன்றியமையாததாகும்.

குடியேற்ற உரிமை ஆட்சிக் காலத்தில் இந்தோனேஷ்ய நாட்டு அன்பர்கள் ஒரு வளமிக்க வருங்கால இந்தோனேஷ்யா பற்றி—வாழ்வின் துயரங்களிலிருந்து விடுபட்ட ஒரு இந்தோனேஷ்யா பற்றி இன்பக் கனவு கண்டார்கள். இயற்கைச் செல்வங்களும் மண் வளமும் கொழிக்கும் அந்தத் தன்னாட்சி இந்தோனேஷ்யாவிலே இல்லாமை என்பதே இல்லை என்றாகிவிடும் எனக் கனவு கண்டார்கள். அதிலும் நாட்டின் செழுமைக்கும் மக்களின் வறுமைக்குமிடையே இருந்த ஒரு மிகக் கொடுமையான வேறுபாட்டைப் பார்த்தபோது எங்கள் உள்ளங்களிலே இன்னும் மிகுதியாக இந்தக் குறிக்கோள்கள் கொழுந்து விட்டெரிந்தன. மிகுதியான செல்வங்களுக்கிடையே இந்தோனேஷ்யர்கள் கொடிய வறுமையில் வாழ்கின்றார்கள். பொருள் படைத்தவர்கள் அயலாரான டச்சுக்காரர்கள். அவர்களுக்கு உரிமை இருந்தது, முதலீடு செய்யப் பொருள் இருந்தது, தொழில் நுணுக்கத்திறமை இருந்தது. டச்சுக்காரர்களுக்கு அடுத்தபடியாக நல்ல நிலையில் இருந்தவர்கள் சீனர்கள். இவர்கள் நாட்டின் தொழிலில், வாணிபத்தில், ஆளுகையில் டச்சுக்காரர்களின் சிறப்பான நண்பராக இருந்து, ஒரு இடைப்பட்ட பிரிவினராக விளங்கினார்கள். ஆனால் இந்தோனேஷ்யர்களின் நிலைமைதான் மிகவும் இரக்கத்திற்குரியது! அவர்கள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தபோதிலும், ஏழைகளிலும் மிக மிக ஏழைகளாகயிருந்தார்கள். இத்தனைக்கும் எல்லாத் துறைகளிலும் உழைத்து உற்பத்தி செய்து வளம் காட்டியவர்கள் அவர்கள்; நெல், காபி, தேயிலை, சர்க்கரை, கொய்னா, ரப்பர், கொப்பரை, புகையிலை மற்றும் உலகச் சந்தையில் அரிய விலைக்கு விற்பனையாகவல்ல பல்வேறு பொருள்களைப் பயிரிட்டு விளைவித்தவர்கள், தயாரித்தவர்கள் அவர்கள். மேலும்

தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் நெற்றி வியர்வை நிலத்தை நனைக்கக் கடுமையாக உழைத்தவர்களும் அவர்கள்தான். ஒவ்வொரு ஆண்டும் இந்தோனேஷ் யாவின் தொழில், வாணிபங்களிலிருந்து கொள்ளை கொள்ளையான ஊதியம் மலைமலையாக நூறுநூறாயிரக் **கில்டர்**களாகக் குவிந்தது. ஆனால் அவ்வாறிருந்தும் இந்த ஊதியத்தைத் தேடிக்கொடுத்த தொழிலாளர் களுக்கோ 'வாழ்க்கைக் கூலி' கூடக் கிடைக்கவில்லை. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு ஒரு இந்தோ னேஷ்யத் தொழிலாளிக்கு கிட்டத்தட்ட நாள் ஒன்றுக்கு இருபத்தைந்து முதல் முப்பத்தைந்து **கில்டர் செண்ட்** வரை, (எழுபத்தைந்து முதல் நூறு இந்தியப் புதிய காசுகள்) கூலி கிடைக்கும். அதிலும் இது நல்ல சூழ்நிலை நிலவியிருந்த காலத்தில்தான்! ஆனால் உலகச் சந்தை யில் விலை நிலைகளில் மாற்றம் ஏற்பட்டு, பொருள் நிலை சீர்குலையத்தக்க நெருக்கடி ஏற்படும் காலங்களிலோ, இவர்கள் நிலைமை மேலும் தாழ்வாகிவிடும்.

நாட்டின் பொருள்நிலை வாழ்வு, மக்கள் அனைவரின் வலுவையும் அடித்தளமாகக்கொண்டே எழுப்பப்பட வேண்டும் என்று இந்தோனேஷ்யர்களாகிய நாங்கள் நம்புகிறோம். இந்தோனேஷ்ய மக்கள் தனித்தனி உறுப்பினராகச் செயல்படும்வரை, ஒவ்வொருவரும் தங்கள் செயலையே கவனிப்பதோடு மட்டும் நிறைவு பெறும் வரை அவர்களது வறுமை அதாவது தளர்ச்சி நீங்காது. எனவே நாட்டின் பொருள்நிலை அமைப்பை, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் குடும்பக் கொள்கையின் அடிப்படையில் அமைக்கவேண்டும். இத்தகைய கூட்டுறவுக் கொள்கை மூலமாகத்தான் தளர்ச்சியுற்றுள்ள மக்களின் ஆற்றலை ஒன்று திரட்டி,

ஒற்றுமைப்படுத்தி; உரப்படுத்த முடியும், வலுப்படுத்த முடியும். மேலும் கூட்டுறவு, இந்தோனேஷியர்களிடையே ஒற்றுமை நிலையை வளர்க்கும், தங்கள் சொந்த வலுவிலே நம்பிக்கை வைக்குமாறு அவர்களைப் பயிற்றுவிக்கும். ஐரோப்பாவில் உள்ள **டென்மார்க்** இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டு. ஏழ்மை நிலையில் இருந்த மக்கள் எவ்விதம் கூட்டுறவு நிலையங்கள் மூலம் வளமிக்க வாழ்வை அடைந்தார்கள் என்பதற்கு அந்நாடு நல்லதொரு சான்ருகும்.

ஆனல் இந்தோனேஷ்யாவை அடக்கி ஆண்டு கொண்டிருந்த குடியேற்ற ஆட்சி முதலாளித்துவம் மிகவும் வலிமை வாய்ந்தது. அதனை வெறும் ஒலி முழக்கத்தால் மட்டும் அகற்றிவிடமுடியாது. சிறு இந்தோனேஷ்யத் தொழில், வாணிப நிலையங்களை அமைப்பதின் மூலம் அதனை முறியடித்துவிட முடியாது. எனவே மேற்கத்திய முதலாளித்துவத்தை எதிர்த்துத் தாக்குபிடிக்கக்கூடிய ஒரே வழி, கூட்டுறவு நிலையங்களை அமைப்பது தான். ஆனல் இவைகளைத் தோற்றுவித்து நடத்துவது என்பது மலைபோன்ற செயலாக இருந்தது. ஏனென்ருல் ஒருவருக்கொருவர் உதவுவது என்பது கிராமங்களில் தலைமுறை வழியாக வந்த பழமைமிகு வழக்கம்தான் என்ருலும், இன்னும் எங்கள் மக்கள் மிக எளியதான பொருள்நிலை அமைப்புகளை எண்ணக்கூட அறிவற்றவர்களாக இருந்தார்கள்.

எனினும் 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17-ம் நாள் இந்தோனேஷ்யாவின் தன்னுட்சி அறிவிக்கப்பட்டபோது எங்களில் பலருக்குப் புதிய நாட்டின் பொருள் நிலை அமைப்புப்பற்றி ஒரு தெளிவான கண்ணேட்டம் இருந்தது. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு இல்லாத

ஒரு அமைப்பில் செழிப்பை எதிர்பார்க்க முடியாது. நாட்டைச் சீரமைக்கும் பணியில் அரசினரும் மக்களும் சேர்ந்தே ஈடுபட வேண்டும். பொதுமக்கள் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்கு முதன் முயற்சி எடுக்கவேண்டும். கூட்டுறவு நிலையங்களின் உதவியுடன் சிறு தொழில்களையும், நடுத்தரத் தொழில் களையும், தோற்றுவிக்கலாம். அவற்றை வலுப்படுத்த லாம். அவ்வாறு செய்ய இயலாத இடங்களில் வரை யறுக்கப்பட்ட பொறுப்புகளோடு கூடிய தொழிற்கழ கங்களை அமைக்க இசைவு தரலாம். கனரகத் தொழில் களை அரசே ஏற்று நடத்தவேண்டும். இதற்கான பொருளையும், செயல்படும் திறத்தையும் வேண்டு மானால் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்பட வேண்டு மானால், ஒவ்வொரு குடி உரிமையாளரும், தானும் தனது குடும்பமும் மனித நிலைக்கிசைந்த வாழ்க்கை நடத்துவ தற்குப் போதுமான ஊதியம் பெறுமாறு அரசினர் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்தக்கொள்கை எங்கள் அரசியல் சட்டத்தில், பொருள்நிலைச் சீரமைப்புச் சிக்கல் களைப்பற்றிக் குறிப்பிடும் பகுதியில் இணைக்கப்பட் டுள்ளது. இது பற்றி அரசியல் சட்டத்தில் கண்டுள்ள தாவது: 'குடும்பக்கொள்கை அடிப்படையில் ஒரு கூட்டு முயற்சியாகப் பொருள்நிலை அமைக்கப்படும்." அதாவது இந்தோனேஷ்யாவின் பொருள்நிலை பெரும் பாலும் கூட்டுறவு நிலையங்களைச் சார்ந்தே நிற்கும் என்று இதற்குப் பொருள்படும். மேலும் அரசியல் சட்டம் கூறு வதாவது: "நாட்டிற்கு மிகத்தேவையான உற்பத்தித் துறைகளும், பொரும்பாலான மக்களின் வாழ்க்கை மீது உரிமை செலுத்தும் உற்பத்தித் துறைகளும் அரசினரின்

கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இன்னும் நிலம், நீர் ஆகியவற்றிலுள்ள இயற்கைச் செல்வங்களும் அரசினரின் கண்காளிப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டு மக்களின் அளப்பரிய நல்வாழ்விற்குப் பயன்படுத்தப்படும். இவ்வாறு கூறும்போது இவையெல்லாவற்றிற்கும் முழுமையான முதலாளியான அரசு, தனது ஆளும் அரசியற் சுற்றத்துடன் விளங்கும் என்பது பொருளல்ல. அதற்குப் பதிலாக வளமிகு நல்வாழ்வை நோக்கி நாடு முன்னேற்றமடைய எவ்விதமான உற்பத்திகளை எந்த அளவில் செய்யவேண்டுமென்பது போன்றவைகளை முடிவு செய்வதிலேயே சிறப்பாக அரசினரின் கட்டுப்பாடு இருக்கும். இந்தோனேஷ்யா இன்றுள்ள நிலையில் பொருள்நிலைச் சீரமைப்புப்பணியில் அரசினரே தொடக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். நாடு சீரமைப்பிற்கான பல்வேறு கட்டங்களை நிறைவேற்றுவதில், எவ்விதமான அமைப்பு நல்லதாக இருக்கும் என்பதைப் பின்னல் முடிவு செய்துகொள்ளலாம்.

1945ல் தோற்றமான இத்திட்டம் இன்றளவும்கூட எல்லா உலக நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகிறது. **நாட்டுரிமை இயக்கத்தார், சோஷலிஸ்டுகள்** முதலியோரும் **முஸ்லிம்கள், கத்தோலிக்கர்கள், புராடெஸ்டெண்டுகள்** முதலிய சமயத்தாரும் எல்லோருமே இத்திட்டத்தை ஏற்கின்றுர்கள். ஆனல் **கம்யூனிஸ்டுகள்** மட்டும்தான் இத்திட்டத்தை ஏற்க மறுக்கின்றனர்—கூட்டுறவு இயக்கத்தை அவர்கள் எதிர்த்து வருவதிலிருந்தே இதைத் தெரிந்து கொள்ளலாம்.

எங்கள் திட்டத்தின் ஒரு பெரும்பான்மையான குறிக்கோள், நாட்டுக்கான பொருள் நிலை அமைப்பின் வளமானது, ஏற்றுமதியின் வாயிலாக இருப்பதை, நாட்

டின் நல்வாழ்வின் வழியாகக் காண்பதே-மாற்றுவதே. குடியேற்ற உரிமை ஆட்சிக்காலத்தில் இருந்ததுபோல உலகச் சந்தைக்கான உற்பத்தியில் இனிச் சிறப்பான நோக்கம் செலுத்தப்படமாட்டாது. அதற்குப்பதில் உள் நாட்டுச் சந்தைக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்வதிலும், மக்களின் வாங்கும் ஆற்றலை மிகுதிப் படுத்துவதிலுமே தற்போது முதன்மை காட்டப்படும். இதனால் ஏற்றுமதிகளைப் பொருட்படுத்தாதிருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. நான் கூறுவதெல் லாம் ஏற்றுமதிகளின் நோக்கம் இனி வேறுவிதமாக இருக்கவேண்டும் என்பதுதான். அதாவது மிக மிக இன்றியமையாதபொருள்களை இறக்குமதி செய்வதற்கு வேண்டிய அயல் நாணயச் செலாவணிகளைப் பெறுவ தற்கு மட்டும், இப்போது முதல் ஏற்றுமதிகள் பயன்படுத் தப்படும். மேலும் நல்ல வாழ்க்கை நிலைக்குத் தேவை யான பல பொருள்களையும், எங்கள் சொந்தத் தொழிற் சாலைகளை அமைத்துக்கொள்வதற்கான கருவிகளையும்—அவற்றை நாங்களே தயாரித்துக்கொள்வதற்கான சூழ் நிலை ஏற்படும் வரை—அயல் நாடுகளிலிருந்து பெற வேண்டியிருக்கும்.

ஆகவே ஏற்கனவேயுள்ள பழைய ஏற்றுமதித் தொழிற்சாலைகள்—அவைகள் அரசினரிடமிருந்தாலும் சரி, அல்லது தனியாரிடமிருந்தாலும் சரி—அவ்வாறே நீடிக்க வாய்ப்பளிக்கப்படும். அதோடு அவைகளின் வளர்ச்சியில் கருத்தும் செலுத்தப்படும். எங்கள் சிறப் பான ஏற்றுமதிப் பொருள்கள் **ரப்பர், கொப்பரை, தேங்காயெண்ணெய், தேயிலை, சர்க்கரை, காப்பி, கொய்ரு, மிளகு, மண்ணெண்ணெய், தகரம், பாக் சைட்**, மற்றும் **ரோசல்லா, ராமி** முதலிய சிறப்பான தாவ

ரங்கள் ஆகியவைகளாகும். இவை தவிர, **மரம்**, **நார்**, **கோந்து**, **டர்பென்டைன்** முதலிய முதன்மையான காட்டுப்பொருள்களும் கிடைக்கின்றன. இந்த ஏற்று மதிப்பொருள்கள் எவ்வளவு மிகுதியாகத் தயாராகின்றனவோ அவ்வளவு மிகுதியாக இறக்குமதி செய்து எங்கள் நாட்டின் சீரமைப்பிற்கான வேலைகளை விரைவு படுத்த முடியும். தவிரவும் வாழ்க்கைக்கு வாய்ப்பான பொருள்களை விடக் கனரப் பொறிகளுக்கும், ஆரவாரம் மிக்க சொகுசான பொருள்களைவிடத் தொழிற்சாலைகளுக்கும் நாங்கள் முதலிடம் தரவேண்டியுள்ளது.

எங்களது பொருள் வாழ்வு முன்னேற்றத்திற்கு இடையூருகவுள்ளபெரிய தடைகளில் ஒன்று தீவுக்கூட்டம் முழுமையும் ஒரே சீரான மக்கள் தொகை இல்லாமலிருப்பதுதான். மக்கள் தொகையில் பெரும் பகுதி ஜாவாவில் முடங்கியிருக்கிறது. இந்தோனேஷ்யாவின் மொத்த மக்கள் தொகையான எட்டுக்கோடியில் மூன்றில் இரண்டு பகுதினர் ஜாவாவில் வாழ்கின்ருர்கள். ஆனுல் ஜாவாவில் நில அளவோ நாட்டின் மொத்த நில விரிவில் நூற்றில் ஏழு விழுக்காடுதான். ஆகவே ஜாவாவில் மிக மிகுதியான மக்கள் தொகை இருக்கிறது. இங்கு ஒரு சதுர மைலுக்கு கிட்டத்தட்ட 1058 பேர்கள் வாழ்கிருர்கள். இதே நேரத்தில் பிற தீவுகளிலோ மக்கட்தொகை மிகமிகக் குறைவு. சதுரமைலுக்குக் கிட்டத்தட்ட 52 பேர்கள்தான் வாழ்கிருர்கள். மேலும் வெளித்தீவுகளில் சுமார் நூற்றில் 68 விழுக்காடு இன்னும் காடுகளால் மூடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு காரணங்களாலும் உற்பத்தியை, ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் மிகுதிப் படுத்துவது துன்பமாக இருக்கிறது. இதோடு ஜாவாவில் மிக மிகுதியாக மக்கள் நெருக்கமிருப்பதால்,



1. AFFANDI : *Market Place in India*

Collection The Republic of Indonesia

Photo Oliver Baker



2. KARTONO JUDOKUSOMO : *Diang*
Collection President Sukarno

இன்னுமொரு முதன்மையான துன்பமும் இருக்கிறது. அதாவது ஒரு வேளாண்மைக்காரனுக்கு, அரை ஏக்கருக்குக் கூடுதலான நிலம் கிடையாது. இந்த மிகச் சிறிய நிலத்தை வைத்துக்கொண்டு, தன்னையும் தன் சுற்றத்தையும் காப்பாற்றுவது அவனால் முடியாதிருக்கிறது. எனவே சுமார் ஒன்றரைக்கோடிப் பேர்களை ஜாவாவிலிருந்து வெளித்தீவுகளுக்குப் படிப்படியாகக் குடியேற்றுவது கட்டாயமாகிறது. இந்தக் குடியேற்றம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. இதன்படி ஆண்டொன்றுக்கு 5 லக்ஷம் பேர்கள் நாட்டின் பிற பாகங்களில் குடியேற்றப்படுவார்கள்.

ஒவ்வொரு வேளாண்மைக்காரனுக்கும் மிகுதியான நிலங்கள் இருந்தால் அவனது வாங்கும் ஆற்றலும் மிகுதிப்படும். இதனால் பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்கள் உள்நாட்டிலேயே நல்ல விற்பனையைப்பெறும். வெளித்தீவுகளில் காட்டு நிலங்கள், பயிர் செய்யும் நிலங்களாக்கப்பட்டுப் புதிய வாழ்க்கை முறைகள் ஊக்குவிக்கப்படும். இந்தப் புதிய பகுதிகளில் ஒவ்வொருவரும் தனது ஆற்றலுக்கேற்பப் போதுமான நிலங்களிற் பாடு பட வேண்டும். நில்வுடைமை குறைந்த அளவு ஐந்து ஏக்கராக இருக்கலாம். இந்தப் புதிய வேளாண்மைக்காரர்கள், கூட்டுறவுக் கழகங்களை அமைப்பார்களேயானால் கூட்டாகப் பண்ணைக் கருவிகளை வாங்கி, பொதுவில் பயன் படுத்த முடியும். குடியேற்றமும் தொழிற் பெருக்கமும் இணைந்து முன்னேறும். இவற்றோடு நீர்த்தேக்க வாய்ப்புகளும், சாலைகளும் இன்னும் ஏனையப் போக்குவரத்து வாய்ப்புக்களும், தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் தரவல்ல, மின்சார நிலையங்களும் மிகுதிப்படும். இவை யெல்லாம்

ஒன்றோடொன்று இணைந்து புணைந்த சிக்கல்கள். ஏனென்றால் ஒன்றை ஆக்குவதற்கான செயல், பிறிதொன்றின் ஆக்கத்தைக் கட்டாயமாக்குகிறது. சான்றாகப் போதுமான போக்குவரத்து வாய்ப்புகளும் நீர்த்தேக்க அமைப்புகளும் இல்லையென்றால் குடியேற்ற வேலையும் புதிய நிலங்களைப் பண்படுத்தும் வேலையும் நல்ல விதமாக நடைபெறாது.

எங்கள் நிலங்கள் வளம் மிகுந்தும், காடுகள் செல்வம் நிறைந்துமிருப்பதால், நாளாவட்டத்தில் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றில் தன் தேவையை நிறைவு செய்து கொள்ள முடியுமென்று இந்தோனேஷ்யர்களாகிய நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்தோனேஷ்யா, தன்னாட்சி பெற்ற பிறகு ஏற்கனவே இவ்வகையில் மேம்பாடான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நெல் பயிரிடுவதற்குப் புதிய புதிய நிலங்கள் பயன் படுத்தப் பட்டுள்ளன. 1952-ல் இந்தோனேஷ்யா 759,000 டன் அரிசி இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. ஆனால் இந்த ஆண்டு கடுமையான வெள்ளம் போன்ற பெரும் இடையூறுகள் ஏற்படாதிருந்தால் நெல் உற்பத்தியில் பலவாறாகத் தன் தேவையை நிறைவு செய்து கொண்டிருக்க முடியும். எனினும் எதிர்காலத்தில் மிகுதியாக எங்களால் அரிசி உற்பத்தி செய்ய முடியும். இந்த அரிசியை வெளிநாடுகளுக்குக் கொடுத்து, பதிலாகக் கனரகப் பொறியியல் கருவிகளையும், எங்களது தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருள்களையும் பெறுவது உறுதி. இந்த முன்னேற்றமெல்லாம், வெளிநாட்டுக் கடன்களின் உதவியை எதிர்பாராமலேயே, அரசினர் தேவையான

பணம் கொடுத்துதவ, மக்களின் சொந்த முயற்சியாலேயே செய்து முடிக்கப் பட்டதாகும்.

இரண்டாவது உலகப் பெரும் போரின் போது நாட்டை ஜப்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டிருந்த காலத்தில், ஆடைகள் நெய்வதற்கான, பொருள்களை இறக்குமதி செய்ய முடியாதிருந்தது. இதனால் இந்தோனேஷ்யர்கள் அப்போது போதுமான உடையின்றி அல்லலுற்றனர். இந்தத் துன்பங்களை எல்லாம் கருத்தில் வைத்து, இப்போது நெசவுதொழிலைச் சீரமைப்பதற்கு நாங்கள் முதன்மை இடம் கொடுத்திருக்கிறோம். இந்தத் தொழிற்றுறை சார்பாகப் போடப் பட்ட திட்டங்களும் எதிர்பார்த்ததைவிட விரைவாக நிறைவேறி வருகின்றன. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு, ஜாகர்தா கூட்டுறவுப் பஞ்சாலைக் கழகமாகும். இந்தக் கழகம் இந்தோனேஷ்யப் பெண்களின் நாட்டு உடைகளுக்கான மெல்லிய நூல்களை மிகுதியாக உற்பத்தி செய்கின்றது.

இந்தோனேஷ்யாவின் இயற்கைச் செல்வங்கள் எமது நாட்டிற்கு மிகப்பெரியதொரு பொருள் நிலை வலிமையை அளிக்கின்றன. ஆனால் முறைப்படி, திட்டப்படி அவற்றை வளர்ச்சி செய்ய முற்படும் போது, எளிதாகச் சமாளிக்க முடியாத பல துன்பங்களை எதிர் நோக்குகிறோம். இத்தகைய இடுக்கண்களில் சிறப்பானவை; ஒன்று, பொருட் தேவை ; இரண்டு, தொழில் நுட்ப நிபுணர்கள் இல்லாமை ; மூன்று ; பற்றுக்குறையான வரவு செலவுத் திட்டம்.

இவை எல்லாவற்றிலும் முதலீடு அமைப்புதான் மிகப்பெரிய சிக்கலாகும். அயலவரின் முதலீடுகளை-

அவைகள் மக்களைச் சுரண்டாமல் நன்மை செய்வதாக இருந்தால்—அவற்றை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் தீ வினைப்பயனால் தேவைப்படும் பொருள் முழுமையையும் வெளி நாடுகளிலிருந்து பெற முடியாதிருக்கிறோம். இதில் ஒரு பகுதியாவது உள் நாட்டு முதலீடாக இருக்கவேண்டும். ஆனால் அது தான் இந்தோனேஷியர்களிடம் கிடையாது. எங்கள் நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அடிப்படைத் தொழிலின் பெரும்பான்மையான கண்காணிப்பு இந்தோனேஷியர்களிடம் தான் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம். ஆனால் அயல் முதலீட்டுக்காரர்கள் இந்தக் கட்டுப்பாட்டை எப்போதுமே ஏற்பதில்லை. அதற்குப்பதில் இச்செயலில் தங்கள் விருப்பம்போல் நடந்து கொள்ளும் உரிமை வேண்டு மென்று அவர்கள் கேட்கிறார்கள். எனவே இந்நிலையில் அரசினர் மிகுதியாக இசைவுதரக்கூடியது கூட்டுத் தொழில் அமைப்புதான். இவற்றிற்கான பொருளில் பாதியை அரசினரும், மற்றொரு பாதியை அயல் முதலீட்டுக்காரர்களும் செலுத்த வேண்டும்.

இது ஒரு புறமிருக்க, நாங்கள் வகுத்துள்ள குடி பெயர்ப்புத் திட்டத்திற்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் வேண்டியதிருக்கும். அந்தப் பெரும்பொருளை பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்குக் குறைவான காலத்தில் திருப்பிக் கொடுக்க இயலாது. ஏனென்றால் புதியதாகக் குடிபெயர்ந்த பகுதிகளிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு தான் இந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆனால் இத்தகைய நீண்ட காலத் தவணையில் பொருளீடு செய்வதற்கு அயல் பொருளாளர்கள் விரும்ப வில்லை.

இதனல் இந்தத் திட்டம் மெதுவாக, மிகச் சிறிய அள விலேயே நடைபெற்று வருகிறது. நாட்டின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து பணம் ஒதுக்கப்பட்டு ஆண்டு ஒன்றிற்குக் கிட்டத்தட்ட ஐயாயிரம் பேர்கள் தான் குடிபெயர்ப்புச் செய்யப்பட்டு வருகிருர்கள். மேலும் சாலைகள் அமைப்பதற்கும், மரங்களை வீழ்த்து வதற்கும், நிலங்களைச் சமன் செய்வதற்கும் தேவை யான **புல்டோஜர்கள்** போன்ற கருவிகளை . இன்னும் வாங்க முடியாத நிலையிலிருக்கிறோம். காடுகளை அழித்து பயிர்த்தொழிலுக்குத் தகுதியாக்குவது, தோட்டங்களை யும் நெல்வயல்களையும் பண்படுத்துவது, நீர்ப்பாசன வாய்க்கால்களைத் தோண்டுவது, முதலிய கருவிகளால் செய்யப்பட வேண்டிய கடுமையான வேலைகளெல் லாம் கூட இன்னும் உடல் வலுவைக்கொண்டு மண் வெட்டிகள் கோடாரிகள் முதலியவற்ருல்தான் செய் யப்படுகின்றன. வீடுகள் கட்டுவதும் கூட பழைா முறையிலேதான் நடைபெறுகின்றது. இது போன்ற காரணங்களால், எங்களது புதிய குடிபெயர்ப்புத் திட்டம் வெகு தொலைவு பின் தங்கியுள்ளது.

இது போக நிபுணர்கள் பற்ருக்குறையும் ஒரு கடுமையான சிக்கல்தான். இந்த முதன்மையான எங்களுக்குத் தொல்லை தந்துவரும் சிக்கலுக்கு நல்ல தொரு முடிவுகாணச் சில செயல் முறைகளை மேற் கொண்டு வருகிறோம். பல்வேறு துறைகளின் நுணுக் கங்களைக் கற்றுவர மிகுதியான இந்தோனேஷ்ய மாணவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி வருகிறோம்; முடிந்த மட்டும் பல தொழில் நுட்பப் பள்ளிகளை நிறுவி வருகிறோம்; இன்னும் சில நிபுணர்களை அயல் நாடுகளிலிருந்து வரவழைத்து வருகிறோம். நிபுணர்கள்

இல்லாக்குறை, உற்பத்தியின் அளவையும், தகுதியை யும் வெகுவாகக் குறைத்து விடும். திறமையாக வழி காட்டக் கூடிய நிபுணர்கள் இருந்தால், உற்பத்தியை வேண்டிய அளவில் பெருக்க முடியும் என்பதை இந்தோனேஷ்யாவிலேயே உள்ள அயல் நிறுவனங்களின் செயலறிவு நமக்குக் காட்டுகின்றது.

கடைசியாகப் பற்ருக்குறை வரவு செலவுத் திட்டம் ஒரு முக்கிய சிக்கல். உண்மையில் கடன் தொகைகளைக் கொண்டு நிறைவேற்றப் பட வேண்டிய பல முன்னேற்றத் திட்டங்கள், நாட்டின் வருவாய்களிலிருந்து பணம் எடுத்து நிறைவேற்றப்படுகின்றன. இது நாட்டின் வரவு செலவுத் திட்டத்தின் மீது ஒரு பெரும் பளுவைச் சுமத்துகிறது. இதனல் ஆண்டுக்காண்டு செலவினங்கள் மிகைப்பட்டுக்கொண்டு செல்கின்றன. அந்த அளவிற்கு வருமான இனங்கள் உயராமல், துண்டு விழும் தொகை பெருகிக்கொண்டே போகிறது. ஒரு பணக்கார நாடாக இருந்தால், தங்கள் இருப்பு முதலைப் பொருளீடு செய்யக் கூடிய மக்கள் தொகை மிகுதியாக இருக்கும். அத்தகைய நாடுகளில் உள்நாட்டுக் கடன்கள் எழுப்பிப் பற்ருக் குறை வரவு செலவுத் திட்டத்தைச் சரிக்கட்டுவது இயன்றதொன்று. ஆனல் இந்தோனேஷ்யாவில் இது முடியாது, எனவே இறுதியில் வேறு வழியின்றித் துண்டு விழும் தொகையை ஈடுகட்ட இந்தோனேஷ்யாவின் சென்ட்ரல் பாங் (Bank Indonesia) கிலிருந்து கடன் வாங்கவேண்டியிருக்கிறது. அதாவது வேறு விதமாகச் சொன்னல், மிகுதியான நோட்டுக்களை அச்சடிக்க வேண்டியிருக்கிறது. இது பணவீக்கத்தைத் தோற்றுவித்து, மற்றெரு துன்பமிகு சிக்கலுக்கு வழி கோலிவிடுகிறது.

இந்நிலையில் மிகுதியான உற்பத்தி ஒன்றின் மூலம் தான் இந்தப் பற்ருக் குறைப் பொருள் நிலையைச் சீர் செய்ய முடியும். ஆனல் இது உடனடியாக நிறை வேற்றி விடக்கூடிய செயலல்ல. இதற்குச் சில காலம் பிடிக்கும். இதற்கிடையே இந்தப் பற்ருக் குறையினல் ஏற்பட்டுள்ள பண வீக்கத்தைச் சமாளிக்க ஒரே வழி, ஒன்று அல்லது நான்கு ஆண்டுகள் தொடர்ந்தாற்போல், அயல் நாடுகளிலிருந்து நீண்ட கால அடிப்படையில் கடன்கள் வாங்குவதுதான். இந்தக் கடன்கள் கனரக, பொறி இயற் கருவிகள் முதலியன வாங்குவதற் காகவும், மற்றும் மக்களுக்குத் தேவையான பயன்படும் பொருள்களை வாங்குவதற்காகவும் இருக்கவேண்டும். அரசினர் இந்தக் கடன்களைக் கொண்டு வெளி நாடுகளில் சரக்குகள் வாங்கி, நாட்டிலுள்ள வாணிப நிலையங்கட்கும் கூட்டுறவு கழகங்களுக்கும் விற்கலாம். இது செலாவாணி யின் புழக்கத்தைக் குறைக்கும். இவ்வாறு புழக்கத்தி லிருந்து திரும்பப் பெறப்படும் தொகையைத் துண்டு விழும் வரவு செலவு திட்டத்தைச் சரிக்கட்டப் பயன் படுத்தலாம். இதோடு பங்கீடு செய்வதில் சரியான கண்காணிப்பு இருக்குமானல் பொருள்களின் விலை நிலைமைகளும் குறையும்.

ஆக, இந்தோனேஷ்யாவின் வலுவையும் வலு வின்மையையும் படம் பிடித்துக் காட்ட இதுவரை கூறி வந்துள்ள சுருக்கமான விளக்கங்கள் போதுமென்று நினைக்கிறேன். இந்தோனேஷ்யாவின் வலிமை அதன் இயற்கைச் செல்வங்களில் இருக்கிறது. இயற்கை வளத்திலும் மண் செழிப்பிலும் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் அடுத்த இடத்தை ஏற்கிறது எங்கள் நாடாகிய இந்தோனேஷ்யா. மொத்த உலக ரப்பர்

உற்பத்தியில் நூற்றுக்கு 40 விழுக்காட்டை உற்பத்தி செய்கிறது. இன்னும் ஏனைய பல பொருட்களின் உலக உற்பத்தியில் எங்கள் நாட்டின் பங்கு வருமாறு:— கொப்பரை 33 விழுக்காடு, மிளகு 30 விழுக்காடு, தேங்காயெண்ணெய் 24 விழுக்காடு, தேயிலை 6 விழுக்காடு, சர்க்கரை 2 விழுக்காடு, நார்ப்பட்டு 6 விழுக்காடு, மண்ணெண்ணெய் 1½ விழுக்காடு, தகரம் 20 விழுக்காடு, இவை தவிர நிலக்கரி, பாக்சைட், மாங்கனீஸ், பித்தளை, நிக்கல், தங்கம், வெள்ளி முதலிய முதன்மைப் பொருள்களும் கிடைக்கின்றன. இவை இந்தோனேஷ்யாவின் வலுவைக் குறிக்கும் ஆக்கப் பொருள்கள் ஆகும். பொருள்நிலை வலுவின்மையைக் குறிப்பவை குறைவு. அவையும் முன்னரே குறிப்பிட்டது போல பொருளீடுகள், நிபுணர்கள் பற்ருக் குறை; பற்ருக் குறை வரவு செலவுத் திட்டம் போன்ற பல பொருள்நிலை துன்பங்களுமாம்.

இந்தோனேஷ்யாவின் வளர்ச்சிப் பெருக்க ஆற்றல் வலுவடைந்து கொண்டு போகிறது. சிறப்பாக இதனைக் கூட்டுறவுத் துறையிற் பார்க்கலாம். இதனை 1939-ம் ஆண்டையும் 1954-ம் ஆண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் சான்று காணலாம். 1939-ல் 574 கூட்டுறவுக்கழகங்களும் அவற்றில் 52,261 உறுப்பினர்களும் தான் இருந்தார்கள் ஆனல் 1954 லோ இவை 9614 கூட்டுறவுக் கழகங்களாகவும் 1,648,037 உறுப்பினர்களாகவும் பெருகிவிட்டன. இதோடு நடை முறைப் பொருள்களும், ஒதுக்கி இருப்புக் கட்டப் பட்டவையும் கூட மிகுதிப்பட்டு வருகின்றன. இந்தத் தொகை இன்னும் ஒவ்வொரு திங்களும் உயர்ந்து வருகிறது. ஆண்டுதோறும் ஜுலை 12-ம் நாள் நாட்டின் கூட்டுறவு

இயக்க நாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளை யொட்டி ஒரு கிழமை முழுவதும் சேமிப்பு இயக்கமும், போட்டியும் நடத்தப் படுகின்றன. இந்த ஒரு கிழமையில் எந்த ஒரு கூட்டுறவுக் கிளையானது மிகையாகச் சேமிக்கின்றதோ; அதற்குப் பரிசளிக்கப்படுவதோடு அந்தக் கிளையின் திறன் நாடு முழுதும் அறிவிக்கப்படுகிறது. ஆண்டுக்காண்டு கூட்டுறவுப் பொருளமைப்பில் வந்து குவியும் பொருள் நிறைவளிக்கிறது. இந்த இயக்கம் எதிர்காலக் கூட்டுறவு ஆட்சியாளர்களை பயிற்றுவிக்கச் சொந்தப் பள்ளியே நடத்துகிறது.

இந்தோனேஷ்யா, தனது பொருள் நிலையைச் சீரமைப்புச் செய்வதற்குத் தேவைப்படும் மூலதனத்தோடு ஒப்பிடும் போது, கூட்டுறவுக் கழகங்களிடமுள்ள பொருள் சிறுமையாகத் தோன்றலாம். ஆனல் பெரும்பாலான ஏழைமக்களிடமிருந்து உருவானது இச்செல்வம் என்பதை நினைக்கும் போது; தங்களது தன் முயற்சியால் தங்களது வாழ்வை வளமாக்கிக் கொள்ள வேண்டு என்னும் ஊக்கம் எவ்வளவு உறுதியாக இவர்களிடம் உள்ளது என்பது தெரிகிறதல்லவா? மக்களிடையே உள்ள இந்த உணர்வு, இந்தோனேஷ்யாவின் பொருள் நிலைச் சிக்கல்கள், முடிவாக வெற்றி காணப்படும் என்னும் நம்பிக்கையை எங்களுக்குத் தருகிறது.

# 5. விடிவுக்கு முன் பிறந்தவன்

எழுதியவர் :

## பிரமோத்யா ஆனந்தா டோயர்

நான் பிறப்பதற்கு முன்பு எனது தந்தை **புளோரா**வில் ஒரு சிறு பள்ளிக்கூடத்தைத் தொடங்கியிருந்தார். நான் சிறுவனுக இருந்தபோது எங்கள் வீடு எப்போதும் ஒரே கூட்டமாக இருக்கும். காரணம், என்னை விட ஆண்டில் மூத்தவர்களான சில மாணவர்கள் எங்களோடு தங்கியிருந்ததே. இவர்களில் ஹூரிப்பும் ஒருவன். ஹூரிப்பை நான் என்றுமே மறக்க முடியாது. எனக்கு ஏழு அல்லது எட்டு ஆண்டாக இருக்கும்போது அவன் எங்களோடு வந்து சேர்ந்தான். இது போருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றதாகும்.

வீட்டிலிருந்த மற்றவர்கள் அவனிடம் அன்பு செலுத்தினார்கள். ஏனென்றால் அவன் ஏற்கனவே உயர்நிலைப் பள்ளித் தேர்வில் வெற்றி பெற்றிருந்தான். அதோடு அவன் பிறரைவிடப் பல செய்திகளைத் தெரிந்து வைத்திருந்தான். எனவே அவன் பேசும்போதெல்லாம் ஒவ்வொருவரும் உன்னிப்போடு கேட்டார்கள். அவன் சொன்ன பல செய்திகள் அப்போது எனக்கு ஒன்றும் விளங்கா விட்டாலும் கூட, அவைகளில் பெரும் பாலானவை இன்னும் என் உள்ளத்திலே பதிந்து இருக்கின்றன.

அதிலும் குறிப்பாக ஒரு நாள் இரவு அவன் பேசிய பேச்சு நன்றாய் நினைவிலிருக்கிறது. அவன் அப்போது கூறினான்: "நாம் தூங்கியது போதும், இனி விழிப்படைய வேண்டும். 'அரசினரின் ஊழியராக வேண்டும்' என்னும் எண்ணத்தை முதலில் ஒழித்துக் கட்டவேண்டும். நம்மையெல்லாம் பெரிய ஆட்சியாளராக்கி, வீடுவாசல்களோடு வாழ வைக்க வேண்டும் என்பதற்காக டச்சுக்காரர்கள் இங்கு வரவில்லை. நம்மிடமிருந்ததையெல்லாம் அவர்கள் பறித்துக் கொண்டு விட்டார்கள். இப்போது வரிகள் போட்டு மேலும் உறிஞ்சுகிறார்கள். இனி ஒன்று வரிகட்ட வேண்டும், அல்லது சிறைக்குச் சென்று வீணாக உழைக்க வேண்டும் என்ற நிலையிலிருக்கிறோம்."

மறுநாள் என் தாயிடம் சென்று "நேற்று ஹாரிப் என்னவோ பேசினானே, அது என்னம்மா," என்று கேட்டேன். "உரிய காலம் வந்ததும் உனக்குத் தெரிய வரும். இப்போது நீ சிறுவன்தானே," என்றாள். எனக்கு மட்டுமின்றி என் விளையாட்டுத் தோழர்களுக்கும் ஹாரிப் பேசியது ஒன்றும் புரியவில்லை. எங்கள்

வேலைக்காரன் **ஜோங்கோஸால்** கூட அவனது பேச்சுக்கு விளக்கம் கூற முடியவில்லை.

முடிவில், ஹாரிப் ஒரு அரசியற் கட்சியிலிருப்பதாக என் தாய் கூறினாள். எனக்கு வியப்பாக இருந்தது. ஏனென்றால் அரசியல் என்றால் காவற்படை (Police) என்று தான் நான் நினைத்தேன். எங்கள் வீட்டிலிருந்த ஒவ்வொருவரும் காவற்படையை வெறுத்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அவ்வாறிருக்க ஹாரிப் இதில் எவ்வாறு சேர்ந்தான் என்பது எனக்கு வியப்பாக இருந்தது. எனவே அவன் காவற்படையில் இருப்பதைக்கண்டு அப்பா சினமடையவில்லையா என்று அம்மாவிடம் கேட்டேன். இதன்பேரில், அரசியற் கட்சியிலிருக்கும் ஒவ்வொருவரும் காவற்படையின் பகைவர் என்பதை அம்மா விளக்கமாக எடுத்துரைத்தாள்.

இதைக்கேட்டு மகிழ்ச்சியுற்று, என் நண்பர்களிடம் தெரிவிக்க ஓடினேன். ஆனால் காவற்படையையும் அரசியலையும் பற்றி நான் பேசத் தொடங்கியதும் அவர்கள் நகைத்தார்கள். வேலைக்காரன் ஜோங்கோஸும் நான் கூறியதை நம்பவில்லை. எனக்கு ஒரே குழப்பமாகப் போய்விட்டது. எனினும் தாயார் கூறியது உண்மையாகவே இருக்கும் என்று பட்டது.

பிறிதொரு நாள் மாலையிலும் ஹாரிப் அரசாங்க எழுத்தாளர்களைப்பற்றிப் பேசினான். "பிறரைவிடத் தாங்கள் நலமாக இருப்பதாக எண்ணிக்கொண்டு இந்தக் குட்டி ஆட்சியாளர்கள் பயனற்ற வாழ்வு வாழ்கிறார்கள்," என்று கூறியதோடு மேலும் சொன்னான்: "ஒரு அரசாங்க எழுத்தாளன் நாள்தோறும் காலையில் வீட்டைவிட்டுக் கிளம்புகிறான். பல மணி

நேரம் அலுவலகத்தில் உட்கார்ந்து வேலை செய்த பிறகு வீடு திரும்புகிறான். இப்படியே ஆண்டாண்டுக் காலம் கருவிகள்போலச் செயல்படுகிறான். எப்போ தாவது ஒரு நாள் மனைவியோடு கொஞ்சினால் ஒரு குழந்தை பிறந்து விடுகிறது. ஆனால் குடும்பத்தை வாழ் விக்கப் போதிய அளவு வருமானம்தான் இல்லை. ஒரு பிடி புல்லும், ஒரு வாளி தண்ணீரும், ஒதுங்கி யிருக்கச் சிறிது இடமும் கிடைத்து விட்டால் போதும், வண்டியிழுக்கும் ஒரு குதிரைக்கு. இத்தகைய ஒரு குதிரையின் வாழ்க்கைதான் வாழ்கிறான் அரசினரின் ஊழியன் ஒருவன். மேலாளர் சிறிது புன்னகைபுரிந்துவிட் டால்போதும் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து விடுகிறான். ஆனால் அந்த மேலாளர் சிடுசிடுப்பாக இருக்கும் காலத் திலோ ஊழியனின் நிலை அடிபட்ட நாய்போலாகிவிடு கிறது. அவனது ஊதியம் அரைத்திங்களுக்குக்கூடப் போதவில்லை. அவன் வாழ்க்கை முழுவதும் இதே கதை தான். குழந்தைச் செல்வத்திற்கு என்னவோ அவ னுக்குக் குறைவில்லை. ஆனால் இத்துணை வாய்களுக்கும் உணவளிக்கத்தான் அவனுக்கு வருவாயில்லை. ஆகவே நம்மைப் போலவே அவர்களும் போராடவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.''

இவ்வாறு ஹுரிப் மூச்சு விடாமல் பேசியதைக் கேட்டு, மற்றவர்கள் தலையாட்டினார்கள். எனக்கோ இவற்றையெல்லாம் விளங்கிக்கொள்ள வேண்டுமென்று ஆவல். அதிலும் அரசினரின் ஊழியன் தனது மனைவி யிடம் கொஞ்சுவதைப்பற்றிய செய்தி என் எண்ணத்தில் சுழன்றுகொண்டே இருந்தது. எனவே உணவு முடிந் ததும், அம்மாவிடம் இதைப்பற்றிக் கேட்டேன். "அரசி னரின் ஊழியன் ஒருவன் தனது மனைவியிடம் கொஞ்சும்

போதெல்லாம் ஒரு குழந்தை பிறப்பது உண்மைதானா அம்மா?'' என்று ஐயமாகக் கேட்டேன். உடனே தாயாருக்கு மிகுதியான சினம் வந்துவிட்டது. அம்மா சீற்றத்துடன் இருப்பதை இப்போதுதான் முதல் தடவையாகப் பார்த்தேன். பேசாமற்போய் பாடங்கள் படிக்குமாறு அவள் என்னைக் கடிந்துகொண்டாள். நான் மீண்டும் இதைப்பற்றி வினவத்தொடங்கியதும் அவள் என்னை அறைக்கு வெளியே பிடித்துத் தள்ளிவிட்டாள்.

குழந்தைகளாகிய எங்களுக்குக் கூட எங்கள் ஊர் மிகவும் அமைதியாக, ஊக்கமில்லாதிருந்தது. பொதுவில் நடக்கக் கூடாதது எதுவுமே நடக்கவில்லை. ஆனால் ஓராண்டில் சில மாறுதல்கள் தென்படத் தொடங்கின. எங்கும் ஏதோ ஒருவகைப் பரபரப்பு நிலவி நிற்பது தெரிந்தது. அரசாங்க எழுத்தாளர்கள், வாணிபம் செய்பவர்கள், சந்தைக்கு வரும் வேளாண்மைக்காரர்கள் முதலிய ஒவ்வொருவரும் முற்றிலும் மாறுபட்ட முறையில் ஏதேதோ பேசிக்கொண்டார்கள். எங்கள் வீட்டிலிருந்த மாணவர்கள்கூட ஜப்பான், இந்தியா வென்றெல்லாம் என்னவோ பேசினார்கள். நான் இதுவரை கேள்விப்பட்டிராத 'தாய்நாடு, கட்டுடன் மறுத்தல், மரபுப்பண்பு, ஒற்றுமை,' முதலான எனக்கு வியப்பைத் தருகிற பல சொற்களைப் பயன்பதித்தினார்கள்.

விரைவில் என் கண்முன்னாலேயே பல மாறுபாடுகளைக் கண்டேன். முதலில் கிராமங்களில் உதைபந்துக் கழகங்கள் ஏற்பட்டன. பிறகு குழந்தைகளுக்குமாகச் சேர்த்துப் பல விளையாட்டுக் குழுக்கள் தோன்றின. இதற்குப் பிறகு இசைக் கருவிக் குழுக்கள், பொம்மை நிழல் நாடகக் குழுக்கள் முதலிய பல்வேறு பண்பாட்டுக் கழகங்கள் தோன்றின. இந்தக் கழகங்களைச் சேர்ந்த

பெரும்பாலான உறுப்பினர்கள் அரசினரின் எழுத்தாளர் கள். என் தந்தை இத்தகைய கழகங்கள் ஏற்பட மிகவும் உதவி செய்தார். என்து தாயார் பல பெண் களைத் திரட்டி, அவர்களுக்கும் இது போன்ற கழகங்கள் ஏற்பட வழிவகை செய்தாள். சிறுவர்களாகிய நாங்கள் தொண்டர் படையில் (Scout), சேர்ந்தோம். எங்களில் சற்று வயது வந்த வாலிபர்கள் கூடாரத் தங்கலில் எரி வளர்ப்பின்போது மதிப்பியலான தொண்டர்களாக உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

டச்சுக்காரர்களைப் பற்றி இப்போது பலவாருகப் பேசிக்கொள்ளப்பட்டது. நான் இதுவரை கேட்டிராத முறையில் 'கொள்ளைக்காரர்கள், திருடர்கள், பொய் யர்கள்,' என்றெல்லாம் மக்கள் அவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். 'இந்த ஐரோப்பியர்கள் இங்கு என்றைக்குமே நிலையாக இருந்துவிட முடியாது,' என்று என் தந்தை எனது தாயிடம் அப்போது கூறியது இன் னும் எனக்கு நினைவிருக்கிறது, இதனை ஏற்றுக்கொள் வதுபோல என் தாயும் தலையாட்டினுள். அவளது கண்கள் சிறிது மங்கியிருந்தன. என் தந்தையை நோக்கிச் சிரித்தவாறு நின்றுகொண்டிருந்த அவளை நான் கூர்ந்து பார்த்தபோது, விரைவிலேயே அவள் ஒரு தங் கையையோ, தம்பியையோ பெற்றெடுக்கப் போகிருள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

ஒரு நாள் தாய் கேட்டாள்; "நீ பெரியவனுனதும் எவ்வாறு இருக்க விரும்புகிருய்?" என்று.

"ஒரு வேளாண்மைக்காரனுக," என்று நான் விரை வாகப் பதிலளித்தேன்.



3. OTTO DJAJA: *Dream of Maya* Photo Oliver Baker
Collection The Repuplic of Indonesia



4. ANONYMOUS BALINESE PAINTER: *Scenes from a Hindu Legend*
Collection Mr. & Mrs. Lothar Wolff, New York — Photo Alexander Marshack

"வேளாண்மைக்காரனுகவா !" மிகவும் வியப்போடு கேட்டார் தந்தை.

"ஆம்," என்று மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கூறினேன்.

"அவ்வாருனல் இப்போது முதலே உனது சோம்பேறித்தனத்தை விட்டுவிடவேண்டும்," என்ருர் சிரித்துக் கொண்டே.

இதற்குப் பிறகு வீட்டிற்குப் பின்னுல் எனக்குச் சிறிது நிலம் கொடுக்கப்பட்டது. என்னை ஒரு வேளாண்மைக்காரனுக எண்ணிக்கொண்டு ஆங்காங்கே பள்ளங்கள் தோண்டத் தொடங்கினேன், தாயும் என்னை மிகவும் ஊக்கு வித்தாள். "கைகளையும் மூளையையும் கொண்டு வேலை செய்வது நல்லது," என்று கூறினுள். "நீ பெரியவனுகும்போது டச்சுக்காரர்கள் நம் நாட்டை ஆளமாட்டார்கள். எனவே இப்போதே நன்ருக வேலை செய்யப் பயின்று கொள்ள வேண்டும். ஏனென்ருல் அப்போது உன் போன்றவர்களுக்குச் செய்வதற்கு நிறைய வேலை இருக்கும்," என்ருள்.

அதோடு எனது தந்தையும் ஏதோ விதைகள் விதைத்து வருவதாக என் தாய் தெரிவித்தாள். இவைகள் பெரிய மரங்களாக வளர்ந்து, எப்போதும் உண்ணக்கூடிய முறையிற் பழங்களைத்தரும் என்றும் கூறினுள். ஆனுல் இவ்வாறு நிலையாகப் பழங்களைத் தரும் அந்த வியத்தகு மரம் எதுவாக இருக்கும், என்பதை என்னுல் உருவகப் படுத்திக்கூடப் பார்க்க முடியவில்லை. இந்தப் பழங்கள் **முலாம்** பழங்களாக இருக்குமோ என தாயிடம் கேட்டேன். "அவ்வாறெல்லா

மில்லை, இந்த பழங்களை நீ இதற்கு முன்னர் எப போதுமே பார்த்திருக்க முடியாது. ஆனால் நீ பெரிய வனானதும் இந்தப் பழங்கள் என்ன வென்பதைத் தெரிந்து கொள்வாய்,'' என்றாள் என் தாய்.

இதுபோக இன்னுமொரு மாற்றத்தையும் நான் கவனித்தேன். அதாவது கிராமங்களில் கையால் நெய்யக்கூடிய முரட்டு **லூரிக்** துணிக்குத் திடீரெனப் பெருமதிப்பு ஏற்பட்டது. எனது தாயாரும் லூரிக் உடைகளையே உடுக்கத் தொடங்கினாள், ஆனால் எனக்கு அந்த துணி பிடிக்கவில்லை. அது மிகக் கரடு முரடாகவும் விரைவில் நிறம் மாறக்கூடிய தாகவும் இருந்தது. ஹரிப் எனக்கு இதைப்பற்றி விளக்கிக் கூறினான்.

"இந்தியாவில் **கதர்** என்றழைக்கப்படும் இதே லூரிக் துணியையே அணிகிறார்கள்; அயல் நாட்டுத்துணி களை யெல்லாம் நெருப்பிலிட்டுக் கொளுத்துகிறார்கள்,'' என்றான், "இது என்ன அறிவில்லாச் செய்கை! நான் அயல் நாட்டுத்துணிகளையே விரும்புகிறேன்,'' என்றேன். நான் இவ்வாறு கூறியதைக் கேட்டதும், அனைவரும் நகைத்தனர்.

நான் ஏதோ தவறுதலாகப் பேசிவிட்டதாக எனக் குப் பட்டது. எனவே பாதி வெட்கத்தோடும், பாதி துக்கத்தோடும் என் தலையைக் கவிழ்த்துக்கொண்டேன். ஆனால் ஹரிப் என்னைத் தன்மடியில் தூக்கிவைத்துக் கொண்டு "நாமனைவரும் லூரிக் துணியைத்தான் பயன் படுத்த வேண்டும்; அயல் நாட்டுத்துணிகளைப் பயன் படுத்தக்கூடாது. லூரிக்கைப் பயன் படுத்துவதால் அதனை நெய்யும் மிகுதியான ஏழைகளுக்கு வாழ்வு கிடைக்கும். இதற்குத் 'தாய்நாட்டு இயக்கம்' எனப் பெயர்,'' என்று தெளிவாக விளக்கினான்.

கைத்தறி நெசவு செய்யும் ஒரு கிழவி கிராமத்தி லிருந்து அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்தாள். அவள் வரும் போதெல்லாம் என் தாயார் அவளிடம் லூரிக் துணி வாங்கினுள். தான் சிறு பெண்ணுக இருந்தபோது நடந்ததுபோலவே இப்பொழுது லூரிக் துணிக்கு மிகவும் மதிப்பு ஏற்பட்டு வருவதாகவும்; நெசவாளர்கள் தற் பொழுது இரவு பகலாக வேலை செய்கிருர்கள் என்றும் கிழவி கூறினுள். தாய்நாட்டு இயக்கம்தான் இதற்குக் காரணம் என்று கூறி என் தாய் சிரித்தாள். "இந்த இயக்கம் பற்றித்தான் கிராமம் முழுவதும் பேச்சாக இருக்கிறது. இந்த இயக்கம் கிராம மக்களுக்கு நல்ல நன்மை செய்திருக்கிறது. சில நெசவாளர்கள் சொந்த மாகவே பருத்தி உற்பத்தி செய்யத் தொடங்கியிருக் கிருர்கள். பழைய **மோட்டார் டயர்**களிலிருந்து மிதியடி தைக்கும் தொழிலாளி இப்போது 15 தொழிலாளர்களை வைத்துத் தொழில் செய்கிருர். கிழமைதோறும் நூற்றுக் கணக்கான செருப்புகளைக் கூட்டுறவு கழகங்களுக்கு விற்கிருர்." இதைக் கிழவி பெருமையோடு கூறினுள். என் தாய்க்கு மட்டற்ற மகிழ்ச்சி. கிழவிக்கும் ஒரே நிறைவு — மகிழ்ச்சி.

கிழமைகள் செல்லச் செல்ல எனது தாயின் உடல் மேலும் மேலும் பளுவாகிக்கொண்டே வந்தது. அவள மிகுதியாக நடமாடுவதுமில்லை. அவள் வாங்கி வந்த தறி, வேலை செய்யப்படாமல் அப்படியே இருந்தது. அவள், அதில் நெய்வதற்குப் பதிலாகத் தோட்டத்தை எதிர் நோக்கியிருந்த முற்றத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு எதையோ எந்நேரமும் படித்துக்கொண்டிருந் தாள். என் தந்தையும் வீட்டில் பெரும்பாலும் இருப்ப தில்லை. இது குறித்துப் பலமுறைகள் தாயாரிடம் கேட்டபொழுது, தந்தை எதிர்காலத்திற்கான ஏதோ

விதைகள் விதைத்துக் கொண்டிருப்பதாகச் சிரித்துக் கொண்டே கூறினாள்.

நாளாவட்டத்தில் எங்கள் வீடு ஒரு அலுவலகம் போலாகிவிட்டது. நாள் முழுவதும் சில நாட்களில் இரவு முழுதும்கூட தட்டெழுத்துப் பொறிகள் (type-writers) ஒலித்துக் கொண்டிருக்கும். எங்கு நோக்கினும் காகிதங்கள் குவிந்திருக்கும். மாலைப் பொழுதில் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள வருபவர்களையும் சேர்த்து என் தந்தையின் பள்ளியில் இப்பொழுது பல பெரிய மாணவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 400 ஆகப் பெருகிவிட்டது. இவர்களில் பத்துப்பேர் மட்டும்தான் டச்சுமொழி கற்றுக்கொண்டார்கள். இவர்கள் அனை வரும் அரசினர் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் என்று எண்ணுகிறேன்.

இவற்றையெல்லாம் கண்டு எனக்கு ஒருவிதக் கிளர்ச்சி உண்டாயிற்று. அதிலும், என் தந்தை, ஊரில் ஒரு சிறப்பான மனிதராக மதிக்கப்பட்டார். மக்கள் அடிக்கடி அவரது மகனென்று என்னைச் சுட்டிக் காட்டினார்கள். சில வேளைகளில் என்னை நிறுத்தியும் பேசினார்கள்.

இதைவிட எனக்கு இன்னொரு நிகழ்ச்சி வியப்பாக இருந்தது. அதாவது பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் காவற்படையைச் சேர்ந்த இரண்டு அல்லது மூன்று பேர்கள் மிதிவண்டியில் (bicycles) மெதுவாக எங்கள் வீட்டை கடந்து செல்கையில் கதவுகள், சாளரங்கள் வழியாக உள்ளே பார்க்க முயற்சிப்பார்கள். இவ்வாறு காவற்படையினர் ஏன் செய்கிறார்கள் என்று அம்மா விடம் கேட்டேன்.

"தந்தை செய்யும் செயல்களை அவர்கள் விரும்பவில்லை," என்று அவள் பதிலளித்தாள்,

"தந்தையார் என்ன பள்ளியாசிரியர் தானே?" என்றேன் நான்.

"அதனால்தான் அவர்கள் நம் வீட்டைக் கண்காணித்து வருகிறார்கள். நம் மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை," என்றாள் அம்மா.

அடுத்த சில கிழமைகளில் சிறப்பான நிகழ்ச்சி எதுவும் நிகழாததால் காவற்படையைப் பற்றியே நான் மறந்துபோய்விட்டேன்.

பின்னர் ஒரு நாள் என் தந்தை வழக்கத்திற்கு மாறாக வெகு விரைவாக வீடுவந்து சேர்ந்தார். அவரது முகம் வெளிறிப்போய் களைப்படைந்திருந்தது. நோய் வாய்ப்பட்டவர்போல் காணப்பட்டார். ஆனால் என் தாய் "உடல் நலமில்லையா?" என்று கேட்டதற்கு நிமிர்ந்து பார்க்காமலேயே சோர்வோடு "இல்லை" எனப் பதிலளித்தார். "சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்," என்றாள் என் தாய். தந்தையோ தலையை அசைத்தபடி ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே "வேலைத் தொல்லை ஒன்றுமில்லை, அந்தக் கடிதம்தான் எனக்குக் கவலையளிக்கிறது," என்றார்.

"என்ன கடிதம்?" என்று தாயார் கேட்டதற்கு "அரசினரிடமிருந்து வந்திருக்கிறது.....பள்ளிக்கூடம் படிப்பு முதலிய எல்லாவற்றையுமே நான் நிறுத்திவிட வேண்டுமென்று அச்சுறுத்தியுள்ளார்கள். நான் பள்ளியை மூடியே ஆகவேண்டும். எல்லாம் முடிந்தது—பள்ளி—எல்லாம்!" என்றார் என் தந்தை.

நான் உடனே ஹசீரிப்பின் அறைக்கு ஓடிப்போய “ இனிமேல் அப்பா எந்த வேலையும் செய்ய முடியாது,” என்று அறிவித்தேன். ஆனால் ஹசீரிப் தந்தையைப் போலவே மிகவும் களைப்போடிருந்தான். அதோடு இந்தச் செய்தியைக் கேட்டதும் நான் எண்ணினது போல அவன் வியப்படையவில்லை. எனவே சமையற் காரியான பாபுவிடம் தெரிவிக்க அடுப்பங்கரைக்கு ஓடினேன். அவள் எதுவும் பேசுவதற்குள்ளாக “ இனித் தந்தையால் பள்ளிக்கூடத்தை நடத்த முடியாது. இதற்கு இசைவு மறுக்கப் பட்டுள்ளது,” என்று கூறினேன். அவள் நான் கூறியதை நம்பவில்லை. “உன் தந்தைக்கு எதிராக நடந்து கொள்ள யாருக்குத் துணிவு இருக்க முடியும்? மாவட்ட ஆணையாளர் கூட உன் தந்தை என்றால் பயப்படுவாரே? ” என்றாள் பாபு. இதைக்கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது ஆனால் இது நீடிக்கவில்லை.

தாழ்வாரத்தில் என்னிலும் ஆண்டில் மூத்த ஒரு மாணவனைக் கண்டேன். அவனிடமும் செய்தியைக் கூறினேன். அவன் இது பற்றி என்னைவிட மிகுதியாகத் தெரிந்திருந்தான். “காவற்படையினர் பள்ளிக்கூடத்திற்கு வந்து பல நூற்களை எடுத்துச் சென்று விட்டார்கள்; மாலையில் வகுப்புகள் நடை பெறாதிருக்க அவர்கள் மின்சாரத்தையும் துண்டித்து விட்டார்கள்,” என்றெல்லாம் அவன் கூறினான். மேலும், காவற்படை மேலாளர் ஒருவர் என் தந்தையிடம் சென்றதாகவும், மற்ற ஆசிரியர்கள் அனைவரும் எனது தந்தையின் அறைக்கு அழைத்துவரப்பட்டதாகவும் அவன் தெரிவித்தான்.

நான் திரும்பி உணவு அறைக்குச் சென்றபோது, முன்போலவே எனது தந்தையாரும் கைகளால் தலையைப் பிடித்துக்கொண்டே மேஜை முன் உட்கார்ந்திருந்தார். என் தாயாரின் ஆறுதல் மொழிகளைக் கூட அவர் காதில் போட்டுக் கொள்ள வில்லை. அவரது முகத்தைப் பார்க்கவே எனக்கு அச்சமாக இருந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எங்கள் வீட்டிற்கு எவரும் வருவதில்லை. என்னுடன் விளையாடுவதற்கு வழக்கமாகவரும் குழந்தைகள்கூட வருவதில்லை. பள்ளிக்கூடம் அடியோடு மூடப்பட்டு விடவில்லையென்றாலும் சில கிழமைகளுக்குள் மாணவர்களின் தொகை நாற்பதுக்கும் கீழாகக் குறைந்து விட்டது. இதுவரை எங்கள் வீட்டில் தங்கியிருந்த மாணவர்களும் எங்களை விட்டுப்பிரிந்து போய்விட்டார்கள்.

ஹரிப் அமையின்றியிருந்தான்; தேவையில்லாது பேசுவது கிடையாது. சில நேரங்களில் ஏதேனும் ஒரு நூலைக் கையில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். ஆனால் அதை அவன் படிப்பதில்லை. கடைசியில் அவனும் எங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டான். இதற்குப் பிறகு அவனிடமிருந்து எங்களுக்கு எவ்விதமான செய்தியுமே இல்லை.

என் தந்தையோ எங்களுடன் இப்போது மிகவும் அருமையாகத்தான் பேசினார்; சிரிப்பதும் கிடையாது. நாள் முழுவதும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் சாய்வு நாற்காலியிலே விழுந்து கிடப்பார். பிறகு மாலை நேரங்களில் அவர் எங்கோ வெளியிற் சென்று வருவதைக்கவனித்தேன்.

ஒரு நாள் மாலை நேரம் தந்தையார் வீட்டில் இல்லை. தாயார் என்னை அண்மையில் அழைத்து என் இரு கைகளையும் பற்றித் தன் கைகளில் வைத்துக் கொண்டு கூறினாள் : "அயல் நாட்டவருக்கு நாம் மிகையாகக் கொட்டிக் கொடுத்து வருகிறோம். இதற்குக் கைம்மாறாக நாம் பெறுவதோ துயரங்களும் அடக்கு முறையும்தான்," என்றாள். அவளது குரல் தாழ்ந்த ஒலியாயும் அதே நேரத்தில் உறுதியோடும் இருந்தது. சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பிறகு தனது குரலை மென்மையாக்கிக் கொண்டு பேசினாள். "நீயாவது சிறந்தவனாக விளங்குவாய் என்று நம்புகிறேன். ஹரிப் அறிவாளிதான், ஆனால் வேண்டிய அளவு உள்ள உறுதி இல்லாதவன். உன் தந்தையும் ஹரிப் போலவேதான். ஆகவே நீ நன்றாகப் படித்து, உழைத்து அவர்களை விட உறுதியுள்ளவனாக வேண்டும்," என்று கூறினாள்.

பள்ளிக்கூடத்திற்குக் காவற்படையினர் வந்து சென்ற நிகழ்ச்சிக்குப் பிறகு, என் தந்தையார் அக்கம் பக்கத்து வீடுகளுக்குச் சென்று சீட்டோ தாயக் கட்டமோ விளையாடுவதை அடிக்கடி கவனித்தேன். இவ் விதம் அவரைக் காணும் ஒவ்வொரு முறையும் வெட்கத் தால் தலை குனிந்தேன். ஆனாலும் இதைப்பற்றி வீட்டில் ஒன்றுமே நான் வெளிப்படுத்துவதில்லை. அவர் எங்கு செல்கிறார் என்பது என் தாய்க்கும் தெரிந்திருந்தது, எனினும் அவளும் இதைக் குறித்துப் பேச்சு எடுப்பதே யில்லை.

ஒரு நேரம் ஐந்து நாட்களாக என் தந்தையைக் காணவில்லை. என் தந்தையார் என்னை அழைத்து மடித் திருந்த ஒரு தாளைக்கொடுத்தாள். "தந்தைக்கா?" என்று கேட்டேன். ஆனால் அவள் பதில் கூறாது

கைகளால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

நான் தந்தையைத் தேடி மணிக்கணக்கில் அலைந்தேன். அவர் வழக்கமாகச் சூதாடச் செல்லும் எந்த வீட்டிலும் காணப்படவில்லை. இதனால் மிகவும் உள்ளத் தளர்ச்சியும் களைப்புமடைந்து சிறிது ஓய்வு பெறுவதற்காகக் சாலை ஓரமாக உட்கார்ந்தேன். அப்போது என் சிந்தனை கடந்த சில திங்கள்களில் நடைபெற்ற மாற்றங்களைப் பற்றிச் சுற்றிச் சுழன்றது—பல்வேறு கழகங்கள் அமைத்தல், பின்னர் அவைகள் மூடப்படுதல்; பள்ளியை விட்டு வெளியேறிய மாணவர்கள்; **ஹரிப்**, அவன் டச்சுக்காரர்களைப் பற்றியும் காவற்படையினரைப் பற்றியும் பேசிய பேச்சுக்கள்; சிரிக்காத, கவலை தோய்ந்த என் தந்தையின் முகம்-ஆகிய இவையெல்லாம் மனக் கண்முன் திரைப்படம்போல் தோன்றின. பிறகு சட்டென்று என் தாயார் கொடுத்த அஞ்சல் நினைவுக்கு வந்தது. அதில் அவள் என்ன எழுதியிருக்கக்கூடும் என்பதை அறிய என் உள்ளம் துடித்தது. எனவே சட்டைப் பையிலிருந்து அதை எடுத்து எழுத்துக் கூட்டி மெதுவாகப் படித்தேன். அஞ்சலில் எழுதியிருந்தது இதுதான்: "பிறக்கப்போகும் உங்கள் குழந்தையைப் பற்றி உங்களுக்கு ஏதாவது சிந்தனை உண்டா? உடனே வீட்டிற்கு வந்து சேருங்கள். அப்படி இந்த அஞ்சல் கண்ட பிறகும் வீடு திரும்ப உங்களுக்கு விருப்பமில்லையென்றால், நான் சாகவேண்டும், என்னோடு உங்கள் குழந்தையையும் கல்லறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும், என்று வாழ்த்துங்கள்."

என் பசி, களைப்பு எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். எவ்வாறேனும் தந்தையாரைக் கண்டுபிடித்து

விடவேண்டும் என்று எங்கெல்லாமோ அலைந்து தேடினேன். இவ்விதம் எத்துணை மணி நேரம் தான் தேடி அலைந்தேன் என்று எனக்கே தெரியாது. கடைசியில் எப்படியோ தந்தையைக் கண்டுபிடித்துவிட்டேன். என்னைக் கண்டதும் முதலில் அவர் சீறி விழுந்தார். ஆனால் கடிதத்தைப் படித்ததும் "சரி, நீ போ. நான் ஒரு விநாடியில் வருகிறேன்," என்றார்.

அவ்வாறே எனக்கு முன்னதாக அவர் வீடு வந்து சேர்ந்துவிட்டார். தான் வந்திருப்பதை என் தாயார் அறியவேண்டும் என்பதற்காக என் உடன் பிறந்தவர்களோடு சிறிது உரத்த குரலிலேயே பேசிக்கொண்டிருந்தார்.

இதற்குப் பிறகு சில கிழமைகள் என் தந்தை மாலை நேரங்களில் வீட்டிலேயே தங்கினார். எங்களோடு விளையாடினார். கதைகள் கூறினார். ஆனால் ஒருநாள் அவருடைய நண்பர்கள் மூவர் வந்தார்கள். வீட்டில் சூதாடுவதை விரும்பவில்லை என்று அம்மா கூறிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. தந்தையும் இதற்கு எவ்வித மான பதிலும் கூறவில்லை. சற்றுத் தயங்கினார். பிறகு தம் நண்பர்களுடன் வெளியே போய்விட்டார். இதற்குப் பிறகு அவருடைய நண்பர்கள் எவரும் தேடி வருவதில்லை. என் தந்தையும் வீட்டில் இருப்பதில்லை. சில வேளைகளில் நாட்கணக்காகக் கூட வீட்டை எட்டிப் பார்க்காமலே இருப்பார். வீட்டிலிருந்த தட்டெழுத்துப் பொறிகள், மேஜை நாற்காலிகள் முதலியவற்றையெல்லாம் ஒரு லாரியில் அள்ளிப் போட்டுக் கொண்டு போன நேரத்திற்கூட அவர் வீட்டிலில்லை.

கிராமத்திலிருந்து வரும் அங்காடிக் காரர்களோடு அம்மா முன்போலச் சிரித்துக் கேலிசெய்வதில்லை. ஏதோ

உணர்வற்றவள் போலத் தலையை ஆட்டுவதோடு சரி; பேசுவதும் அருமையாகத்தான் இருந்தது, நெசவு செய்யும் கிழவி ஒரு நாள் வந்தாள். அவள் முகத்தில் எவ்வித மகிழ்ச்சியுமில்லை. லூரிக் வாங்குமாறு என் தாயாரை மிகவும் கெஞ்சினாள். கிராமத்தில் இப்போது மிகவும் துன்பமான நிலை ஏற்பட்டிருப்பதாகவும், லூரிக் வாங்க எவருமே வருவதில்லை என்றும் இரக்கமாகக் கூறினாள். பதினைந்து பேர்களை வைத்து வேலைவாங்கிக் கொண்டிருந்த செருப்புக் கடைகாரர் கூலிவேலைசெய்யப் பட்டணத்திற்குச் சென்று விட்டதாகத் தெரிவித்தாள். பின்னர் பெருமூச்சு விட்டுக்கொண்டு சாலைவழியே திரும்பிப் போனாள்.

என் தாயார் எனக்கு ஒரு தம்பியைப் பெற்றெடுத்த இரவு என் தந்தையை அழைத்துவர என் உடன் பிறந்தாள் அனுப்பப்பட்டாள். நான் மருத்துவச்சியை அழைத்துவரச் சென்றிருந்தேன். எங்குத் தேடியும் அப்பா காணப்படவில்லை. சமையற்காரி எங்களை ஓசை செய்யாது படுத்துறங்குமாறு கூறினாள்.

மறுநாட் காலை, நான் புதிதாகப் பிறந்த என் தம்பியைப் பார்க்கத் தாயாரின் அறைக்குச் சென்றேன். பக்கத்தில் குழந்தையோடு அவள் அமைதியாகப் படுத்திருந்தாள். பல திங்கள்களுக்குப் பிறகு முதல் தடவையாக அவளது முகம் ஒளி வீசிக்கொண்டு துலக்கமாக இருந்தது. என்னைப்பார்த்துச் சிரித்தாள். களைப்போடிருந்தாலும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டாள். இதற்குள் என் தந்தை வீட்டிற்குள் நுழைந்ததும் நுழையாததுமாய் "பையன் பிறந்துவிட்டானா !" என மகிழ்ச்சி மிகுதியால் கத்தினார். "அவன் தன்னுடைய தாயையும் தந்தை

யையும் விடப் பெருமை பொருந்தியவனாக இருப்பான்,'' என்றார்.

என் தாயார் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டாள். அவளது குரலில் கடுமை ஒலித்தது. தந்தையார் அவளுடைய படுக்கைக்கருகில் வருவதற்குள்ளாக வெடுக்கென்று கூறினாள்: ''உங்களிடமிருந்து அவன் ஒன்றும் பெறப்போவதில்லை. அவன் எவ்வாறேனும் பிழைத்துக்கொள்வான். இங்கே, இந்தத் துன்பம் நிறைந்த காலத்தில் பிறந்து விட்டதனால் என்ன ஆகிவிடப்போகிறது,'' என்றாள். என் தந்தை ஒன்றும் கூறவில்லை. நான் அறையை விட்டு வெளியே நழுவினேன்.

ஆக, உணர்ச்சி அலைகள் ஓய்ந்துபோன வேளையில் தாய்நாடு பற்றிய பேச்செல்லாம் மங்கி மறைந்துபோன நேரத்தில், கழகங்களும் எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்கும் வகுப்புக்களும் மூடப்பட்டுவிட்ட நேரத்தில் என் தம்பி பிறந்தான். அரசினர் ஊழியர்களின் குழந்தைகள் அரசினரின் பள்ளிகளுக்குச் சென்றனர். எக்காலத்தையும் விடச் சூதாட்டமும் காவற்படையின் தொகையில் பெருக்கமும் பெருகிவிட்டன. எங்கள் சிறிய ஊரில், எல்லாம் பழைய வழக்கமான நிலைக்குத் திரும்பின. பகல் முடிவதற்குள் இரவு வந்து கவிழ்ந்துகொண்டது போல் இருந்தது. விடிவு இன்னும் வெகு தொலைவில் இருப்பதுபோலத் தோன்றியது.

# 6. இந்தோனேஷ்யாவை எதிர்நோக்கியுள்ள சிக்கலான வினாக்கள்

எழுதியவர் :

**சுடான் ஜாரீர்**

தெற்காசியாவின் சிறப்பான நிலப்பகுதியையும் ஆஸ்திரேலியாவையும் சங்கிலித் தொடர்போல இணைக்கும் இந்தோனேஷ்யா, ஆயிரக்கணக்கான சிறியபெரிய தீவுகளைக்கொண்டது. இவற்றிலே முதன்மையானவைகள் **சுமத்ரா, ஜாவா, போர்னியோ, செலிபஸ், நியூகினி** ஆகியவைகளாகும்.

**முல்டாடுனி** என்பான், தான் எழுதிய **மாக்ஸ் ஹாவ்லர்** என்னும் நூலில் எழுதியிருப்பதைப்போன்று,

இத்தீவுகள், உலக நடுக்கோட்டைச்சுற்றி பச்சைக் கற்கள் பதிக்கப்பெற்ற ஒட்டியாணம்போல் அமைந் திருக்கின்றன.

மலைகளும் எரிமலைகளும் நிறைந்த இவை, பெரும் பாலும் வளம் மிகுந்தவை. சுமத்ரா, போர்னியோ, செலி பஸ் ஆகிய பெரிய தீவுகளிலும் ஜாவா, மதுரா, பாலி, லோம்பாக் முதலிய சிறிய தீவுகளிலும் இன்னும் பெரிய பெரிய காடுகள் இருந்தாலும், இங்கெல்லாம் மிகுதியான நிலம் பயிர்த்தொழிலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் தீவுக்கூட்டம் மேற்கிலிருந்து கிழக்காக 3,000 மைல்களுக்கு மிகுதியாகவும், வடக்கிலிருந்து தெற்காகக் கிட்டத்தட்ட 1250 மைல்களும் பரந்துள்ளது. இந்தத் தீவுக்கூட்டத்தின் மொத்த நிலப்பரபபு ஏறக் குறைய 740.000 சதுரமைல்கள்; இதில் ஜாவாவும் மதுராவும் சேர்ந்து 50,000 சதுர மைல்கள்; சுமத்திராவும் அதையொட்டியுள்ள தீவுகளும் 1,80,000 சதுரமைல்கள்; இந்தோனேஷ்யாவின் போர்னியோப் பகுதி (வடபகுதி பிரிட்டிஸ் ஆட்சியிலிருக்கிறது) 2,10,000 சதுர மைல்கள்; செலிபஸ் 70,000 சதுர மைல்கள்; மொலுக்கஸ், லெஸ்ஸர் சுந்தாஸ், மற்றும் இந்தோனேஷ்யாவின் நியுகினி அல்லது மேற்கு இரியன் (இதை இன்னும் ஹாலந்து தன்னதாக உரிமை கொண்டாடுகிறது; கிழக்குப் பகுதி ஆஸ்திரேலி யாவிடமிருக்கிறது), இவையெல்லாம் சேர்ந்து மொத்தம் 2,20,000 சதுர மைல்கள்.

இந்தோனேஷ்யாவின் மக்கள் தொகை கிட்டத் தட்ட எட்டுக்கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் ஐந்துகோடி இருபது லக்ஷம் பேர் ஜாவாவில் மட்டும் வாழ்கிருர்கள். மேலும் அண்மைப் புள்ளி

விவரப்படி சுமத்ராவில் ஒரு கோடி இருபது லக்ஷம் பேர்களும்; போர்னியோவில் 35லக்ஷம் பேர்களும்; செலிபஸ் இல் 60 லக்ஷம் பேர்களும் வாழ்கிறுர்கள். ஆக இந்தோனேஷ்யாவின் மொத்த நிலப்பரப்பில் நூற்றுக்கு 7 விழுக்காடு மட்டுமே இருக்கும் ஜாவா, அத்தீவுக்கூட்டம் முழுவதின் மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு 68 விழுக்காட்டைப் பெற்றிருக்கிறது.

இவ்வாறு ஜாவா சதுரமைலுக்கு 1,058 பேர்வீதம் மிகையான மக்கள் தொகையைக் கொண்டிருக்கிறதென்ருல், ஏனைய தீவுகள் மிகக் குறைவான மக்கள் நெருக்கத்தைப் பெற்றிருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சுமத்திராவில் சதுரமைலுக்கு 65 பேர்களுக்குமேல் மக்கள் நெருக்கம் கிடையாது. இந்தோனேஷ்யா முழுவதின் பொதுவான மக்கள் நெருக்கமே சதுரமைலுக்கு 109 தான். இத்துடன் ஆண்டுதோறும் $1\frac{1}{4}$ விழுக்காடு மக்கள் தொகை உயர்ந்து வருகிறது. இந்த உயர்வு, பிற தீவுகளைப் பாதிக்காது. மாருக உழைப்பு ஆற்றலைத் தான் பெருக்கும். ஆனல் ஜாவாவைப் பொறுத்தவரையில் இந்த உயர்வு ஏற்கனவேயுள்ள மிகப்பெரியதான மக்கள் நெருக்கத்தை மேலும் விரைவு படுத்தும்.

இந்தோனேஷ்யாவில் வாழும் மொத்தம் 8 கோடி மக்களில் 30 லக்ஷம் பேர் சீனப்பரம்பரையினர். இவர்களைத் தவிர டச்சுக்காரர்கள், இந்தோ—ஐரோப்பியர்கள், அராபியர்கள் முதலியோரும் சிறிய அளவில் இருக்கின்றனர்.

தன்னுரிமை ஆட்சி ஏற்பட்டபிறகு டச்சுக்காரர்கள் படிப்படியாக வெளியேறி வருகின்றனர். ஆனல் சீனக் குடியேற்றம் மட்டும் இன்னும் நின்றபாடில்லை. இதனல்

இந்தோனேஷ்யாவில் சீன மக்கள் தொகை உயர்ந்து கொண்டே வருகிறது.

இந்தோனேஷ்யாவின் நாட்டு ஒற்றுமை, ஆயிரக் கணக்கான தீவுகளில் பரவியுள்ள பல்வேறு பகுதி மக்க ளிடையே ஏற்பட்டுள்ள நெருங்கிய மொழி உறவிலிருந் தும், ஒரு பொதுவான வரலாற்றிலிருந்தும், இன்னும் ஓரளவுக்கு நெடுங்காலமாக நிலவிவரும் ஒரு பொதுவான மரபுப் பண்பினின்றும் வளர்ந்தோங்கி வந்திருக்கின்றது. அதிலும் குறிப்பாக 16,17–வது நூற்றுண்டுகளில் போர்ச் சுக்கீசியர்களும் டச்சுக்காரர்களும் இந்த நாட்டில் காலடி வைத்தபிறகு, இந்தக் கூட்டுறவு மேலும் வலுப்பட்டிருக் கிறது.

மேலே நாட்டினர் வருவதற்கு முன்பு, **இந்தியா** வோடும், **சீன**வோடும் இடையருத தொடர்பு இருந்து வந்திருக்கிறது. **ஹிந்து** சமயமும், **பௌத்த** சமயமும், பின்னர் **இஸ்லா**மும் இந்தியா மூலமாகத்தான் இந்தோனேஷ்யாவிற்கு வந்து சேர்ந்தன.

இப்போது இந்தோனேஷ்யர்களில் பத்தில் ஒன்பது பேர் முஸ்லீம்கள். ஆனல் 13–வது நூற்றுண்டில் இஸ் லாம் வருவதற்கு முன்னர் பெரும்பான்மையான இந்தோ னேஷ்யர்கள் ஹிந்துக்களாகவே இருந்த ஒரு காலம் இருந்தது. இந்தக் காலக்கட்டத்தின் உண்மை நிலையை, பாலித்தீவில் இப்போது எஞ்சியுள்ள அரும் பொருள்கள் மூலம் உணரலாம். இங்கே இன்றும்கூடப் பெரும்பாலான மக்கள் ஹிந்துக்களாகவே இருக்கின்றனர்.

ஜாவா மொழியில் மிகுதியான சமஸ்கிருத வழிச் சொற்கள் காணப்படுவது, இந்தோனேஷ்யாவில் ஒரு

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
2122
LIBRARY,
CO NO ... ... ...
Date ... ... ...
MADRAS-28.



5. A leather puppet figure from the *wayang kulit* shadow-play theater (19 inches high)
Collection Mr. & Mrs. Wolff



6. A Balinese monkey god. Wood (20 inches high)
Collection Mr. & Mrs. Wolff

காலத்தில் இந்தியாவின் செல்வாக்கு மிகுந்திருந்தது என்பதற்கு மற்றொரு எடுத்துக் காட்டாகும்.

நீண்டகாலமாகவே, வாசனைப் பொருள்கள் காரணமாக வணிகர்கள் இந்தோனேஷ்யாவின்பால் கவரப்பட்டிருந்தனர். அதிலும் ஜாவா தீவு அரிசிக்கும், மொலுக்கஸ் தீவு இலவங்கம், ஜாதிக்காய் போன்றவற்றிற்கும் தலைமுறை தலைமுறையாகப் புகழ்பெற்றவை. எனவே, மேலைநாட்டார் வருவதற்கு முன்னதாகவே இந்தியாவுடனும், சீனாவுடனும் குறிப்பிடத்தக்க அளவில் வாணிபம் நடைபெற்று வந்திருக்கின்றது.

நமக்குத் தெரிந்தவரை, இந்த வாணிபம், தொடர்புகொண்டிருந்த நாடுகளிடையே ஒருபோதும் பெரிய அளவில் போரைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்ததில்லை. மேலும் பழைய இந்தியச் சமயங்களோ அல்லது இஸ்லாமோ வாளின் வலிமையால் இங்கு பரவவில்லை; அதற்குப்பதிலாக அமைதியான வாணிபத் தொடர்புகள் மூலமாகவே இவைகள் இங்கு பரவின.

மேலை நாட்டினர் புகுந்ததின் பின்னர்தான் ஏனைய நாடுகளோடு இந்தோனேஷ்யாவின் உறவு வேறுவிதமான உருவம் பெறத் தொடங்கியது.

இந்தோனேஷ்யாவில் **டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின்** வரலாறு, வாணிபத்துடன் வலுக்கட்டாயமும், கொடுமையும், வஞ்சகமும் இன்னும் பிறவும் இணைந்து பிணைந்த வரலாருகும்.

ஹாலந்தினுடைய வாசனைப் பொருள் வாணிபத்தின் நன்மைக்காக, இந்தோனேஷ்ய மக்கள் அனைவரின் வாழ்க்கையும் வேருடன் அழிக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி இந்தோனேஷ்யாவின் பழைய அரசுகள் ஒன்றன்பின் ஒன்ருக அழிக்கப்பட்டன. இந்த அழிவின் மீது, அடுத்த சில நூற்ருண்டுகளில் டச்சுக் காரர்கள் தங்களது குடியேற்ற உரிமைப் பேரரசு ஆட்சியை அமைத்துக்கொண்டனர்.

எனினும் இதற்காக அவர்கள், நீண்ட பெரும் போராட்டத்தை நடத்தவேண்டியிருந்தது. அதிலும் கடைசி இந்தோனேஷ்யா அரசான **அக்கி** (ACHE) யை நீடித்த கடும் போராட்டத்திற்குப் பிறகு, இருபதாவது நூற்ருண்டின் முற்பகுதியில் தான் அடிபணியவைக்க முடிந்தது.

இவ்விதம் டச்சுக்காரர்கள், தீவுக்கூட்டம் முழுவதி லும் தங்களது தனியுரிமையை நிலைநிறுத்தி விட்டோம் என்று மகிழ்ந்து செருக்குடனிருந்த வேளையில், ஒரு புதிய இந்தோனேஷ்யா பிறந்து கொண்டிருந்தது. ஆசியாவெங்கும்—ஜப்பான், சீன, துருக்கி, இந்தியா, இந்தோனேஷ்யா முதலியபல நாடுகளிலும் தாய்நாட்டுப் பற்றுணர்வு முருகிப் பெருகி வளர்ந்து கொண்டிருந்தது. அதுதான் ஆசியாவின் விழிப்பு, எழுச்சி.

1908–ல் அறிவாற்றலுள்ள சில இந்தோனேஷ்யர் ஒன்று சேர்ந்து, ஜாவாவில் உள்ள இந்தோனேஷ்யர் களின் முன்னேற்றத்திற் கென்று ‘புடி உடோமோ’ (மேன்மையான முயற்சி) என்னும் இயக்கத்தைத் தோற்றுவித்தனர். பின்னர் 1911–ல் ‘சாரேகாட் டகாங் இஸ்லாம்’ (முஸ்லீம் வணிகர்களின் கழகம்) என்னும் நிலையம் அமைக்கப்பெற்று, அது விரைவிலேயே நாட்டின் பெரும்பகுதி மக்கள் இயக்கமாக வளர்ச்சி யுற்றது.

இதற்கிடையே டச்சு பொருளீடும், ஏனைய அயல் பொருளீடுகளும்; தோட்டக்காடுகள், புகைவண்டிப் பாதைகள், புதிய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் முதலியனவெல்லாம் அமைத்து இந்தோனேஷ்யாவின் தோற்றத்தையே விரைவாக மாற்றிக்கொண்டுவந்தன. இதனால் இந்தோனேஷ்யர்களின் வாழ்க்கை முறையே புதிய உருவைப்பெற்றது.

அத்துடன் தன்னாட்சிக்கும், ஒற்றுமைக்கும் போராடும், நாடு முழுதுக்குமான ஒரு புதிய இயக்கமும் மலர்ந்தது. அயலவர் அடிமை நுகத்தடியிலிருந்து விடுதலை பெறுவதே இந்தோனேஷ்யர்களின் முழுமுதற் குறிக்கோளாகத் தோற்றமளித்தது.

மேலும், இந்தோனேஷ்யா புதுமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து, தொழிலாளர் மற்றும் பொதுநலஞ் சார்ந்த சிக்கல்கள் பல எழுந்தன.

முதலாவது உலகப் பெரும்போருக்குப்பின்னர் நாட்டில் தொழிற்கழ்கங்கள் பல தோன்றின. இவற்றில் புகைவண்டித் தொழிலாளர் கழகம்தான் மிகப் பெரியதாக விளங்கிற்று; அடமானக் கடைகளின் தொழிலாளர் கழகம் மிகவும் வலியுடையதாகத் திகழ்ந்தது. அப்போது வேலை நிறுத்தங்கள் பலவும் நடந்தன.

குடியேற்ற உரிமை ஆட்சிக்கோ, காலத்திற்கு ஏற்றாற்போல இணங்கிப்போகும் அறிவுடைமை இல்லை. ஆகவே இந்தப் புதிய ஆற்றல்களை அடக்கி ஒடுக்கவே முயற்சித்தது.

இதே நேரம் நாட்டின் சில ஆட்சிப் பொறுப்புக்களை இந்தோனேஷ்யர்களுக்குப் படிப்படியாக மாற்ற

லாம் என்று அறிவுரை கூறக்கூடிய சில டச்சுக்காரர்கள் இல்லாமலுமில்லை. ஆயினும் இந்த வகையில் உருப்படியாக எதுவும் செயயப்படவில்லை.

இதன் விளைவாகப் பொது மக்கள் இயக்கம் விரைவில் மிக முற்போக்கு இயக்கமாக மாறத் தொடங்கிற்று.

தொடக்கத்தில் சமய அடிப்படையில் எழுந்த 'சாரேகாட் இஸ்லாம்' இயக்கத்திலே, வன்மையான சொற்போரிலும்,புரட்சி செய்வதிலும்,பொதுவுடைமைக் கொள்கையிலும் மேலும் மேலும் பற்றுதல் கொண்ட ஒரு இடது சாரிக்கட்சி உருவாயிற்று. இதனால் இந்த இயக்கத்திற்குள் விரைவான பல நெருக்கடிகள் தோன்றின. குடியேற்ற உரிமை ஆட்சியின் செயல்கள் இந்த நெருக்கடியை மேலும் ஊக்குவித்தன. கடைசியில் 1921–ல் இந்த இயக்கத்தில் ஒரு வெளிப்படையான பிளவே ஏற்பட்டு, இடது சாரிக்கட்சியிலிருந்து, இந்தோனேஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியது. இதன் தோற்ற காலத்திய பெருவாரியான தலைவர்கள் 'சாரேகாட் இஸ்லாம்' இயக்கத்தில் முதன்மையாக விளங்கியவர்களே.

இந்த இயக்கத்தின் முற்போக்கு வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த டச்சுக் கம்யூனிஸ்ட்டுகள் தான், கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கைகள், நடைமுறைவழிகள் முதலியவற்றை வகுத்துக் கொடுத்தனர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இரண்டாம் பிற்பகுதிவரை இந்தோனேஷ்ய நாட்டையும் மக்களையும் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியார் முன்னர் தனி உரிமை வாணிபத்தின் மூலமாகவும், பின்னர் அது கலைக்கப்பட்டு டச்சு அரசு ஏற்பட்டதும், கட்டாயக் காப்பிச்

செடி பயிரிடுதல் போன்ற நடவடிக்கைகள் மூலமாகவும், கொள்ளை கொள்ளையாகப் பொருள் ஈட்டத்தக்க கருவிகளாகவே எண்ணினர்.

மக்களின் நலனில் அவர்கள் சிறிதும் அக்கறை காட்டியதில்லை. பொது நலப்பணி என்பதேகிடையாது; பள்ளிக்கூடங்கள் மிகமிகக் குறைவு; பொது மக்கள் நலவழி வெகுவாக ஒதுக்கப்பட்டிருந்த தென்னலாம்.

ஆனால் பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைசியில் நிலைமை சிறிது மாறத் தொடங்கிற்று. **முல்டாடுனி, வான்ஹோவல்** போன்ற அறிவு படைத்த டச்சுக்காரர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட, இழிவாக நடத்தப் பட்ட இந்தோனேஷியர்களுக்குச் சார்பாகக் குரல் எழுப்பினர். அதோடு தன்னிச்சையான உழைப்புக்கும், இந்தோனேஷியாவில் தன்னுரிமை கொண்ட வேலைக்குத் தடையின்றி வெளியார் பொருளீடு உள் நுழைவதற்கும் ஒரு இயக்கம் நடைபெற்றது.

இதன் பின்னர் தற்போதைய இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. புதிய தோட்டங்கள் உருவாயின, எண்ணெய்ச் சுரங்கத் தொழில்கள் பெருகின. வாணிப வளர்ச்சி காரணமாக உள் நாட்டில் முன்னைவிட மிகுதியான போக்கு வரத்து வாய்ப்புகள் ஏற்பட்டன. சிறிய ஊரின் நாட்டாண்மையிலும் கூட மிகுதியான கருத்துச் செலுத்தப்பட்டது.

முன்பு கல்வியறிவு என்பது பெரிய பண்ணையார்கள், உயர்ந்த ஆட்சியாளர்கள்-ஆணையளர்கள் ஆகியோரது குடும்பங்களுக்கு மட்டுமே உரித்தான உடை

மையாக இருந்தது. இப்போது இது மாறி எளிய மக்களும் கல்வியறிவும், பொறி இயக்கப் பயிற்சியும் பெறுவதற்காகப் பள்ளிக் கூடங்கள் திறக்கப் பட்டு, தாய் நாட்டின் சிறப்பியல்பை அறிவதற்கும் உயர்ந்த தலைமைநிலைகள் ஏற்பதற்கும் வாய்ப்பளிக்கப் படுகிறது.

நாட்டுக் குரியவர்கள் தங்களுக்குக் கீழ் வேலை செய்யத் தயாராக உள்ளவரை, அவர்கள் செயலில் கூடியவரை தலையிடாதிருப்பதே குடியேற்ற ஆட்சியின் தலைமுறைப் பண்பாடாகும்.

இந்தத் தலைமுறைப் பண்பாட்டிற்கேற்ப டச்சுக் காரர்கள் இந்தோனேஷ்ய மக்களோடு பெரும்பாலும் நேரடித் தொடர்பு கொள்வதில்லை; அதற்குப் பதிலாக உள்நாட்டு நிலச் செல்வர்கள் வாயிலாகவே மக்கள் மீது அவர்கள் ஆட்சி செலுத்தினார்கள்.

இவ்விதம் மறைமுகமாக ஆட்சி நடத்தும் இந்த முறையே இந்தோனேஷ்யாவில் டச்சுக் குடியேற்ற ஆளுகையின் அடிப்படை முறையாயிற்று.

இதில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று, ஜாவாத் தீவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களைக் கொண்டு நடத்தப்படும், ஐரோப்பியர் ஆளும் துறைகள்; மற்றொன்று இந்தோனேஷ்ய நிலச் செல்வர்களின் இனத்திலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நடத்தப்படும், உள்நாட்டினர் ஆளும் துறைகள்—இந்த உள்நாட்டினர் ஆளும் துறைகளில் வெகு காலம்வரை தலைமுறை உரிமைக் கொள்கை கட்டாயமாக இருந்தது.

மேலே கூறிய இரண்டுவித ஆளுகையின் மேலாளர்களுக்குமிடையே கல்வி, பயிற்சி போன்றவைகளில் மிகுந்த வேறுபாடுகள் இருந்தன.

எடுத்துக்காட்டாக ஒரு உள்நாட்டுத் தலைவன், ஐரோப்பியர் ஆட்சியிலுள்ள ஒரு உயர்நிலைக்கு வர முடியாது. ஏனென்றால் அத்தகைய ஒரு உயர்ந்த நிலையை அடையும் தகுதி ஒரு இந்தோனேஷ்யனுக்கு இருக்க முடியாது என்று கருதப்பட்டது. இத்தகைய ஒரு நிலை டச்சுக் குடியேற்ற உரிமை ஆட்சியின் கடைசிக் காலம் வரை நீடித்திருந்தது.

முதல் உலகப் பெரும்போருக்குப் பிறகு, ஒருவகையான உறுப்பினர் உரிமையுடைய அவை ஏற்பட்டது. இதன் உறுப்பினர்கள் (சில இந்தோனேஷ்யர்கள் உள்பட) மாமுதல்வரா (Governor General) லேயே அமைக்கப்பட்டனர்—ஏற்படுத்தப்பட்டனர்.

இரண்டாவது உலகப் பெரும்போர் தொடங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன்புதான் இதன் பெரும்பான்மையான உறுப்பினர்களாக இந்தோனேஷ்யர்கள் பொறுப்பேற்றனர். எனினும் இந்த உறுப்பினர் அவை, நடைமுறையில் உரிமையில்லாது, வெறும் கருத்தைத் தெரியப்படுத்தவல்ல ஒரு அவையாகவே இருந்தது.

சுருங்கச் சொன்னால், ஜப்பானியர் வலிந்து ஆட்கொண்டதற்குப் பின்னர் ஏற்பட்ட நிலைமையை எதிர்த்து நிற்கவல்ல பழக்கங்களையும், பயிற்சிகளையும் பெறும் வாய்ப்புக்களை, டச்சுக் குடியேற்ற ஆட்சியின் ஆளும் முறைமை இந்தோனேஷ்யர்களுக்குக் கற்றுத்தர மறுத்துவிட்டது.

போருக்கு முன்னர் பெரும் பான்மையான இந்தோனேஷ்யர்கள், அதிலும் ஜாவாவில் வாழ்பவர்கள், கல்வியறிவில்லாத வேளாண்மைக்காரர்களாகவும், கூலிவேலை செய்பவர்களாகவும், மற்றும் குறைந்த எண்ணிக்கையில் எளிய அலுவலர்களாகவும், அரசியற் பணிமனை ஊழியர்களாகவுமே இருந்தனர். அத்துடன் இந்தோனேஷ்யர்களில் கடைக்காரர்களும், தனியாகத் தொழில் நடத்துபவர்களும் மிகமிகக் குறைவு.

இவர்களின் நிலை இதுவென்றால், சீனர்களின் நிலை இடைப்பட்ட வாழ்க்கை நிலைக்கு உயர்வு பெற்றிருந்தது; அவ்வளவுதான்.

மற்றப்படி மிகப்பெரிய தோட்டக்காடுகள், எண்ணெய், சுரங்கத் தொழில்கள், கப்பல் தொழில்கள், பொருளக வாணிகம்(Bank), மொத்த வாணிகம் முதலியவற்றிலெல்லாம் பெரிய அளவு பொருளீடு இந்தோனேஷ்யர்களல்லாதாருடையதாகவே இருந்தது.

இந்தப் பொருள் அடிப்படையின் நிலைமை, தன்னுரிமை ஆட்சி அடைந்த பிறகும்கூட, வெகுவாக மாறிவிடவில்லை. இனப்பாகுபாட்டின் அடிப்படையில்தான் இன்னும் பெரும்பான்மையான அளவில் பொருள்நிலை ஏற்றத்தாழ்வுகள் இருந்து வருகின்றன.

இந்தோனேஷ்யாவில் நாட்டுணர்ச்சி, முதலாளி ஆட்சிக்கு எதிர்ப்பாக விளங்குகிறது. ஏனென்றால், இங்குள்ள முதலாளி ஆட்சியானது மேற்கத்திய முதலாளி ஆட்சியாக, அதிலும் குறிப்பாக டச்சு முதலாளி ஆட்சியாக இருக்கிறது.

இந்தோனேஷ்யாவில் நாட்டுணர்ச்சியும், கம்யூனிஸமும் ஏன் கைகோத்துச் செல்ல முடிகிறது என்பதற்கு

இதுவும் ஒரு காரணம். இங்கு நாட்டுணர்ச்சி ஏழை எளிய மக்களிடமிருந்தே மிகுந்த உதவியைப் பெறுகிறது.

முதலாளி ஆட்சியோ இந்தோனேஷ்யரல்லாத டச்சு அல்லது சீன முதலாளி ஆட்சியாக இருக்கிறது.

இத்தகைய பொருள்நிலே, சமூகப் போட்டியின் காரணமாக இனவேற்றுமைகள் வலுவடைந்து இன வெறுப்பாகத் திரித்து விடப்படுகிறது.

இதனல், தங்கள் பேரரசாட்சி எதிர்ப்பு, முதலாளி ஆட்சி எதிர்ப்பு முதலிய கிளர்ச்சிகளுக்கு நாட்டுப்பற்று நாட்டுணர்ச்சி என்னும் போர்வையைப் போர்த்திவிடக் கம்யூனிஸ்டுகளுக்கு எளிதாகி விடுகிறது.

இந்நிலேயில் கம்யூனிஸத்தின் உண்மை உருவை வெட்ட வெளிச்சமாக்குவது என்பது நாட்டுப் பற்ருளர்களுக்கு அவ்வளவு எளிதான செயலல்ல.

ஆனல் உண்மையைக் கூறினல் 1945 ஆகஸ்டு 17ல் இந்தோனேஷ்யாவின் தன்னுட்சி அறிவிக்கப்பட்ட போது, புதிய அரசின் தலைமை பெரும்பாலும் சோஷலிஸ்டுகளிடம் இருந்ததே தவிர கம்யூனிஸ்டுகளிடமல்ல.

இந்தோனேஷ்ய அரசியல் சட்டத்தில் குறிக்கப் பட்டுள்ள ஐந்து கொள்கைகளின் நோக்கம் சோஷலிஸக் கருத்தில், சமூக அறநெறி நன்முறையில் நிலவக்கூடிய ஒரு நலமிக்க அரசை அமைப்பதே.

1945–ல் டச்சுக்காரர்களுக்கெதிராகக் குமுறி வெடித்த எழுச்சி ஹாலந்தை வெகுவாகத் திடுக்கிடச் செய்துவிட்டது. தன்னுரிமை இயக்கத்தின் உண்மை

வலுவைச் சரியான அளவில் மதிப்பிட டச்சுக்காரர்கள் தவறிவிட்டனர். அதோடு பிரிட்டிஷார் இந்தியாவோடு செய்துகொண்டது போன்றதொரு அமைதியின் அடிப் படையில் ஒரு உடன்பாட்டைச் செய்து கொள்ளும் எண்ணமும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

இதன் விளைவாக இந்தோனேஷ்யாவில் டச்சுக்கா ரர்களின் குடியேற்ற ஆட்சிமுறை அவர்களுக்கு மானக் கேட்டைத் தரும் முறையிலேயே முடிவுற்றது.

புரட்சியைப் படைவலுக்கொண்டு ஒடுக்க ஹாலந்து இரண்டுமுறை முயற்சித்துத் தோல்வியடைந்தது.

பின்னரே உரிமை மாற்றத்திற்கு உலக நாடுகள் அவை (United Nations)யின் மூலமாகப் பேச்சுவார்த்தை கள் நடைபெற்றன.

இறுதியில் இருதரப்பாரிடையேயும், உள்ளக் கசப்பு நிலவும் நிலையிலேயேதான், டச்சுக்காரர்கள் வேறு வழி யின்றித் தங்கள் குடியேற்ற உரிமை ஆட்சியைக் கை கழுவிவிட்டு வெளியேறினர்.

இது ஒருபுறமிருக்க, 1949 கடைசியில் அரசியல் ஆட்சி, டச்சுக்காரர்களிடமிருந்து இந்தோனேஷ்யர் களுக்கு மாறிய பிறகுதான் (மேற்கு இரியனைப் பொறுத்த வரையில் ஒரு வியப்புக்கிடமான இடைக்கால உடன் பாடு ஏற்பட்டது) குறுகியநோக்கம் கொண்டகுடியேற்ற உரிமை ஆட்சிக்கொள்கையால் இந்தோனேஷ்யாவில் ஏற்பட்டிருந்த கொடுமை மிக்க விளைவுகளை முழுமையாக உணரமுடிந்தது.

மேலும் நாட்டை எதிர்நோக்கியிருந்த துன்ப நிலை களைச் சீர் செய்வதற்கு வேண்டிய அரசியல், ஆளும்

முறைமைப் பழக்கங்கள் முதலியன இந்தோனேஷ்யர்களிடம் போதுமான அளவு இல்லாதிருந்தன. எங்கும் எதிலும் தாறுமாறான நிலைகள் காணப்பட்டன. வேறு எவ்வாறு இருக்க முடியும் ?

நாடு, இரண்டு படைகளின் தாக்குதல்களைத் துய்க்க வேண்டியிருந்தது—ஒன்று, ஜப்பானியர்களை எதிர்த்து நடைபெற்ற போராட்டம்; மற்றொன்று டச்சு அரசாட்சியை எதிர்த்து நடைபெற்ற புரட்சி; இவை தவிர, பல சிறு அரசியல் தகராறுகளும், சச்சரவுகளும் நிகழ்ந்தன.

இதுமட்டுமல்ல, ஏற்கனவே இரண்டு நேர்மாறான ஆட்சி அமைப்புகள் இருந்து வந்தனவல்லவா ? இவை அவ்வாறே நீடித்ததன் காரணமாகக் குழப்பம் வேறு.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, ஒன்றுக்கு ஒன்று வேறுபாடான இரண்டு படைகளை, அதாவது குடியரசு ஆட்சியின் புரட்சிப் படையையும், டச்சுக் குடியேற்ற ஆட்சியின் படையையும் இணைக்கும் சிக்கலான நிலை வேறு இருந்தது.

தொடக்கத்தில் இதுபோன்ற சிக்கல்களையும் மேலும் நாட்டை எதிர்நோக்கியிருந்த பொருள் நிலைமைத் துன்பங்களையும் நீக்குவதில், பயனற்ற அரசியல் பேசியதைத் தவிர, இந்தோனேஷ்யர்கள் வேறு எதையும் செய்து விடவில்லை.

அதோடு சீர்செய்ய இயலாதது போலக் காணப்பட்ட இடையூறுகளுக்கான முழுப்பழியையும் டச்சுக்காரர்கள்மீது போடுவதும் ஒரு பொதுக்கொள்கையாக இருந்தது.

இப்போது ஐந்து ஆண்டுகளுக்குப்பிறகும் ஏறக்குறைய இதேபோன்ற துன்பங்களை எதிர்த்துத்தான் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

அரசை ஆளும் துறையில் தேவைக்கு மிகையானவர்கள் அடைந்து இருக்கிறார்கள். போருக்கு முன்பு குடி உரிமை ஆட்சியில் இருந்ததை விட ஐந்துபங்குக்கும் மிகையான ஆட்கள் இப்போது இருக்கிறார்கள்.

அரசின் வரவு செலவில் ஒரு பெரும் பகுதி பொதுத் தன்மையான அலுவலகம், பாதுகாப்பும் படை, காவற் படை போன்றவற்றிற்குச் சம்பளம் கொடுக்கச் செல வழிக்கப்படுகிறது.

இவ்வாறு செலவழித்துங்கூட, அடிக்கடி நஞ்சு போல் ஏறிக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவுகளை சரிக்கட்டுமளவிற்கு அரசியல் ஊழியர்களுக்குப் போதிய அளவு சம்பளம் கொடுக்க முடியவில்லை.

இதன் விளைவாக நீக்கமுடியாதபடி கைக்கூலி தாண்டவமாடுகிறது. சில அலுவலர்கள் தங்கள் உரிமைகளைத் தீயவழியிற் பயன்படுத்தித் தங்கள் பைகளை நிறைவுபடுத்திக்கொள்கிறார்கள்.

இன்னும் பொருள் நிலைகளில் பெரிய அளவிற்கு அரசியலாரின் தலையீடு என்பது டச்சுக்காரர்களிடமிருந்து தலைமுறை உரிமையாகப் பெற்றவைகளில் ஒன்று. இந்தத் தலையீடு, கைக்கூலி செழித்து வளர்வதற்கு ஒரு விளை நிலமாக அமைந்துவிடுகிறது.

சுருங்கச்சொன்னால் முழுப் பொருள்நிலை வாழ்வும் பெரும்பாலும் அரசினர் அலுவலகங்கள் மூலமும், அலு

வலர்களின் செயல்முறைக் கடிதங்கள் மூலமுமே நிறைவேற்றப்படுகிறது.

இத்தகையதொரு பொருள்நிலை வாழ்வில் நடுநிலை இடமாக இருப்பது வாணிபம்; அரசு ஏற்றுமதிகள்மீது கடுமையான சுங்கவரி இட்டு, தனது வருவாயிற் பெரும் பகுதியைப் பெறுகிறது. இவ்வகையில் பல இறக்குமதிப் பொருள்களுக்கு நூற்றுக்கு 200 விழுக்காடுவரையிலும், ஏற்றுமதிப் பொருள்களுக்குச் சற்று குறைவாகவும் சுங்கவரி இடப்படுகின்றன. விலைவாசி ஏற்றத்திற்கு இந்த உயர்ந்த சுங்கவரிகளும் ஒரு காரணம்.

அதோடு இந்தப் பணவீக்க நிலைமைக்கு மற்றொரு சிறப்பான காரணமும் உண்டு. அதுதான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் அரசின் உற்பத்திப் பெருக்கமில்லாப் பெருஞ்செலவு.

இதன் விளைவாக 1954ல் மொத்த வரவு செலவுக் கணக்கான பன்னிரண்டு லக்ஷம் கோடி ரேப்யாவில் நாலு லக்ஷம் கோடி ரேப்யா துண்டு விழும்படி நேரிட்டது. அதிலும் சென்ற 1955 முற்பகுதியில் மட்டும் ஒன்றரை லக்ஷம் கோடி ரேப்யா துண்டுவிழுந்தது. பாங்க் ஆப் இந்தோனேஷ்யா விடமிருந்து கடனாகவோ அல்லது முன்பணமாகவோ புதிய நோட்டுகளைப்பெற்று, அவற்றைச் செலாவணியில் இறக்கி இந்தத் துண்டுவிழும் தொகைகளை அரசினர் சரிக்கட்டி வருகின்றனர். ஆனால் எத்துணை நாட்களுக்குத்தான் இப்படியே சீர்செய்து கொண்டு செல்ல முடியும்?

இஃதன்றி, சில ஆண்டுகளாக உலக வாணிப நிலைமைகள் எங்களுக்குத் தீமையாக இருந்து வருகின்றன.

எங்களது மூலப்பொருள்களை வெளிநாடுகளில் எப்போதும் நல்ல விலைக்கு விற்பனை செய்யமுடியாத நிலையிலிருக்கிறோம். எண்ணெய் நீங்களாகப் பிறபொருள்கள் நாங்கள் எதிர்பார்த்தபடி ஏற்றுமதியாகவில்லை. இந்தப் பொருள்களில் சிலவற்றின் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்தும் விட்டது.

மேலும் இந்தோனேஷ்ய நிறுவனங்கள் அயலாருக் குரியதாகவோ, அல்லது அவர்களது கண்காணிப்பின் கீழோ, இருக்கக்கூடாது என்னும் நாட்டுப்பற்றின் கொள்கையால் வாணிபம் மேம்பாடடைந்ததாகவுமில்லை.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து மீளத் தற்போது ஒரு முயற்சி நடக்கிறது. அதாவது இந்தோனேஷ் யாவின் பொருள்நிலை, பயிர்த்தொழிற் பொருள்களின் ஏற்றுமதியைக் குறைந்த அளவில் பொறுத்திருக்குமாறு செய்வதே அம்முயற்சி.

நாட்டைத் தொழில் மயமாக்குவதே இத்துறையில் ஒரு சிறப்பான நடவடிக்கையாக யிருக்கமுடியும். இது பற்றி அண்மை ஆண்டுகளில் எவ்வளவோ பேசப்பட்டும் பக்கம் பக்கமாக எழுதப்பட்டும் உள்ளது. ஆனால் நடைமுறையில், செயலளவில் நடந்ததோ மிகக்குறைவு. ஐ. நா. அவை நிபுணர்களின் துணைகொண்டு, திட்டக் குழு ஒன்று; நாட்டைத் தொழில் மயமாக்குவதுபற்றிப் பல்வேறு திட்டங்கள் தீட்டியுள்ளது. ஆனால் இந்தத் திட்டங்களை அரசினால் பெரும்பாலும் நடைமுறைக்குக் கொண்டுவர முடியாதிருக்கிறது. இதிலுள்ள ஒரு முதன்மையான துன்பம், மேலாளர் (Manager) முதல், திறமை மிக்க தொழிலாளர்வரை நல்ல பயிற்சி பெற்றவர்கள் கிடைக்கப் பெருமையேயாகும்.

நாங்கள் வரவர மிகுதியாக உணரக்கூடிய இடர்ப்பாடு மற்ருென்றுண்டு. அதுதான் பொருள் பஞ்சம்.

புதிய திட்டங்களுக்கு மட்டுமின்றி, ஏற்கனவே தொடங்கப்பெற்று நடந்துவருகிற பல திட்டங்களை நிறைவு செய்வதற்கும்கூடப் பணமில்லை. தனியார் துறையின் நிலையும் இதேதான். அந்தத் துறைக்கும் வேண்டுமளவு பணம் கிடைக்காததால், நாட்டைத் தொழில் வளமாக்குவது தொல்லையாக இருக்கிறது.

இதுமட்டுமல்ல, புதிய தொழில்களுக்கு இன்றியமையாததான பெரிய அளவு பொறிகளை அரசினர் இறக்குமதி செய்வதும் அரிதாக இருக்கிறது. போதுமான அந்நிய நிபுணர்களை வரவழைப்பதுங்கூட எங்களால் முடியாதிருக்கிறது.

ஆக இவ்விதம் தொழில் மயமாக்கும் திட்டம் கடந்த ஐந்தாண்டுகளில் மிகக்குறைவான பலனையே அளித்திருக்கிறது என்று சொல்லவேண்டும். மேலும் எண்ணெய் நிறுவனங்கள் தவிர மற்றவை தம் நிலையைப்பற்றி ஏங்கும் நிலையிலேயேதான் இருக்கின்றன.

எனவே, தன்னுட்சி ஏற்று ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும், இந்தோனேஷ்யாவின் இன்றுள்ள பொது நிலை, ஊக்கமூட்டும் முறையில் இல்லை. இன்னும் நாங்கள் பழைய ஆட்சிச் சிக்கல்களை எதிர்த்துப் போராடவேண்டிய நிலையில்தான் இருக்கிரும். படை வலுவும் அதன் கட்டுப்பாடும் அவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பதாகக் கூறமுடியாது.

பொது ஆட்சிக்குள் மேலும் மேலும் கைக்கூலி பரவி வருகிறது. பொருள் நிலை இன்னல்கள் மலை மலையாக

அச்சம்தரும் வகையில் விரைவுடன் குவிந்து வருகின்றன.

இவையெல்லாம் போதாதென்று வட சுமத்ரா, மேற்கு ஜாவா, தென் செலிபாஸ் முதலிய பகுதிகளில் அரசினரை எதிர்த்துப் படைக்கலமேந்திய போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இத்தகைய கடுமையான நெருக்கடிகளுக்கும், சிக்கல்களுக்குமிடையே பெரும்பான்மையான அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் என்ன? இவைகள் வீணை பயனற்ற சொற்போரில் இறங்கியுள்ளன; நிலைமையைச் சீர்திருத்துவதற்குப் பதிலாக மேலும் சிக்கலாக்கி வருகின்றன.

இன்று நாட்டிலுள்ள கேடான நிலையைக்கண்டு உள்ளூர மகிழ்ச்சியடையும் ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சிதான். ஏனென்றால், இந்தக் குழப்ப நிலையிலிருந்து முதலெடுக்கலாமென்று அது நம்புகிறது. முதலில் கம்யூனிஸ்டுகள் அலி சாஸ்ட்ரோ மிட்ஜோஜோவின் (நாட்டுரிமை இயக்க) அரசிற்குச் சார்பாக இருந்தனர். காரணம் வேறு எந்த அரசையும் விட அது நாட்டைக் குருட்டுப் பாதையில் இட்டுச் செல்லும் என்று கருதினர். பிறகு (மஸ்ஜுமி சோஷலிஸ்டுகளைக் கொண்டு அமைந்த) 'ஹாரஹாப்' கூட்டு அமைச்சர் அவையை அது மேலை நாடுகளின் சார்புடையது என்பதற்காக எதிர்த்தனர். இப்போது கம்யூனிஸ்டுகளைத் தவிர மற்றெல்லாக் கட்சிகளையும் கொண்டு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள அலிசாஸ்ட்ரோமிட் ஜோஜோவின் கூட்டு அமைச்சரவையையும் கம்யூனிஸ்டுகள் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று தெரிகிறது.



7. *Garuda*. Bronze Javanese figure (11 inches high)
Collection Mr. & Mrs. Wolff



8. I. REDING: *Balinese Rural Scene* Photo Oliver Baker
Collection Mr. & Mrs. Wolff

அயல்நாட்டு நிகழ்ச்சிகளில் இந்தோனேஷ்யாவின் நடவடிக்கைகளை அதன் உள்நாட்டுச் சிக்கல்களின் சூழ் நிலையில் வைத்துப் பார்க்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக இன்று டச்சுக்காரர்களோடு மனநிறைவான உறவு இல்லை. காரணம் இந்தோனேஷ் யாவின் பொருள்நிலை வாழ்வில் அவர்கள் இன்னும் தனி உரிமையுடன் ஆட்சி செலுத்துகின்றனர். ஆக இவ் விதம் மேற்கு இரியன் நிலை நெருக்கடியான சிக்கலாகி விட்டது. டச்சுக்காரர்களோடு எங்களுக்குள்ள இந்த வழக்கில், முறைவேண்டி நிற்கும் எங்களுக்கு உலகம் துணை புரியும் என்று எதிர்பார்க்கிறோம்.

மேற்கு இரியனியல் மட்டுமின்றி எல்லா இடங் களிலுமே இந்தோனேஷ்யாவின் பொருள்நிலை வளர்ச் சிக்கும், முன்னேற்றத்திற்கும் டச்சுக்காரர்கள் இன்னும் தடைபோட்டு வருகிறார்கள். உண்மையில் இது நாட் டுணர்வின் நடுப்பகுதியாக விளங்குகிறது.

எனினும் இந்த உணர்வே, எண்ணமே நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ளது; எங்களது குறைபாடுகளைத் தெரிந்துகொள்ளாதவாறு மறைக்கும் ஒரு மூடு திரையாகவும் இவ்வுணர்வு இருந்து வருகிறது.

இன்று இந்தோனேஷ்யர்களுக்கு மிகமிகச் சிறப் பாகத் தேவைப்படுவதெல்லாம் நாட்டில் தற்போதுள்ள நிலையையும், சிக்கல்களையும், துன்பங்களையும் பற்றிய ஒரு உண்மையான அறிவு; பின்னர் இவற்றைத் தீர்ப் பதற்கான சிறந்த திறமை—ஆகிய இவை இரண்டும் தான். காலப்போக்கில், பழக்க முறையில் இவை இரண் டும் பெறுவது உறுதி. ஆயினும் தற்போதைக்கு இவ் வகையில் நாங்கள் வெகுவாகப் பின்தங்கியிருக்கிறோம்.

ஒரு புறம் பல சிக்கல்கள் அடுக்கடுக்காக உயர்ந்து கொண்டே போகையில், மற்றொரு புறம் எங்கே எப்படித் தொடங்குவது என்று இன்னும் தெரியாதிருக்கிறோம்.

ஆனாலும் இவற்றிற்கிடையேயும் ஒரு ஆறுதல் அளிக்கும் செய்தி என்னவென்றால், கிராமப்புற மக்கள் அரசினர் நிலையில் உள்ள இந்தச் சிக்கல்களால் இன்னும் வெகுவாகப் பாதிக்கப்படவில்லை என்பதே.

தேசா அல்லது கிராமத்தில் வாழும் மக்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்கிறார்கள். வெளி உலகிலிருந்து அவர்களுக்குத் தேவைகளும் மிகுதி இல்லை. மேலும் பணமில்லாமலேயே வாழ முடியும் என்பதைக் கிராம மக்கள் கடந்த காலத்தில் நிலைநாட்டியுள்ளனர்.

ஆகவே எங்கள் நாட்டின் வாழ்வில், உறுதியான நிலையும் ஒழுங்கும் நிலவுவதற்குத் தகுந்த சூழ்நிலை பெரும் பகுதியில் பரவியுள்ளது.

மற்றப்படி கலகக்காரர்களும் கோரில்லாக்களும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பகுதிகளில் உள்ள கிராமங்களில் மட்டும்தான் அமைதியின்மை நிலவுகிறது. இந்தக் குழப்பப் பகுதிகள் மேலும் விரிவாக்கப்படாமல் இருக்குமானால், கம்யூனிஸ்டுகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் முழு நாட்டுக் குழப்பம் ஏற்படாத முறையில் தடுப்பதற்கு இந்தக் கிராமப்புற உறுதி நிலையும் ஒழுங்கும் நல்ல ஏதுக்களாக இருக்க முடியும்.

இது உண்மையெனின் நமது குறைபாடுகளைத் திருத்திக் கொள்ள ஒன்றும் காலம் தாழ்ந்துவிடவில்லை என்பது தெளிவு.

இன்னும் மிகையான செயல் அறிவைப் பெறுவதிலும் நமது நாட்டு அரசியல் இன்னும் திறமையோடு நடைபெறவேண்டும் என்பதிலும் நாம் கருத்துச் செலுத்த வேண்டும்; அதேபோன்று ஒரு புதுமைமிக்க பொருள்நிலை அமைப்பை உண்டுபண்ணுவதற்குத் தேவையான ஆட்சிமுறை, தொழில் திறமை முதலியவைகளைப் பெறுவதிலும் நாம் ஆர்வம் காட்டவேண்டும்.

அப்போதுதான் நமது நாட்டின் ஆட்சி மிகவும் திறம்பட நடக்க முடியும்; நமது பொருள் நிலையின் அடித்தளமும் உறுதியோடிருக்க முடியும்.

இவை இரண்டுமே நமக்கு இன்றியமையாத முறையில் தேவைப்படுகிற, பொருளீடுகளையும் பெரிய அளவுப் பொறிகளையும் பெறுவதற்கான திட்டவட்டமான ஏற்பாடுகளாகும்.

தொலை நோக்குக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் இந்த ஏற்பாடுகள் நிறைவேறுவதற்கு வாய்ப்பே இல்லை என்று கூறிவிடமுடியாது. இந்தோனேஷ்ய மக்கள் அதாவது கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் உள்ள பொதுமக்கள் அமைதி நிறைவானவர்கள். கடின உழைப்பாளர்கள் பல நல்ல குணநலன்களைக் கொண்டவர்கள்.

இந்தோனேஷ்யாவை இன்று எதிர்நோக்கி இருக்கும் துன்பங்களுக்கெல்லாம் அவர்கள் பொறுப்பாளிகள் அல்லர்.

நாட்டின் முதல் பொதுத்தேர்தல்கள் சில திங்கள்களுக்கு முன்பு நடைபெற்றன. இந்தத் தேர்தல்களில் அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறையும் ஆர்வமும் வருங்காலத்தில் நாட்டு நடவடிக்கைகளில் அவர்கள்

சிறிதளவாவது பொறுப்பு வகிப்பார்கள் என்பதையே எடுத்துக்காட்டின.

இதுவரை இந்தப் பொறுப்பைப் படித்தவர்களும் அரசியல் தொடர்புடையவர்களுமே வகித்தார்கள். இந்த அரசியல் பொறுப்பாளர்கள் தங்களது செயல் அறிவுக் குறைவால், பழக்க வழக்கக் குறைவால் புதிய இந்தோனேஷ்ய அரசை ஒரு துன்பமான, இக் கட்டான நிலையில் சிக்கவைத்து விடக்கூடும் என்ற போதிலும், மக்கள் ஒன்ருக அணிதிரண்டு, தங்கள் வலுவை ஒன்று திரட்டி, நாடு நற்பாதையில் செல்லத் துணைபுரிவார்கள் என்று உறுதியாக நம்பலாம்.

ஆனல் கம்யூனிஸ்டுகளுக்கோ இந்த நம்பிக்கை இல்லை. நாடு என்கிற வகையில் இந்தோனேஷ்யாவின் வாழ்க்கை படுதோல்வி அடையும் என்றே அவர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

என்னைப் பொறுத்த வரையில் மக்களின் மறுமலர்ச்சி ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதுதான் கம்யூனிஸ்டு கள் இவ்வாறு செய்வதற்குக் காரணம் என்று திட மாகக் கருதுகிறேன்.

# 7. இந்தோனேஷ்யப்பண்பாட்டில் சில முரண்பாடுகளும் வேற்றுமைகளும்

எழுதியவர் :

## எஸ். தக்தீர் அலிஸ்ஜாபானு

இரண்டாவது உலகப்பெரும்போர், எதிர்பாராத மாறுபட்ட விளைவுகளை இந்தோனேஷ்யாவில் ஏற்படுத்திற்று. நாங்கள் நான்கு ஆண்டுகள் ஜப்பானிய வலுக்கட்டாய ஆட்சியின் கீழ் இருந்தோம். இந்த வலுக்கட்டாய ஆளுகையின் கீழ் நாடே அதிர்ந்து குலுங்கிற்று. டச்சுக் குடியேற்ற ஆட்சியில் உறுதியோடிருப்பது போலத் தென்பட்ட சட்டமும் ஒழுங்கும், ஜப்பானிய வலுக்கட்டாய ஆளுகையின்போது நிலை குலைந்தன.

வாழையடி வாழையாக அமைதிப் பூஞ்சோலைகளாக விளங்கிய கிராமங்கள், திடீரென்று மாறுதலடையத் தொடங்கின. கிராமப் பகுதிகளை முடிந்த மட்டும் மாற்றத்திற்கு உட்படுத்தாமல் டச்சு ஆட்சி விட்டு வைத்திருந்தது. ஆனால் ஜப்பானியர்களோ இதற்கு நேர்மாருக நடந்துகொண்டார்கள். அதாவது வேளாண்மைக்காரர், அரசினர் ஊழியர், பள்ளி ஆசிரியர், சமயத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள் முதலிய ஒருவர் பாக்கியில்லாமல் மக்கள் பகுதி முழுவதையுமே, தங்களது விரிந்த கிழக்காசிய தனியரசாட்சிக் கனவுகளுக்குச் சார்பாக-துணையாக எழுச்சியுறுமாறு ஊக்குவித்தனர். அதிலும் இந்த வகையில், தனது ஆற்றலை நன்குணர்ந்த இந்தோனேஷ்ய இளைஞனை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். ஜப்பானியர்கள் திட்டமிட்டுத் தயாரித்திருந்த கொதிக்கும் போர்க் கொப்பரையில், அவன் குறிக்கோள் நோக்கோடு குதித்தான்.

ஜப்பானியர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட பிறகு, டச்சுக்காரர்களுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த புரட்சியை, இந்தப் பின்னணியோடுதான் பார்க்க வேண்டும். பொதுவாக இந்தோனேஷ்யர்கள் அமைதியான மக்கள். அப்படிப்பட்டவர்கள் இந்தப் புரட்சியின் போது, திடீரென்று தெருப்போர் புரிபவர்களாகவும், கள்ளக் கடத்தற்காரர்களாகவும், பெரிய பொதுமக்கள் அணிவகுப்புக்களை நடத்துபவர்களாகவும், கொரில்லாக்களாகவும், ஏன், குறிக்கோள் வெறிகொண்டவர்களாகவும், கலைஞர்களாகவும்கூட ஆகிவிட்டனர். மேலும் இந்தக் கொந்தளிப்பிலிருந்துதான் இந்தோனேஷ்யாவின் இன்றைய சிக்கல்கள் எழுந்தன. நாடு விடுதலையடைந்த பிறகு இந்தோனேஷ்யா மக்கள் அலை அலையாக

முரண்பாடுகளையும், மோதல்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்க வேண்டியவர்களாயினர்.

தொழில் முறையிலும், அரசியல் முறையிலும் இன்று ஏற்பட்டுள்ள பல துன்பங்களுக்கு, பழக்கமுடைய ஆட்கள் போதிய அளவில் கிடைக்காததே காரணம்.

எடுத்துக்காட்டாக நாட்டின் மொத்த மக்கள் தொகை எட்டுக்கோடியில், இந்தோனேஷ்யா முழுவதும் சுமார் 1500 பட்டம்பெற்ற மருத்துவர்கள், 400 வழக்கறிஞர்கள், நன்கு தேர்ச்சிபெற்ற பொறி இயல் வல்லுநர்கள் 150 பேர்கள், ஆகியோர்தான் உள்ளார்கள். மேலும் நாட்டின் சிக்கல்களைச் சீர்செய்ய 15 பொருளியல் வல்லுநர்கள்தான் இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, இன்று இந்தோனேஷ்யாவில் அஞ்சல்கள் காலந்தாழ்த்திக் கிடைக்கின்றன வென்றால், அதற்குக்காரணம் என்ன வென்று நினைக்கிறீர்கள்? எங்கள் நாட்டு அஞ்சல்காரர்களில் சிலருக்கு இன்னும் படிக்கத்தெரியாதென்பது தான்.

இவை தவிர ஆழமானதும் நற்பேறற்றதுமான நீண்டகால இக்கட்டுகளும் உள்ளன. போரும் புரட்சியும் விடுதலையும் இந்தோனேஷ்யாவின் பண்பாட்டுச் சிக்கல்களைக் கூர்மைப்படுத்திவிட்டன. இன்று பண்பாட்டுத் துறையில் நாங்கள் கடுமையான வேதனைக்குள்ளாகியிருக்கிறோம்.

கடந்த இரண்டாயிரமாண்டுகளுக்கும் மேலான இந்தோனேஷ்யாவின் வரலாற்றில், நான்கு பண்பாட்டுக் காலக்கட்டங்களே இன்றைய எங்களது கண்ணோட்டத்தை உருவாக்கியுள்ளன. ஹிந்து காலக்கட்டத்திற்கு

முந்திய மிகத் தொன்மையான பண்பாட்டின் அடை யாளங்கள் இன்னும் காணக்கிடக்கின்றன. இப்போது நாம் விஞ்ஞானம் என்று அழைப்பது பண்டைக்காலத் தில் எவ்வாறிருந்தது தெரியுமா? மாயமான ஆவிகளை யும் ஆற்றல்களையும் பற்றிய அறிவும், அந்த அறிவி லிருந்து மனிதத் தேவைகளுக்கேற்ப எடுக்கப்படும் முடிவுகளுமே அன்று விஞ்ஞானம். அதாவது வேறுவித மாகச் சொன்னால், இந்த மாய ஆற்றல்களைப்பற்றிய நிறை அறிவும், அவற்றோடு தொடர்பும் கொண்டிருப் பவனே அந்தக் காலத்தில் மிகப்பெரிய மனிதன் என்று கருதப்பட்டான்.

பண்டைக்கால மனிதனுக்கு அறிவுத் தெளிவு குறைவு. அவனது சமுதாய, பொருள்நிலை, அரசியல் எண்ணங்களும், நடைமுறைகளும் மரபுப் பண்பிலி ருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்துமே எழுந்தன. அவ னுக்கு இவைகள் புனிதமானவை, மாற்றமுடியாதவை. ஆகவே இவ்வாறு அவனது முழு ஆன்மீக வாழ்வும், சமு தாய வாழ்வும் கடந்த காலத்தின் கட்டளைப்படியேதான் நடந்தன. சமுதாயமோ மிக நெருக்கமாக ஒன்றிப் பிணைந்த, நெருங்கிய குருதி உறவுகொண்ட சிறுசிறு குழுக்களாக அமைந்திருந்து. ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வது என்னும் பண்டைக்கால மரபுப்பண் பின் காரணமாக இந்தக்குழுக்கள் ஒன்றோடொன்று ஒத் திசைந்து வாழ்ந்தன. மேலும் தனி ஆள் அல்லது சமு தாய வாழ்வு சார்ந்த எந்த ஒரு நற்செயலும் கூட்டு ஆராய்ச்சியின் மூலமே செயல்பட்டன. 'முதியவர்' என்ற சொல் நாளடைவில் அறிவையும், புனிதத்தையும், ஆற்றல்திறனையும் குறிக்கத் தொடங்கின. இத்தகைய வாழ்க்கை முறையே பெரும் பகுதி இந்தோனேஷ்யக்

கிராமாந்திர மக்களுக்கு இன்றளவும்கூட இயற்கை யாகவே தோற்றமளிக்கின்றது.

இரண்டாவது நூற்றூண்டில் இந்தியாவேடு இந்தோ னேஷ்யாவிற்குத் தொடர்பு ஏற்பட்டது. அப்போது இந்தியாவில் சிறந்த வாழ்க்கைப்பண்பாடு நிலைபெற்றிருந்தது; நூல்களும் இலக்கியங்களும் வெகுவாக வளர்ந்திருந்தன; பொருள் படைத்து விரிந்த, பரந்த அரசுகளிலே, சமுதாய வாழ்வு பெரிதும் பண்பட்டிருந்தது. அதோடு இந்தியர்கள் உயர்வான போக்குவரத்து அமைப்பை நிறுவியிருந்தனர். தலைமுறை உரிமை அடிப்படையில் பல நிலைப்பட்ட ஆட்சியாளர்களைக்கொண்ட ஒரு பொது ஆட்சி நடைமுறையிலிருந்தது; ஏராளமான நிலையான படைபலமும் இருந்தது. அவர்களது சமயம் பல கடவுள்களைக்கொண்ட ஒரு கலவைச் சமயமாக விளங்கிற்று. ஹிந்துக்களோடு ஏற்பட்ட தொடர்பால் இந்தோனேஷ்யர்கள் வெகுவாகக் கவரப்பட்டனர். இரண்டாம் நூற்றூண்டுமுதல் பதினைந்தாம் நூற்றூண்டு வரை இந்தோனேஷ்யாவில் இருந்த **ஸ்ரீ விஜயா, மஜபஹித்** அரசுகள் இந்தியப் பண்பாடு, பழக்க வழக்கங்களைப் பின்பற்றியே பரந்த பகுதிகளில் ஆட்சி செலுத்தி வந்தன. ஆவிகள், மூதாதையோர் பற்றிய இந்தோனேஷ்யச் சமயக் கண்ணேட்டமும். தேவகணங்கள் பற்றிய ஹிந்துக்களின் கொள்கையும் ஏறக்குறைய ஒன்று போலிருந்தன. புதிய சமுதாய, பொருள்நிலை வாழ்வு இந்தோனேஷ்ய சமுதாயங்களுக்கும், கடல் கடந்து உள்ள ஏனைய நாடுகளின் சமுதாயங்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுவதை ஊக்குவித்தது. இந்தக் காலக்கட்டத்தில்தான் மையமான ஜாவாவில் சிறப்புமிக்க சிற்பக்கலை செழித்து வளர்ந்தது.

**போரோபுடூர், பிராம்பனன்** ஆகிய இடங்களில் உள்ள புத்த, ஹிந்துக் கோயில்கள் அன்று நிலவியிருந்த செழிப்புமிகு சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் அஃதன்றி இந்தோனேஷ்யாவின் இலக்கியமும் அந்தக் காலத்தில்தான் பிறந்தது. ஓவியம், ஆடல் கலைகளும் அன்று வளர்ந்தோங்கின.

இதன்பிறகு பதின்மூன்றுவது நூற்றாண்டில் இந்தோனேஷ்யாவின் மீது ஒரு புதிய பண்பாட்டுப் படையெடுப்பு நடைபெற்றது—அதுதான் இஸ்லாம் மதத்தின் வருகை. இந்தோனேஷ்யாவின் பண்டையப் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் இந்தியாவின் பண்பாடுகளும் நடைமுறைகளும் எளிதாக இணங்கிப் போன நிலைமையில் இஸ்லாம் மட்டும் முற்றிலும் புதிதான வாழ்க்கைச் சூழல்களைப் புகுத்திற்று. அதாவது கடவுள்கள், ஆவிகள் பற்றிய பழங்கதைகளை வெறும் மூடநம்பிக்கைகள்என்று ஒதுக்கிற்று; கடவுள்கள் முதல், மனித இனம் ஈறாகக் காணப்பட்ட பல நிலைப்பட்ட இன அமைப்புகளை உடைத்தெறிந்து; கடவுள் ஒருவரே, அவர் முன்னால் எல்லா மனிதர்களும் ஒத்த இயல்பினரே என்ற கொள்கையை நிலைநிறுத்திற்று. முன்னைய சமயத்தோடு பிணைந்திருந்த கலை சிதைவுற்று தன் வலுவை இழந்தது. முஸ்லிம் கடவுள் ஒருவர்தான் உண்டு எனக் கூறி, அனைவரும் அவருக்குத்தான் நேரடி வழிபாடு நடத்தவேண்டுமென்று இஸ்லாம் போதித்தது.

இதற்குப் பின்னர், இந்தோனேஷ்யாவின் மீது கடைசிப் பண்பாட்டுப் படையெடுப்பு மேற்கிலிருந்து வந்தது. இவ்வாறு உட்புகுந்த இந்த ஐரோப்பியப் பண்பாடு பகுத்தறிவையும், உலகக் கண்ணோட்டத்தையும் வலி

யுறுத்திற்று. மனிதன் ஆறறிவு படைத்தவன் என்கிற வகையில் இயற்கையின் உண்மைகளைக் கண்டு பிடித்து, அதை அடக்கியாள வேண்டும் என்று வற்புறுத்திற்று. வேறு விதமாகச் சொன்னால், இந்தோனேஷ்யாவின் பண்டையப் பண்பாடு, தலை முறை உரிமையையும், நம்பிக்கைகளையும் உள்ளடக்கியதாக இருந்தது; ஆனால் ஐரோப்பியப் பண்பாடோ இடைவிடாத இயக்கத்தையும் முன்னேற்றத்தையும் குறித்தது. மேலும் ஐரோப்பியப் பண்பாட்டின் முழுக்கவனமும் எதிர்காலத்தையும், இளமையையும், தன் ஆற்றலையும் ஒளி முகப்பாகக் கொண்டதாகும்.

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் இந்தோனேஷ்யாவின் முழு அரசியல், பொருள்நிலை, சமுதாய வாழ்விலும், மேற்கத்தியச் செல்வாக்குப் படிப்படியாக ஊடுருவிற்று. இதனால் இந்தோனேஷ்யாவின் சமுதாயக் கட்டுக்கோப்பில் விரைவான மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரு சிறிய, ஆனால் சிறப்புமிகு இந்தோனேஷ்யப் படிப்பாளிகளின் கூட்டம் ஒன்று உருவாயிற்று. இவர்கள் மேலைநாடுகள் அளித்த அறிவையும் ஆற்றலையும் துணைக் கொண்டே, பல நூறாயிரம் பேர்களை குடியேற்ற ஆட்சி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யத் தலைமை ஏற்றனர். இந்த விடுதலை, மேற்கத்தியப் பண்பாட்டிலிருந்தல்ல; அதற்குப்பதில் இத்தனை காலமாக எங்களை அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்த மேலை அரசியல், பொருள்நிலை இரும்புப்பிடியிலிருந்தே இந்த விடுதலை. இன்னும் புதிய அனைத்துலகப் பண்பாட்டுக்குள்ளேயே இந்த விடுதலை.

ஆக இன்றைய இந்தோனேஷ்யப் பண்பாடு ஒரு குறிப்பிட்ட செல்வாக்குக்கு மட்டும் உட்பட்டதல்ல;

மாருக இது பல்வேறு பண்பாடுகளின் ஒரு கலவை, பின்னல். இந்த வெவ்வேருன பண்பாட்டுக் கட்டங்கள் ஒரு வரலாற்று நூலில் இருக்கும் தனித்தனியான பிரிவுகள் போலில்லாமல், ஒன்ரேடொன்று கலந்து போயுள்ளன. இந்தக் கலவையின் அளவும் விகிதமும் இடத்துக்கு இடம் மாறுபடுகின்றன. பாலியில் இந்தியப் பண்பாட்டின் சில நடைமுறைப் பழக்கவழக்கங்கள், இசைவுடன் சேர்க்கப்பட்டு, அவைகள் திட்டவட்டமான புதிய பண்பாட்டு உருவங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. மையமான **ஜாவா**வில் இஸ்லாமிய, மேற்கத்தியப் பண்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இணைந்துபோயுள்ளன. **மினஹாஸா, அம்பான்** மற்றும் பல பகுதிகளில் மேற்கத்திய பண்பாட்டோடு நேரடித் தொடர்பு ஏற்பட்டும் கூட, அங்கே மிகத்தொன்மையான இந்தோனேஷ்யப் பண்பாடு இன்றும் அவ்வாறே இருக்கிறது. **அக்கேயில்** இஸ்லாமியப் பண்பாடுதான் மேலிட்டு நிற்கிறது. இவ்வாறு இந்தோனேஷ்யா நானுவிதப் பண்பாடுகளைக் கொண்ட ஒரு நாடாக இருக்கிறது. இதனைப் பார்க்கும் போது நாங்கள் ஒரே நேரத்தில், முப்பது நூற்ருண்டுகளில் வாழ்கிரேும் என்று சொல்லத் தோன்றுகிறது. ஒரு மதிப்பீட்டில், நாங்கள் **நியாஸ்** போன்ற தீவுகளில் கற்காலத்தில் வாழ்கிரேும்; மறு முனையில் நாங்கள் **ஜகர்தா** போன்ற தீவுகளில் பொறி இயல் ஊழியில் வாழ்கிரேும். இதன் விளைவாக இன்று இந்தோனேஷ்யாவில் குழப்பமான, சிக்கலான பல பண்பாட்டுச் சூழ்நிலைகள் எழுந்துள்ளன.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், எதிர்காலக் கல்வி அமைப்புமுறை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதுபற்றி ஒரு உரையாடல் நடந்துவருகிறது. இது

பற்றிப் பலர் பலவாறாகக் கருத்துக்கள் தெரிவித்து வருகின்றனர். சிலர் பழைய இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி பள்ளிகள் நடக்கவேண்டும்; மதச்சார்புடைய ஆசிரியர்கள் தலைமையில் மதத்தத்துவங்களைப் பயிற்றுவிக்க வேண்டும், இளைஞர்கள் குரானை இடையறா நினைவுடன் ஒப்பிக்கக் கற்கவேண்டும் என்கின்றனர். இன்னும் சிலர் இந்தியாவின் பண்டைக்கால முறைப்படி பள்ளிகளை நடத்தவேண்டும் என்கின்றனர். வேறு சிலர் பழைய இஸ்லாமியக் கல்விமுறை, காலத்திற்கு ஒவ்வாததாகி விட்டது என்றும், அது இப்போதைய நிலைக்குப் பொருந்தாதது என்றும் கூறுகின்றனர். இது எவ்வாறிருந்தபோதிலும், பெரும்பாலோர், மேற்கத்திய முறையில் நடத்தப்படும் எந்தவித நடுநிலைமைக் கல்விமுறையையும் விரும்பவில்லை. ஏனென்றால் இந்தக் கல்விமுறை பகுத்தறிவுக் கோட்பாடு, தனியுரிமைக் கோட்பாடு, இயற்பொருள் கொள்கை முதலிய போக்குகளைப் பள்ளிகளில் வளர்த்துவிடும் என்று அஞ்சுகின்றனர்.

இது இவ்வாறாக, சட்டத்துறையிலும், இந்தோனேஷ்யப் பழக்கவழக்கச் சட்டம், முஸ்லிம் சட்டம், ஐரோப்பியப் பொது வாழ்வுச் சட்டம் ஆகியவற்றிடையே முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனால் இந்த முரண்பாடுகள் தொடக்கக் கட்டத்திலேயே இருக்கின்றன. போருக்கு முன்னர் டச்சுக்காரர்கள் பழமையான இந்தோனெஷ்யச் சட்டங்கள் பலவற்றை அப்படியே விட்டு வைத்திருந்தனர். சிலவற்றைச் சிறிது வளர்ச்சியுறவும் செய்தனர். இவ்வாறு அவர்கள் செய்ததன் நோக்கம், கிராம மக்கள் மாறாமல், வளர்ச்சி பெறாமல்

அப்படியே இருக்கவேண்டும் என்பதே. ஆயினும் இந்தோனேஷ்யா தன்னாட்சி ஏற்ற பிறகு, முஸ்லிம் சட்டம் முதன்மைபெற்று வருகிறது. ஆனால் **மினங்காபாவ்** போன்ற இடங்களிலிருந்து முஸ்லிம் சட்டத்திற்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த மினங்காபாவ் தாய்வழிச் சமுதாய அமைப்பின் கோட்டையாகும். இங்கே பண்டைக்காலச் சட்டங்களே இன்னும் நடைமுறையிலிருக்கின்றன. மேலும் மேற்கத்தியப் பண்பாட்டில் ஊறிப்போன இளைஞர்களும், படித்தவர்களும் இஸ்லாம் சட்டம் கடுமையாகப் புகுத்தப்படுவதை எதிர்க்கின்றனர்.

இவ்வாறு நான் கூறும் போது, புதிய இந்தோனேஷ்யா என்பது ஒரே வாக்கு வாதங்களும் குழப்பங்களும் நம்பிக்கைக்குறைவும் மட்டும் நிரம்பிய நாடு என்று எவரும் எண்ணிவிட வேண்டாம். இதற்கு மாறாக, எங்கள் நாட்டின் சீரமைப்புப் பணிசார்பான பல்வேறு துறைகளிலும் இன்னும் நாங்கள் தொடக்க நிலையில் இருப்பதால், பல துணிச்சலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஏறக்குறைய அமெரிக்காவின் அளவிற்கு இருக்கும் எங்கள் நாட்டிற்கு ஒரு ஒன்றுபட்ட பொது மொழியை ஏற்படுத்தும் சிக்கலானவினாவை எடுத்துக் கொள்ளுங்கள். **மலாய்** மொழியை அடிப்படையாகக் கொண்ட இந்தோனேஷ்யப் **பஹாஸா** மொழி 1927-ல் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில்; இன்று சுமார் இரு நூறு மொழிகளைப்போசும் எட்டுக் கோடி இந்

தோனேஷ்ய மக்களையும் இந்தப் பொது மொழியின் கீழ் ஒன்று படுத்த வேண்டியிருக்கிறோம். அதோடு வளர்ச்சி பெறாத இந்த மொழியை மிகவும் சிக்கலாக, புதுமை மிகு விஞ்ஞானம், தொழில் நுணுக்கம், கலை, வாழ்க்கை முறை முதலிய வற்றிற்கேற்ப வளப்படுத்த வேண்டிய நிலையிலும் இருக்கிறோம். இது போன்ற பணி மேலை நாடுகளில் படிப்படியாகவே நடந்தேறி வந்திருக்கிறது. ஆனால் எங்கள் நாட்டிலோ பத்தாண்டு களுக்குள் இதனை நிறை வேற்ற வேண்டிய இன்றி யமையாத நிலையிலிருக்கிறோம்.

இதே போன்றதுதான் இந்தோஷ்யக் கல்வியமைப் பைச் சீரமைக்கும் செயலும். எங்கள் நாட்டில் பெரும்பாலான துறைகளில் படித்தவர்களும், பயிற்சி பெற்றவர்களும் மிகமிகக் குறைவாக இருப்பதால், மக்களுக்குக் கல்வியறிவு ஊட்டுவதே எங்கள் முதல் பணியாக இருக்கிறது.

அடுத்து இந்தோனேஷ்யாபற்றிக் குறிப்பிட வேண் டிய மற்றொரு முக்கிய செய்தி புதியகலை, இலக்கியத் தின் மலர்ச்சி. கடந்த முப்பது ஆண்டுகளில் மேற்கத் தியப் பண்பாடு மிக விரைவாகப் பரவியதன் காரண மாக, பழைய மரபுக்கு மாறான, புதிய இலக்கியங் களும் ஓவியக்கலையும் மலர்ந்தன. *1952*-ல் **லடண்டனி லும்**, *1953*-ல் **வெனீஸில் பியன்னேவிலும்** ஓவியக் கலைஞர் **அபாண்டி** வெற்றிகரமாக நடத்திய கண் காட்சி, புதிய இந்தோனேஷ்ய ஓவியக்கலையின் சாதனைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். ஆனால்

ஆடல் துறையிலே பழைய மரபு மிகவும் ஆற்றல் வாய்ந்ததாக இருப்பதால், இதற்கு ஒப்பான புதிய ஆடல் உருவங்களை இன்றைய இளம் வழித்தோன்றல் களால் தயாரிக்க முடியவில்லை.

புரட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில், அந்த எழுச்சி உணர்வில், இது போன்ற பண்பாட்டு முரண் பாடுகள், வேற்றுமைகள் பற்றி அதிக அக்கறை செலுத்தப்பட வில்லை. ஆனால் இப்போது இவற்றி லிருந்து தப்ப முடியாது. இந்தச் சிக்கல்களின் முழுத் தன்மையையும் நாங்கள் முழுமையாகத் தெரிந்து கொள்ளத் தொடங்கியதும், இவை இந்தோனேஷ்யாத் தொடர்புடைய சிக்கல்களாக மட்டுமன்றி, உலகச்சிக்கல் களாகவும் தோற்றம் தருகின்றன. மேலும் இந்தோ னேஷ்யப் பண்பாட்டின் பல்வேறு குணங்களின் தோற்ற விடங்களான இந்தியா, இஸ்லாம், சீனா, மேலை நாடுகள் முதலியவற்றிலிருந்து இன்றுங்கூட, உலகின் பல நாடு கள் ஆக்க அறிவாற்றலையும், உள்ள எழுச்சியையும் பெறு கின்றன. இதன்றி ஓர் உலக சமுதாயத்தை அமைப் பதில் எதிர்ப்படும் அத்தனை சிக்கல்களையும், ஒரு புதிய நாட்டை நிலைநாட்டத் தான் நடத்திவரும் போராட்டத் தில் இந்தோனேஷ்யா சிறிய உருவில் தோற்றம் தருகிறது.

இறுதியாக ஒரு செய்தி. மிகப் பெரிய பண்பாடு களிலிருந்து தோன்றிய–முன்னர்க் கூறிய முரண்பாடு கள் கிட்டத்தட்ட ஒன்றையொன்று இன்று எதிர்த்து நிற்கின்றன. இவற்றிற்கிடையே, விரைவிலேயே ஒரு

ஒத்த நிலை ஏற்படுத்த வேண்டிய இன்றியமையாத விரைவுநிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த விரைவுநிலையால் தூண்டப் பெற்று, இந்தோனேஷ்யா தனது சிக்கல்களுக்கு மட்டு மன்றி, உலகின் சில பண்பாட்டுச் சிக்கல்களுக்கும்கூடச் சீரான முறையில் நலம் காணுமென்று கள்ளங்கபடின்றி நம்புகிறோம்.

# 8. இந்தோனேஷ்யக் கலையின் போக்குகள்: நாடோடிக் கலைமரபும் மேற்கத்தியச் செல்வாக்கும்

---

எழுதியவர் :

டிரிஸ்னோ சுமார்ட்ஜோ

இன்று இந்தோனேஷ்யாவிற்கு வருகைதரும் எவரும், ஓவியர்கள் இரண்டு வெவ்வேறான மரபுகளில் ஓவியம் தீட்டுவதைக் காணலாம்.

ஒன்று நாடோடிக் கலை (Folk art) மரபு. இத்தகைய ஓவியங்களில் இன்று பழைமைத் தன்மையைவிடக் கலப் படம் தான் மிகுதியாக இருக்கிறது.

மற்ருென்று 'யூரேசியன்' மரபு. இது இந்தோனேஷ்யப் பண்போடமைந்த மேற்கத்திய எண்ணெய் ஓவிய (Oil Painting) முறை.

மேலைநாடுகளுக்குப் பழக்கமான 'புதுமைக்கலை' என்பது இப்போதுதான் இந்தோனேஷ்யாவில் பழக்க முறையிலே மெல்லத் தலைதூக்கத் தொடங்கி இருக்கிறது.

இந்தோனேஷ்யாவின் கலைப்பாரம்பர்யம் செழுமை மிக்கது. ஜாவாவில் போரோபுடூரிலும், பிராம்பனுனிலும் உள்ள கோயில்கள், இந்தியா அல்லது கம்போடியாவில் உள்ளவை போன்று அவ்வளவு அற்புதமானவைகள். ஆனுல் இந்தப் பாரம்பர்யம் பெரும்பாலும் சிற்பக் கலையைச் சார்ந்ததாகும்.

கிறித்தவ ஊழியின் தொடக்கத்தில்இந்தியாவுக்கும் இந்தோனேஷ்யாவிற்குமிடையே தொடர்பு ஏற்பட்டது.

இந்தத் தொடர்பு முதலில் கடல் வணிகர்களால் தொடங்கப்பெற்று, பின்னர் குடியேற்றங்களால் மிகுதிப் பட்டது.

இவ்வாறு ஏற்பட்ட இந்த்தொடர்புதான் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்தோனேஷ்யாவின் பண்பாட்டை உறுதிப்படுத்தியது.

இதற்குச் சான்றுகள் இன்றும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, எட்டாவது நூற்ருண்டில் கட்டப்பட்ட இணையற்ற **போரோபுடூர்** கோயிலில், புத்தசமயம் சார்ந்த கதைக்கான படங்கள் வரையப்பட்டுள்ளன. ஒன்பதாம் நூற்ருண்டுக் குரியதான **பிராம்பனுன்**

ஹிந்துக் கோயிலில், இந்தியாவில் உள்ள கோயில்களில் இருப்பது போன்றே ராமாயணக் கதைப் படங்கள் வரையப்பட்டுள்ளன.

இதிலிருந்து புத்த, ஹிந்து சமயங்கள் அன்று இந்தோனேஷ்யாவில் வெகுவாகப் பரவியிருந்தன என்பது தெளிவு. ஆனல் இன்றோ பௌத்தம் இந்தோனேஷ்யாவிலுள்ள சில சீனர்களின் சமயமாக மட்டுமே இருக்கிறது; இதேபோல ஹிந்து சமயமும் பாலியில் மட்டும்தான் வேரூன்றியிருக்கிறது.

அதாவது, பதின்மூன்ருவது நூற்ருண்டு முதல் பதினைந்தாவது நூற்ருண்டு வரை இஸ்லாம் மதம் அராபியாவிலிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து, வட இந்தியா வழியாக இந்தோனேஷ்யாவை அடைந்தது.

இவ்வாறு இங்கு வந்தடைந்த இந்த மதம், ஏற்கனவே இங்கு நிலைகொண்டிருந்த மற்ற இரண்டு சமயங்களையும் இந்தோனேஷ்யாவிலிருந்து வெளியேற்றி விட்டது.

இதைத் தொடர்ந்து இப்போது இஸ்லாம் இந்தோனேஷ்யாவின் முனைப்புள்ள மதமாக விளங்குகிறது.

எனினும் இதிலொரு வியப்பென்னவென்ருல், சிறிய ஓவியங்கள் போன்ற இஸ்லாமியக் கலைப் பாரம்பர்யம், இந்தோனேஷ்யப் பண்பாட்டை ஊடுருவிச் செல்லத் தவறிவிட்டது.

ஏழாவது நூற்ருண்டில் தொடங்கிய டச்சுக் குடியேற்றத்தைத் தொடர்ந்து, பரந்த அளவில் உள்நாட்டுக் குழப்பங்கள் தோன்றின. இந்தச் சூழ்நிலை காரணமாக

அந்தக் காலக்கட்டத்தில், கலைகள் குறிப்பிடத்தக்க முறையில் வளர முடியவில்லை. ஏதோ, நாடோடிக்கலை கிராம மட்டத்தில் நீடித்திருந்ததோடு சரி; மற்றபடி கலைத்துறையில் அப்போது ஒரு நீண்ட இடைவெளி ஏற்பட்டிருந்ததென்றே சொல்லவேண்டும்.

பின்னர் பத்தொன்பதாவது நூற்றாண்டில்தான் இந்தத் தேக்க நிலைமாறி ஐரோப்பியக் கலைகளின் செல்வாக்கு இந்தோனேஷ்யாவில் தலையெடுக்கத் தொடங்கியது.

இந்தவகையில் மேற்கத்திய நுட்பங்களை முதன் முதலாகக் கையாண்ட முக்கிய இந்தோனேஷ்ய ஓவியர் **ராடன் சாலே** (*1816–1880*) என்பவராவார். இவர் ஐரோப்பாவில் கல்விகற்றவர். **டெலாகிராய்** என்பவரின் ஓவியங்கள் இவரை வெகுவாகக் கவர்ந்தன.

*1938*-ல் ஜகர்தாவில் **பெர்சாகி** என்னும் 'ஓவியர்கள் கழகம்' அமைக்கப்பட்ட பிறகுதான் இந்தோனேஷ்யாவில், கலை வளரத் தொடங்கியது.

*1908*–ல், அரசியல் பண்பாட்டுக் கழகமான **புடி உடோமா** அமைக்கப் பட்டதைத் தொடர்ந்து, வளர்ந்துவரும் நாட்டுப்பற்றைப் .பெர்சாகி எதிரொலித்தது.

மேலும் பெர்சாகியில் உறுப்பினராயிருந்த ஓவியக் கலைஞர்கள், கடந்தகால மரபை விட்டு, தன் ஆற்றலைச் சார்ந்து நிற்கவேண்டுமென்று வலியுறுத்தினர்.

*1942* முதல் *1945* வரை நாடு ஜப்பானியரின் வலுக்கட்டாய ஆளுகையின் கீழிருந்தது. அப்போது இந்தோ

னேஷ்ய ஓவியர்களை அறிவிப்புக்களைப் பரப்பும் நோக்கங்களுக்குட் பயன்படுத்த ஜப்பானியர்கள் முயற்சித்தார்கள்.

ஜப்பான், இந்தோனேயஷ்யா ஆகிய இந்த இரு நாடுகளின் ஓவியர்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட ஊக்குவிக்கப்பட்டாலும், இந்த இடைக்காலம் மிகக் குறைவான உயிர் நலம் சார்ந்த செல்வாக்கையே கண்டது.

ஆயினும் ஜப்பானியர்களின் திட்டமிட்ட அமைப்பு முறை காரணமாக, புதிது புதிதாக ஏராளமான ஓவியர்கள் தோன்றினார்கள் என்பதை ஒப்புக்கொள்ளத் தான்வேண்டும்.

இதற்குப் பின்னர் 1945–ல் திட்டவட்டமான ஒரு புதிய கட்டம் தோன்றலாயிற்று. நாட்டின் விடுதலைக்காக நடைபெற்ற போராட்டம், ஓவியர்கள் உண்மையான நிலைகளோடு நேரடியான தொடர்பு கொள்ளுமாறு செய்தது.

மற்றும் தன் தேர்வும், ஓவியத் துறையில் புதிய புதிய முறைகளையும், நுட்பங்களையும் கையாளும் முயற்சியும் ஒருங்கே நடைபெற்றன.

இந்த வகையில், இவர்கள் பழைய முறைகளை வழிகாட்டியாகக்கொள்ள முனைந்தனர்; இன்னும் சிலர் ஐரோப்பிய மரபுகளை, அதிலும் குறிப்பாகப் பிரெஞ்சு மரபுகளைக் கையாள முற்பட்டனர்; மற்றும் சிலர் பலவித மரபுகளும் கலந்த இன்னதென்று கூறமுடியாத முறைகளைப் பின்பற்றத் துவங்கினர்.

இவ்வாறு ஊக்கம் மிகுந்த தேர்வுகளை மேற்கொண்டவர்களிலே **ஓ. எபண்டி** ஒருவர். இவர் ஓவியத் துறையில் தனித்தன்மை நோக்கி ஈர்க்கப்பட்டுள்ளவர். அதோடு வரி ஓவியத்தில் மிகவும் திறமை மிக்கவர் ஆவார்.

இன்று இந்தோனேஷ்யாவிலுள்ள ஓவியர்களிலே தலைசிறந்தவர் **அபண்டி** (பிறப்பு–1910) என்பதை எவரும் மறுக்கமுடியாது. இவரது தூரிகை ஓவியங்கள் ஆற்றல் மிக்கதை, நிறங்கள் பற்றிய இவரது அறிவுத் திறம் சிறப்புமிக்கது. எனவே தான் **கோகஸ்ச்கா** போன்ற புகழ்பெற்ற ஓவியர்களோடு இவரை ஐரோப்பிய ஆய்வாளர்கள் தாராளமாக ஒப்பிடுகிறார்கள்.

தற்போது ஜகர்தா, பாண்டுங், ஜோக்ஜகர்த்தா ஆகிய இடங்களில் மூன்று சிறப்பான கலைக்கூடங்கள் இருக்கின்றன.

இவை தவிர ஜாவா, பாலி, சுமத்ரா, சுலாவசி முழுவதும் சிறுசிறு கலைக்குழுக்கள் இருக்கின்றன.

மற்றும் ஏராளமான ஓவியர்கள் தற்சார்புடன் பணிபுரிகின்றனர்.

இப்போது இரண்டு கலைக் கல்லூரிகள் அமைக்கப் பெற்றுள்ளன.

ஜோக்ஜகர்த்தாவில் உள்ள கலைக் கல்லூரியில் கலைகளில் அரசியல் உள்ளடக்கம் கலந்திருக்க வேண்டுமென்ற எண்ணம், அண்மைக் காலமாக ஏற்பட்டிருக்கிறது.

பாண்டுங்கிலுள்ள கல்லூரியில் மேற்கத்திய முறையில் மிகையான அளவில் கலைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தோனேஷ்யாவில் ஓவியர்கள் கழகம்—பெர்சாகி—அமைக்கப்பட்டதிலிருந்து கலை நுட்பத்திலும், புதுமை முறையிலும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை, யாராலும் மறுக்க முடியாது.

இம்முறையிலும் இளம் ஓவியர்களின் படைப்புக்களில் இம் முன்னேற்றத்தைக் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகக் காணலாம்.

இன்று இந்தோனேஷ்யாவிலுள்ள ஒன்றிரண்டு பேர்கள்தான், நாற்பது ஆண்டுகளைக் கடந்துள்ள முதியவர்களாவார்கள்.

இவ்வாறு புதிதாக ஓவியத் துறைக்கு வந்தவர்களிலே அண்மையில் அமெரிக்காவிற்குச் சென்றுவந்த டெராச்மேன் என்பவரையும், ஜயினி எனப்படுபவரையும் குறிப்பிடலாம்.

மேற்கத்திய மரபான எண்ணெய் ஓவிய முறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள ஓவியர்களில் பெரும்பாலோர் பட்டணங்களில் வாழ்கின்றூர்கள். தங்களது சமுதாயத்தின் மரபைவிடத் தங்களது சொந்த மரபையே இவர்கள் வெளியிடுவதுடன், கலைப்பணி நிறைவுற்றதாகக் கருதி அமைவு பெருகிறூர்கள்.

மேலும் தங்களது ஓவியங்களுக்கான கருப்பொருள்களைத் தங்களது பண்பாட்டுப் பாரம்பர்யத்திலிருந்து எடுத்துக் கொள்வதில்லை; மாருகத் தங்களைச் சுற்றியுள்ள

வாழ்க்கைச் சூழலிலிருந்தே தேர்ந்தெடுத்துக் கொள்கிருர் கள்.

இது இவ்வாறிருக்க, கிராமப்புறங்களில் பழைய நாடோடிக் கலை மரபு இன்னும் வளமும் வனப்பும் பெற்றுத் திகழ்கிறது.

அதிலும் சிறப்பாகப் பாலித் தீவுகள், கலைகளுக்கு நல்லதொரு செழுநிலமாகத் திகழ்ந்து, நாட்டுக்குப் பெருமை தேடித் தருகின்றன.

ஹிந்து சமயம் இன்னும் வலிமையோடு விளங்கும் இந்தத் தீவுகள், ஓவியங்கள், ஆடலுக்கான முகமூடிகள், ஓவிய வேலைப்பாடுகளோடு கூடிய மரச்சாமான்கள் முதலியவற்றைச் சுற்றுப்பயணக்காரர்கள் விரும்பி வாங்கிச் செல்லும் இடமாகவும் விளங்கி, வெளி உலகில் நல்லதொரு கலை மேலிடத்தைப்பெற்று,மாருப்புகழுடன் திகழ்ந்து வருகின்றது.

போரோபுடூர், பிராம்பனன் சிற்பங்கள் செதுக்கப் பட்ட ஹிந்துப் பண்பாட்டுக் காலத்தில் சிறப்புற்றிருந்த ஓவியக்கலை பற்றி இப்போது சிறிதளவே தெரிய வந் திருக்கிறது.

எவ்வாருயினும் தலைமுறை தலைமுறையாக இன்றி யமையாத சிறிய மாற்றங்களுடன் வந்துள்ள நாடகம், ஆடல்களிலிருந்து பழைய ஓவியக் கலையின் மரபை ஒரு வாறு புரிந்து கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக **'வாயங்குலிட்'** எனப்படும் நிழல் நாடகத்தில் பயன்படுத்தப்படும் ஓவியங்கள் பழைய மரபைச் சேர்ந்தவைகளே.

இவை, இன்று சுவர்களை அழகு செய்வதற்கும், ஹிந்துப் பழங் கதைகளை விளக்குவதற்கும், மற்றும் நாட் குறிப்பிற்கான படங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய ஓவியங்களை இன்று உபுட், மாஸ், பாட்டுவான் முதலிய இடங்களில் புதிய பாலி ஓவியங் களிற் காணலாம்.

ஐரோப்பிய ஓவியர்களும் இவற்றிற்குச் சார்பளித்து வருகிறார்கள்.

இந்த வகையான ஓவியங்கள், கிராமாந்திர வாழ்க்கையை மிகவும் உயிர்ப்போடு எடுத்துக்காட்டுகின்றன. **ரெடிங்**கின் பாலிக் காட்சி ஓவியம் இதற்கொரு எடுத்துக் காட்டு.

பாலிக்கு வரும் சுற்றுப்பயணக்காரர்கள் வாங்குவதற்கென்று மிகையான அளவில் இந்த ஓவியங்கள் தயாரிக்கப்படுகின்றன.

மிகுதியாகப் பெரும்பாலான ஓவியங்களில் அவற்றை எழுதிய ஓவியர்களின் பெயர்கள் போடப் படுவதில்லை. என்ற போதிலும் இவைகள் பாலியின் அழகுமிகு இயற்கைத் தோற்றங்களையும், அன்றாட விழாக்கள், ஆடல்கள் முதலியவற்றையும் உண்மை உருவுடன் நம் கண்முன் நிறுத்தவல்ல ஆற்றலைப்பெற்றுத் திகழ்கின்றன.

அதிலும் பாலி நடனம் பற்றிய சில எழில்மிகு ஓவியங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாக இருக்கின்றன.

சில நேரங்களில் இந்த ஓவியங்களைவிட மரக்கட்டை களில் செதுக்கப்படும் சிற்பங்களுக்குப் பார்வையாளர் களிடையே மிகுதி விற்பனை இருக்கிறது.

இவை பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருக் கின்றன. எப்போதாவது சில ஓவியர்கள்தான் இதற்கு மாருகத் தங்களுக்குச் சொந்தமான தனி ஆற்றல் முறை யைக் காண்பிக்கின்றனர்.

பல்வேறு கலைஞர்களும் தங்கள் தொழில்களை நடத் தவும் கலைகளை வளர்க்கவும், பாலி நல்ல வாய்ப்புக்களை யும் துணைகளையும் அளிக்கிறது.

இங்கு நிலவளமும், நீர்வளமும் மிகுதியாக இருப்ப தால், வேளாண்மைக்காரரின் வேலை எளிமையாகி விடு கிறது.

இதனுல் அவன் ஆடல், முதலிய களியாட்டங்களில் ஈடுபட நிறைய ஓய்வு கிடைக்கிறது.

இந்த ஆடல்களுக்கு முகமூடிகளும், சிற்ப ஓவியங் களும் தேவைப்படுகின்றன. இவ்வாறு ஓவியக் கலை வளர வாய்ப்பு ஏற்படுகிறது.

மேலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கோயில் உண்டு. இந்தக் கோயிலின் சுவர்களும், கதவுகளும் சிற்ப ஓவிய வேலைப்பாடுகளுடன் நன்கு அழகு செய்யப் பட்டுள்ளன.

மென்மையான எரிமலைக் கற்களைக்கொண்டு இந்தக் கோயிற் சுவர்கள் முதலியன கட்டப்பட்டிருப்பதால், அந்தக் கற்கள் வெகு விரைவிலேயே இற்றுவிடுகின்றன.

அதோடு காடுகள் வேறு, மனிதன் செய்தவைகளை யாவற்றையும் ஊடுருவிச் செல்கின்றன.

இவைகளால் தொடர்ந்து இவற்றைப் பழுது பார்த்துப் புதுப்பிக்க வேண்டிய இன்றியமையா நிலையும் ஏற்படுகிறது.

மக்கள் தொகை மிகைப்பட்டதால் ஏற்பட்டுள்ள பொருள்நிலை இடர்கூட, பாலி மக்களின் வாழ்வோடு வாழ்வாய் ஒன்றிவிட்ட கலைகளின் உண்மைச் சிறப்பியல்பை அசைக்க முடியவில்லை.

இன்றும் பாலியில் ஓவியர்களின் கலைப்பணிக்கு வாய்ப்பிருக்கிறது.

# 9. ஹாஜி ஜகாரியாவின் பரிசுச் சீட்டுக்கள்

எழுதியவர் :

## மோச்டார்லூபிஸ்

நான் **கெரின்சி**க்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த போதுதான் **ஹாஜி ஜகாரியா**வைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தேன். அவரைப் பதினன்கு ஆண்டுகட்கு மேலாக நான் பார்க்கவே இல்லே. என் தந்தையார் சில நாட்களுக்கு முன்பு சுமத்திராவிலுள்ள எங்கள் கிராமத்தில் இறந்துவிட்டார். ஆகவே என் தாயாருக்கு ஆறுதல் கூறவும், வீட்டு நடவடிக்கைகளேக் கவனிக்கவும் என் சொந்தக் கிராமத்திற்கே திரும்பும்படி நேரிட்டது. கெரின்சியில் என் தந்தைக்கு ஒரு ரப்பர் தோட்டம் உண்டு. இது காரணமாகத்தான் நான் இப்போது

கெரின்சிக்கும் செல்வது. அங்கு நான் ஹாஜி ஜகாரி யாவின் வீட்டில் தங்க எண்ணியிருந்தேன்.

முதலில் பஸ்ஸைத் தவிர வேறு எவரைப்பற்றியும் அல்லது எந்தப் பொருளைப்பற்றியும் சிந்திப்பதற்கு நேரம் இல்லாமலிருந்தது. எனக்கு இந்தப் பயணம் சிறிதும் பிடிக்கவே இல்லை. ஏனென்றால் **படாங்கி**லிருந்து **சுங்காய் பெனு** வழியாக கெரின்சிக்குச் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் மோசமானது என்று எனக்குத் தெரியும். இந்த வழியில் செல்லும்போது, பல பெரிய ஆறுகளைப் படகுகள் மூலம் கடக்கவேண்டியிருக்கும். அதோடு சாலை அடர்ந்த அச்சமான காடுகளுக்கிடையே யும், ஆழமான பள்ளங்களையும் உயர்ந்த மேடுகளையும் கொண்ட மலைகளுக்கிடையேயும் செல்கிறது. என்ற போதிலும் என் தாயின் விருப்பத்தை என்னால் தட்ட முடியவில்லை. ஆகவேதான் விருப்பமில்லா நிலையில்கூட நான் கெரின்சிக்குப் புறப்பட்டேன். தொடக்கம் முதலே என் பயணம் நான் எதிர்பார்த்தபடியேதான் இருந்தது.

வழியில் இருமுறை பஸ்ஸின் அச்சு முறிந்துவிட்டது. நல்ல வேளையாக ஆழமான கணவாய்க்குச் சில அடி தூரத்தில் பஸ் போய் நின்றது. நாங்கள் தப்பித்தோம். இதெல்லாம் மோட்டார் ஓட்டிக்குப் பழக்கமான நிகழ்ச்சிபோல் இருக்கிறது. எனவே அவன் வண்டியில் தயாராகச் சில புதிய அச்சுக்களைக் கொண்டுவந்திருந் தான். எனினும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் எவரையும் சிறிது குழப்பமடைய வைக்கத்தான் செய்தன.

இதைவிட பஸ்ஸில் ஏறக்குறைய ஒரு கொலை விழுந்து விடும்படியான ஒரு நிகழ்ச்சி நடந்தது. இன்

னும் சற்று மிகுதியான திகிலை உண்டாக்கியது. பரிய மானிலுள்ள ஒரு சமயப் பள்ளியில் பயின்று திரும்பிய ஒரு இளைஞன் பஸ்ஸில் வந்துகொண்டிருந்தான். அவன் பஸ் புறப்பட்டது முதலே **குரான்** சொற்றொடர்களை மிகவும் சப்தத்தோடு ஓதியவண்ணமிருந்தான். அவன் அருகிலிருந்தவருக்கு இது சிறிது துன்பமாக இருந்தது. ஏற்கனவே அவர் மிகுந்த வெப்பத்தாலும், மலையின் வளைவு நெளிவுகளில் பஸ் மிகுதியாக ஆடி ஆடிச் சென்றதால் ஏற்பட்ட களைப்பாலும் மிகுந்த துன்பத்திற்குள்ளாகியிருந்தார். அதோடு அவ்விளைஞன் காது செவிடுபட ஓசையிட்டு ஓதியது அவரை மேலும் மிகுந்த துன்பமடையச் செய்தது. ஆகவே ஓதுவதை நிறுத்தும்படி அவ்விளைஞனைக் கேட்டுக்கொண்டார். ஆனால் அவ்விளைஞனோ எதிர்மாறாக முன்னிலும் அதிகமான ஓசையுடன் ஓதத் தொடங்கினான். உடனே அவ்வழிப் போக்கருக்கு மிகுதியான சினம் உண்டாயிற்று. "வாயை மூடப்போகிறாயா? இல்லையா?" என்று சினத்தோடு கூச்சலிட்டார்.

அவ்வளவுதான். அவ்விளம் சமய வெறியன் "அடே! கடவுளுண்மையை மறுப்பவனே நீ நாசமாய்ப் போக!" எனக் கொடுமையாக ஓலமிட்டுத் தனது இடுப்பு வாரில் வைத்திருந்த கத்தியில் கைவைத்துக்கொண்டு "கடவுட்டன்மை நிறைந்த குரானிலிருந்து தூய்மையான சொற்றொடர்களை ஓதக் கூடாது என்று எனக்கு ஆணையிட உனக்கு அவ்வளவு துணிவா?" என்று கூச்சலிட்டான்.

இதன்பின் மடைதிறந்த வெள்ளம்போல் ஏதேதோ அராபிய மொழியில் பேசினான். பிறகு தன் சொந்த மொழியிலேயே வசை பொழியத் துவங்கினான். "நீ

கீழுலகத்திற்குப் போய் துன்பமடைவாய்! ஏழேழு பிறப்பிற்கும் நீ மிகுந்த துன்பத்துடன் சாக!" என்றெல்லாம் தீமொழி புகன்றான். இது முடிந்ததும் பஸ்ஸில் உடனிருந்த எங்கள் ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்தான். எங்களில் எவருமே அவனுடைய வழிக்குப் போக விரும்பவில்லை. ஆகவே அவன் சிறிது அமைதியடைந்து அவ்வழிப்போக்கரைக் கொலை செய்ய இருந்த எண்ணத்தை மறந்து போய், திரும்பவும் முன்பைவிட மிகுந்த ஓசையுடன் ஓதத் தொடங்கினான்.

எங்களுக்கும் இறுதியாக இந்த துன்பம் தரும் ஓசைகள், அச்சுக்கள் முறிதல், அச்சம் தரும் பள்ளங்கள் ஆகியவையெல்லாம் பழகியவையாகப் போய்விட்டன. எனவே எனது சிந்தனை மீண்டும் ஹாஜி ஜகாரியாவை நோக்கித் திரும்பிற்று. வெகு காலத்திற்கு முன்பு என் தந்தை கெரின்சியில் மாவட்ட ஆணையாளராக இருந்தார். அப்போது நான் மிகச் சிறுபையன். என்றாலும் ஹாஜி ஜகாரியாவின் மிகுந்த அன்பைப்பற்றிய நினைவு என்னைவிட்டு நீங்கவில்லை. அவரைப் போன்ற அன்புள்ளம் படைத்த எவரையும் நான் பார்த்ததேயில்லை.

அறுவடைகாலம் வந்து விட்டால், எங்களுக்குச் சுவையான இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பதற்காகப் பசுமை குலுங்கும் நெல் மணிகளை என் தாய்க்கு அனுப்பி வைக்கத் தவறவே மாட்டார். வேட்டைக்குப் போய்த் திரும்பினால் நன்கு பதப்படுத்தப்பட்ட அருமையான மான் கறியை அனுப்பிவைப்பார். **ரம்ஜான்** திருவிழாவின் போதோ அவர் தரும் பரிசுகளுக்களவே இருக்காது. குழந்தைகளாகிய நாங்கள் இன்ப நிறைவு பெற்று விடுவோம். அதிலும் அவர் தரும் பரிசு வகை

களில் வெடி வகைகள் மிகுதியாக இருக்கும். ஒரு சமயம் என் தந்தை ஒரு பெட்டியைத் திறந்து பார்த்த போது '**டைனமைட்**' அளவுக்குப்பெரிய வெடிகள் இருப்பதைக் கண்டு அதிர்ந்து போய் விட்டார். எனவே நாங்கள் அவரை எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வராகவே கருதுகிறோம். அன்பும், நற்பண்பும் கொண்ட அவரைப்போன்ற ஒரு மாமாவை நாங்கள் எங்கும் பார்த்ததில்லை.

அவர் பெரும் பொருள் படைத்தவர். ஏராளமான நெல்வயல்கள் அவருக்கு இருந்தன. காபி விலை மிகு தியாக ஏறிப்போயிருந்த ஆண்டுகளில் அவர் பரப்பு மிகுந்த வயல்களில் காபியை பயிரிட்டிருந்தார். அவை களில் 'ரோபுஸ்டா' 'அராபிகா' முதலிய உயர்வகைக் காபிகளையும் பயிரிட்டார்.

என் தந்தைக்கும் ஒரு காபி வயல் இருந்தது. ஆனால் மிகவும் சிறியது. சந்தையில் ரப்பரின் விலையில் உயர்வு ஏற்பட்டதும், காபிசெடிகளை வெட்டி விட்டு ரப்பர்மரங்களை பயிரிட என் தந்தை முடிவு செய்தார். ஆனால் ஹாஜி ஜகாரியா இதனை எதிர்த்தார். இச் செயல் செய்யாதீர்கள் என அறிவுரை கூறினார். என் தந்தைக்கோ காபி விலை குறைந்து; ரப்பர்தான் அனைத்துமாகிவிடுமோ என்ற அச்சம். இப்படி நினைப் பதே மடமை என்று ஹாஜி ஜகாரியா என் தந்தையைக் கேலி செய்தார். "மக்கள் எப்போதும் காபி அருந்தா மல் இருக்கமாட்டார்கள். ஆனால் ரப்பரை யாராவது சாப்பிடுவார்களா ?" என்றார் ஜகாரியா.

ஒவ்வொரு புது ஆண்டும், அவரும் என் தாய் தந்தையரும் சேர்ந்து **மெக்கா** பயணம் செல்லத் திட்

டம் போடுவார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் ஹாஜி ஜகாரியா மட்டும் தனியாகவே செல்லும்படி நேரிட்டது. என் தாய் தந்தையர் மெக்காவுக்குப் போகவே முடிய வில்லை. அவர்களிடம் பொருளில்லாததே இதற்குக் காரணம் என்பது எனக்குப் பின்னர்தான் தெரிந்தது. ஒவ்வொரு ஆண்டும் என் தாய் தந்தையர் மெக்கா செல்வதற்கான பொருட் செலவையெல்லாம் தான் ஏற்றுக்கொள்வதாக ஹாஜி ஜகாரியா முன்வருவார். அப்போது அவர் சொல்வார் :

"மாவட்ட ஆணையாளராகிய என் நண்பரே! ஏன் என்னிடம் இவ்வளவு கொடுமையாக நடந்துகொள்ளுகிறீர்? எனது பொருள் உங்கள் பொருள் இல்லையா? என் வீடு உங்கள் வீடு இல்லையா? இதை என் அன்பளிப்பாக ஏற்றிட மனமில்லையென்றால், கடனாக ஏற்றுக்கொண்டு, நீங்கள் விரும்பும்போது திரும்பக் கொடுக்கலாமே."

ஆனால் என் தந்தை ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு பொருளை ஏற்கமாட்டார். ஹாஜி ஜகாரியா மிகுந்த சினத்தோடு எங்கள் வீட்டை விட்டு வெளியேறுவார். இறுதியில் மெக்கா பயணத்திற்குப் புறப்படும் நாள் வரும்போது அவர் மட்டுமே தனியாகக் கிளம்புவார். ஆனால் மெக்காவிலிருந்து திரும்பும்போது என் தாய்க்காக செங்கடலின் சிவப்பு பவழக் கற்களையும், பல் துலக்கும் குச்சிகளாக உபயோகிக்கக்கூடிய மெக்காவிலுள்ள சில தூய்மையான மரங்களின் கொப்புகளையும், கடவுட்டன்மை மிக்க நீரூற்றுக்களின் **ஜாம்–ஜாம்** தண்ணீரையும் கொண்டுவர ஒருபோதும் தவறமாட்டார்.

இவை யெல்லாமிருக்க ஹாஜி ஜகாரியாவுக்கு பரிசுச் சீட்டு (Lottery Tickets) என்றால் மிகுந்த விருப்பம். ஒவ்

வொரு திங்களும் பரிசுச் சீட்டுக்கென்று ஏராளமான பொருளைச் செலவழிப்பார். பாடாங்கிலிருந்து நானூறு ஐந்நூறு ரூபாய்க்குப் பரிசுச் சீட்டுக்கள் வாங்குவார். அந்தக்காலத்தில் இது ஏறக்குறைய முந்நூறு டாலருக்குச் சமம். எனக்குத் தெரிந்தவரை அவர் பரிசுச் சீட்டில் வெற்றி பெற்றதே கிடையாது. எனினும் அவர் பழைய சீட்டுக்களை எறிந்துவிடாமல், பாதுகாத்துச் சேர்த்துவைத்திருந்தார். ஒரு **ரம்ஜான்** திருவிழாவின் போது தாய்தந்தையர்களோடு அவர் வீட்டுக்குச் சென்றிருந்தோம். அப்போது அவர் எங்களிடம் பரிசுச் சீட்டுக்களைப்பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்:

"நண்பரே, நான் சென்ற திங்கள் ஏறக்குறைய ஒரு பெரிய பரிசைப் பெற்றுவிட்டேன் என்றுகூடச் சொல்ல வேண்டும். வெற்றியடைந்த பரிசுச் சீட்டின் எண் 567889; என்னுடைய சீட்டுக்களில் ஒன்றின் எண் 567888. ஆகவே நான் இப்போது வெற்றிக்கு அண்மையில் வந்துவிட்டேன். அடுத்த திங்கள் இன்னும் மிகுதியான சீட்டுக்கள் வாங்கப்போகிறேன்."

சூதாட்டம் போலப் பரிசுச் சீட்டையும் ஒரு பெரிய தீமை எனக் கருதுபவர் என் தந்தை. எனவே ஹாஜி ஜகாரியா பரிசுச் சீட்டுக்கு மிகுதியான பொருள் செலவிடுவதை என் தந்தை விரும்பவில்லை. ஆகவே இது பற்றி அவர்கள் அடிக்கடி காரசாரமாகப் பேசிக்கொள்வார்கள். இந்தத்தடவை கண்களில் சிறிது வினயமான நோக்கோடு என் தந்தை கேட்டார்:

"நண்பரே ஹாஜி, ஒரு தம்படிகூடத் திரும்பப் பெறுமல் பரிசுச் சீட்டில் எவ்வளவு பொருளை வீணடித்துவிட்டீர்கள்?"

ஹாஜி ஜகாரியா எதுவும் பேசாது உள்ளே சென்று ஒரு தகரப்பெட்டியோடு திரும்பினர். அதனுள் பரிசுச் சீட்டுக்கள் ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கிவைக்கப் பெற்றிருந்தன.

"இதில் பத்து ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சீட்டுக்கள் இருக்கின்றன.' என்று கூறிவிட்டு பெட்டியை 'படார்' என்று பெரும் ஓசையுடன் மூடிவிட்டார்.

"எல்லாம் நற்பேறு காரணமானது. வெற்றி பெற்ருல் மிகுதியான பொருள் கிடைக்கும். தோல்வி யானல் திங்கள் ஒன்றுக்கு ஐந்நூறு அல்லது எண்ணூறு இழக்கநேரிடும். இதில் என்ன குடி முழுகிவிடும்."

என் தந்தை தலையை அசைத்து விட்டுக் கூறினர் :

"இந்தக் காகிதச் சீட்டுக்களால் உங்களுக்கு என்ன பயன்? அவைகளைப் பேசாமல் தூர எறிந்துவிடுங்கள். பின்னல் இவைகள் உங்கள் உள்ளத்துக்குத் துன்பம் தரத்தான் செய்யும்."

ஹாஜி ஜகாரியா 'கடகட' வென்று சிரித்தார். பிறகு "இல்லே. ஒரு பெரிய பரிசை அடைய நாம் எவ்வளவு பொருளை இழக்கவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதில் தான் பரிசுச் சீட்டின் இன்பமே இருக்கிறது. எல்லாம் ஒன்று அல்லது இரண்டு எண்கள் வேறுபாட்டுக்குள் தான் வெற்றி தோல்வியே இருக்கிறது," என்று அவர் விளக்கினர்.

இந்த இடத்தில்தான் என் சிந்தனை ஓட்டம் தடைப் பட்டது. ஹாஜி ஜகாரியாவின் வீட்டு முன்னே பஸ் வந்து

நின்றது. நான் கீழே குதித்தேன். முன்பே என்னை எதிர் நோக்கி, ஹாஜி ஜகாரியா வீட்டின் முன்னே நின்று கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், இன்னும் சிறு குழந்தைபோல் நினைத்து இறுகக் கட்டியணைத்துக் கொண்டார். உள்ளே சென்றதும் அவரது மனைவி, புதல்வர்கள், புதல்விகள் எல்லோரும் மகிழ்வோடு வர வேற்றார்கள். உணவும் தயாராக இருந்தது. சாப்பாட் டிற்குப் பிறகுதான் அந்த வீடு, மாற்றமடைந்திருப்ப தையும் ஏதோ ஒரு விதத்தில் களையிழந்திருந்ததையும் கவனித்தேன். தரையில் **ஸ்மிர்ணு** கம்பளங்களைக் காண வில்லை. வழக்கமான குழந்தைகளின் கலகலப்புமில்லை.

அவரது குழந்தைகள் எல்லாம் இப்போது என்னைப் போலவே பெரியவர்களாகி விட்டார்கள். அவருக்கு ஆறு குழந்தைகள். இப்போது ஒரே ஒரு பெண், மரியம் மட்டும்தான் இன்னும் திருமணமாகாமல் வீட்டிலிருந் தாள். முன்பெல்லாம் அவள் எங்களோடு ஒரு குழந்தை போல் விளையாடிக் கொண்டிருப்பாள். ஆனால் இப் போதோ அவள் ஒரு அழகிய நங்கை ஆகிவிட்டாள். அவளையே நான் கண் கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தேன்.

ஹாஜி ஜகாரியா நடந்து போனவ்வகளைப் பற்றி விடாமல், ஓயாமல் பேசிக்கொண்டே இருந்தார். என்னைத் திரும்பவும் கண்டது பற்றி மகிழ்ச்சி தெரி வித்துக் கொண்டார். என் தந்தை காலமானது குறித்து மிகவும் துன்பப்பட்டார். நாங்கள் உரையாடிக்கொண் டிருக்கும்போது திருமணமான அவரது புதல்வர்களும் புதல்விகளும் வெளியே போய்விட்டார்கள். மரியமும் அவளது தாயும் அடுப்பங்கரைக்குச் சென்று விட்டனர்.

அப்போது ஜகாரிய எதிர்பாராத விதமாகச் சொன்னார்:

"இப்போது நாங்கள் ஏழைகளாக இருக்கிறோம் மகனே. அநேக ஆண்டுகட்கு முன்பு காபி விலை இறக்கமடைந்ததும் உன் தந்தை வழியைப் பின்பற்றிக் காபி செடிகளை வெட்டி விட்டு, ரப்பர் பயிரிட்டேன். ஆனால் அவைகள் வளர்ந்து மரங்களாக வளர்வதற்குள்ளாக ரப்பர் விலையும் வீழ்ந்தது. பின்னர் அறிவுகெட்டதனமாக ரப்பர் மரங்களை வெட்டிவிட்டு திருப்பவும் காபி பயிரிட்டேன். ஆனால் காபியின் விலை ஒரே நிலையில் நின்று விட்டது. உனது தந்தை அவரது நற்பேறு காரணமாக ரப்பர் விலையில் வீழ்ச்சியேற்பட்டு மட்டமாக இருந்த போதும்கூட அவர் ரப்பரே பயிரிட்டார். இந்நிலையில் **கொரியாப்** போர் மூண்டது. அதனால் ரப்பர் விலை மிகுதியாக ஏற்றமடைந்தது. உன் தந்தைக்கு நல்ல ஊதியம் கிடைத்தது. இதன் பிறகு தனது தோட்டத்தையும் மேற்பார்வை செய்யும்படி என்னிடமே விட்டுவிட்டார் உன் தந்தை. ஆனால் இப்போது திரும்பவும் ரப்பர் விலை இறங்கிவிட்டது. இனி என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது," இவ்வளவும் கூறி முடித்தார்.

இதன் பிறகு நான் வந்த செயலைப்பற்றிக் கூறினேன். எப்போதும் போலத் தோட்டத்தை அவரே மேற்பார்வை செய்துவர வேண்டுமென்று என் தாயார் விரும்புவதையும் சொல்லி, மேலும் என் தந்தை இறந்துவிட்ட நிலையில் அத்தோட்டத்தை அவர் தனது உடமை போல் மேற்பார்வை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

அன்றுமாலை அவர் மசூதிக்குப் போய்விட்டார். மரியம் என்னிடம் வந்து பல செய்திகளைச் சொன்னுள். காபி விலை வீழ்ச்சியடைந்தபோது அதை அவள் தந்தை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. எனவே வழக்கம்போல் ஆண்டுதோறும் மெக்கா செல்வதும் பரிசுச் சீட்டுக்கள் வாங்குவதுமாகவே இருந்தார். பின்னர் மெக்கா பயணம் செல்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் சிறிது நெல் வயல்களை விற்கும்படி நேரிட்டது.

ஆனல் இவற்றிற்கெல்லாம் மேலான துன்பம் ஜப்பானியர்களின் வலுக்கட்டாய ஆட்சி ஏற்பட்டபோதுதான் ஏற்பட்டது. ஹாஜி ஜகாரியா மிகுந்த நாட்டுப்பற்றுடையவர். அவரது புதல்வர்கள் எல்லோரும் புரட்சிப்படையில் இருந்தார்கள். மேலும் குடியாட்சி நாட்டுக் கடன் சீட்டுக்களை வாங்குவதற்காக அவர் தமது, பெரும்பான்மையான நெல் வயல்களையும் விற்றுவிட்டார். இதில் நாட்டுப்பற்று மட்டுமல்லாமல் இக்கடனை வட்டியுடன் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் திரும்பக் கொடுத்துவிடுவதாகவும் குடியரசாட்சி உறுதியுமளித்திருந்தது; ஆனல் இந்தோனேஷ்யா சுயாட்சி பெற்றதும் இக்கடன்களைத் திருப்பிக்கொடுக்க குடியரசாட்சி தவறிவிட்டது. நற்பேறு காரணமாக என் தந்தை தனது தோட்டத்தை மேற்பார்வை செய்துகொள்ளும்படி ஹாஜி ஜகாரியாவைக் கேட்டுக் கொண்டார். கிடைக்கும் வருவாயில் ஹாஜிக்குப் பாதி என்பது ஏற்பாடு.

மரியம் கூறியதிலிருந்து பொதுவான வாழ்க்கையை விட சிறிது மிகுதியான நல்வாழ்க்கையையே இன்னும் ஹாஜி ஜகாரியா நடத்துகிருர் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவரது எல்லாப் புதல்வர்களும் வேலை

யிலிருந்தார்கள். அவருக்கு உதவியாகவுமிருந்தார்கள். இன்னும் சிறிது நெல் வயல்களும் அவருக்கு இருந்தன. இதனால் அவர் வெளியே அரிசி வாங்கவேண்டிய கட்டாயம் இல்லாதிருந்தது.

"ஆனாலும் இப்போது பரிசுச் சீட்டுக்கள் வாங்குவதோ, அல்லது மெக்கா பயணம் செல்வதோ அவருக்கு இயலாதிருக்கிறது. இது அவருக்கு மனத்துன்பத்தை கொடுக்கிறது," என்று தயங்கியவாறே மரியம் கூறினாள்.

ஹாஜி ஜகாரியா மசூதியிலிருந்து திரும்பி வந்தார். பரிசுகள் சீட்டுக்களைப்பற்றிக் கேட்கவேண்டுமென்று ஏதோ ஒரு குறும்புத்தனமான விருப்பம் என்னுள் எழுந்தது. முடிவில் இதைப்பற்றி கேட்டும் விட்டேன். பரிசுச் சீட்டுப்பற்றி பேசத் துவங்கியதும் அவரது முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. தனது படுக்கை அறைக்குட் சென்று ஒரு பெரிய தகரப் பெட்டியை எடுத்துவந்து திறந்தார்.

"மாதம் தவறாமல் நான் பரிசுச் சீட்டுக்கள் வாங்கியதும்" பலமுறை வெற்றிக்கு வெகு அண்மையில் வந்ததெல்லாம் தான் உனக்குத் தெரியுமே. சரி, இதுவரை நான் எவ்வளவு பரிசுச் சீட்டுக்கள் வாங்கியிருப்பேன் என்பதைச் சிறிது கூறு பார்க்கலாம்.

"ஆயிரக் கணக்கான ரூபாய்களுக்கு வாங்கியிருப்பீர்களா?" என்றேன் நான்.

"ஆயிரக்கணக்கில் மட்டுமல்ல, மகனே! நான் வாங்கியுள்ள சீட்டுக்களின் பெறுமதியைச் சரியாகக்

கணக்கிட்டுக் கூறமுடியும். ஐம்பத்தாருயிரம் ரூபாய்கள், சரியாக ஐம்பத்தாருயிரம் ரூபாய்கள். அவைகளும் இன்றைய ரூபாய்கள் போன்றதல்ல. நல்ல மதிப்புள்ள ரூபாய்கள்.''

"ஆனல் இவ்வளவு ரூபாய்க்கு வாங்கியும் நீங்கள் என்ருவது வெற்றிபெற்றிருக்கிறீர்களா?'' என்றேன் வியப்போடு.

"ஒரு வெற்றிகூடக் கிடைக்கவில்லே'' என்று கூறிஞர். பிறகு சிரித்தார். பெட்டியை மூடிவிட்டு படுக்கை அறை நோக்கிப் புறப்பட்டார். "நன்ருய்த் தூங்கு மகனே,'' என்ருர்.

"ஐம்பத்தாருயிரம் ரூபாயா! இன்று அதற்கு பதினைந்து நூருயிரம் ரூபாய் மதிப்பு இருக்குமே? இவ்வளவு பொருளைக்கொண்டு இன்றைய விலேயில்கூட நீங்கள் வாங்க முடியாதது எதுவும் இருக்க முடியாதே? ஏன், இன்று நீங்கள் பெருஞ் செல்வந்தராக ஆகியிருப்பீர்களே!'' என்று நான் வியப்போடு கூறினேன்.

ஹாஜி ஜகாரியா சிறிது நேரம் பேசாதிருந்துவிட்டு சிரித்தார். உடனே சிரிப்பதை நிறுத்திக்கொண்டார். அவரது முகத்தில் துன்ப முகில்கள் நிழலிட்டன. என்னை ஒரு வகையாக உற்றுநோக்கிஞர்.

பின்னர் "நீ என்ன ஏதேதோ பேசுகிருயே. நன்ருய்த் தூங்கு. பயணத்தில் மிகவும் களைப்படைந்திருப்பாய்,'' என்று முணுமுணுத்தார்.

என்னுடைய அறை அந்த முதுமைக் கணவன் மனைவியர் அறைக்கும் மரியத்தினுடைய அறைக்கும் நடுவே

இருந்தது. அவள் தூங்காமல் அமைதியின்றி இருக்கிறாள் என்பதை தெரிந்துகொண்டேன். என்னை எண்ணித்தான் அவள் தூக்கமின்றி துன்பப்படுகிறாள் என்று எண்ணிக்கொண்டேன்.

நான் ஜகர்த்தாவுக்குத் திரும்பிய ஒரு திங்களிற்குப் பிறகு மரியத்திடமிருந்து ஒரு அஞ்சல் கிடைத்தது. அதில், நான் கெரின்சிக்குச் சென்று திரும்பியதிலிருந்து அவள் தனது தந்தையைக் குறித்துத் துன்பமடைவதாகக் குறிப்பிட்டிருந்தாள். மேலும் அவள் தந்தை எப்போதும் வெளியே வராமல் அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பதாகவும், அடிக்கடி பழைய பரிசுச் சீட்டுக்களை எண்ணிக்கொண்டிருப்பதாகவும், மணிக்கணக்காகவும், சில வேளைகளில் நாட் கணக்காகவும் கூட எவரிடமும் பேசுவதில்லையென்றும், ஒரு சமயம் வேட்டைக்குச் சென்று வெறுங்கையோடு திரும்பிவந்து எங்கே சென்றார் என்ன நடந்தது வன்பதைப் பற்றி ஏதும் கூற மறுத்துவிட்டார் என்றும், அப்போது ஏரிகள் முழுதும் நாட்டு வாத்துக்கள் மிகுதியாயிருந்த காலமாதலால் உண்மையில் அவர் வேட்டைக்குச் சென்றிருந்தால் வாத்துக்கள் எதுவும் கிடைக்காமல் இருந்திருக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தாள்.

நான் மரியத்துக்கு பதிலஞ்சல் எழுதினேன். அதில் முதியவர்களுக்கு எத்துணை மனத்துன்பங்கள் இருக்கும் என்றும் அதை அவர்கள் எப்படியோ சரிசெய்து கொண்டவர்களென்றும் குறிப்பிட்டுவிட்டு, அவள் இவைகளை எண்ணிக் கவலை கொள்ளக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஒரு கிழமைக்குப் பிறகு மரியத்திடமிருந்து அவளது தந்தை இறந்துவிட்டதாக ஒரு மின்செய்தி கிடைத்தது. அதைத் தொடர்ந்து ஒரு விளக்கமான அஞ்சலும் கிடைத்தது. அதில் ஹாஜி ஜகாரியா தனது அறையில் தாழிட்டுக்கொண்டு தன் மூளைக்கு குறிவைத்து சுட்டுத் தற் கொலைசெய்துகொண்டதாகவும், பிறகு வீட்டிலிருந்தவர்கள் வலுக்கட்டாயமாகக் கதவை உடைத்து உட்சென்று பார்த்தபோது, அவர் உயிரிழந்து கிடந்தார் எனவும், பரிசுச் சீட்டுக்கள் அனைத்திலும் குருதி சிந்திக் கிடந்ததாகவும், குடியரசாட்சியின் கடன் சீட்டுக்களெல்லாம் அவரைச் சுற்றிலும் தரையில் கிடந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் "என்னுடைய தாயாரும் நோயுற்று விட்டாள். இந்நிலையில் என்ன செய்வதென்றறியாது வருந்திக் கொண்டிருக்கிறேன்," என்று மரியம் அஞ்சலை முடித்திருந்தாள்.

இது இப்போது எனக்குத் துன்பம் தருவதாயிற்று. நான் என்ன செய்வது? இரவில் தூக்கம் வருவதில்லை. ஏதோ தவறு செய்துவிட்டோம் என்ற எண்ணம் வருகிறது. பரிசுச் சீட்டுக்களைப் பற்றித் திரும்பவும் எண்ணம் கொள்ளச் செய்ததால்தான் மறுமுறையும் தன் தவறு நினைவுக்கு கொண்டு வரப்பட்டு துன்பம் மடைந்து, தற் கொலை செய்து கொண்டுவிட்டார் என்ற எண்ணம் உண்டாகிறது.

நான் மரியத்தை விரும்புகிறேன். ஹாஜி ஜகாரியா தற்கொலை செய்துகொண்டது பரிசுச் சீட்டுக்களில் நினைவால் அல்ல என்று மாருத உறுதி மட்டும் எனக்கு

ஏற்படுமானல் மரியத்தை மனைவியாக்கிக் கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்வைத்தரும். குடியாட்சிக் கடன் சீட்டுக்கள் செல்லாத காரணத்தால்தான் அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று எனக்கு உறுதி ஏற்படக் கூடாதா !

10. 
# இந்தோனேஷ்யாவின் ஆடல் கலைகள்

எழுதியவர் :

## காவ் ஹர்ட்ஜாசுமண்ட்ரி

பாலி ஆடல்கலைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா ? இது இந்தோனேஷ்யாவின் இசை, ஆடல் கலைச் செல்வங்களில் ஒரு பகுதி மட்டும்தான்.

இந்தத் தீவுக்கூட்டத்தின் ஆடல் திறம் முழுமையையும் காணவேண்டுமென்றால், ஒவ்வொரு ஆண்டும் இந்தோனேஷ்யா விடுதலை நாளான ஆகஸ்ட் 17-ம் நாளைவிட வேறு நல்லதொரு வாய்ப்புக்கிடைக்காது.

அன்று, வடகோடி சுமத்ரா முதல் கீழ்க்கோடி ஸ்பைஸ் தீவுகள் வரையுள்ள விதவிதமான ஆடல்கள்

ஜகர்தாவில் குடியரசுத் தலைவர் மாளிகையிலுள்ள புல் மைதானத்தில் நடைபெறும்.

இதுபோன்ற நேரங்களில் பல்வேறு மரபைச் சார்ந்த ஆடல்கள், பலவகையான இசைகள், கண்கவரும் பலநிற உடைகள் முதலியன வெல்லாம் சேர்ந்து இந்தோனேஷ்யாவின் பண்பாட்டுச் செல்வத்தைப் பேரழகுடன் எடுத்துக்காட்டும்.

உலக நடுக்கோட்டின் குறுக்கே பச்சை நிறக்கற்கள் பதித்த ஒட்டியாணம்போல ஆயிரக்கணக்கான தீவுகளை உள்ளடக்கி இருப்பதுதான் இந்தோனேஷ்யக் குடியரசு.

பண்டைக் காலம் முதலே இந்தோனேஷ்யப் பண்பாட்டின் உயிர்நிலையாக ஆடல் கலை இருந்து வந்திருக்கிறது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதும், ஹிந்து சமயப் பழங்கதையும், ஜாவாவின் பழைமைமிக்க நாடகமுமான **அர்ச்சுனவிவாகா** அல்லது அர்ச்சுனனது திருமணம் எனப்படும் கதை வருமாறு :

மதிப்பு மிகுந்த கற்களிலிருந்து ஏழு அணங்குகளைக் கடவுளர்கள் தோற்றுவித்ததாகவும், இவ்வாறு பேராற்றலுடன் தோன்றிய மங்கையர், தமது முதல் ஆடலின் மூலம் தம்மைப் படைத்த இறையவர்க்குத் தமது நன்றியறிதலையும், வணக்கத்தையும் செலுத்தியதாகவும் கூறிச் செல்வதுடன், முடிவில் கடவுளர்கள் தாம் படைத்த பேரழகிகளின் பால் காதலில் சிக்கியதாகவும் கூறுகிறது.

எது எவ்வாருயினும் தம்மால் படைக்கப்பட்டுத் தம்மைச் சுற்றி ஆடிக் கொண்டிருக்கும் பேரழகிகளைத் தம்மையொத்த இறைத்தன்மை படைத்தவர்கள் பிறர் அறியும் வண்ணம் பார்ப்பது தவறு என்றும், இவ்வாறு தவறு செய்ததாலேயே பிரம்மா நான்கு தலைகளையும், இந்திரன் எண்ணிலடங்காக் கண்களையும் பெற்றுத் துன்பமடைய நேர்ந்தது என்னும் முடிவுக்கும் வந்தார் களாம்.

மற்றுமொரு புகழ்பெற்ற ஜாவா நாடகம் அல்லது **லாகோன்**னில், ஆடலின் உயிர் நிலைப் பொருளாகிய ஒரு பாட்டின் சில அடிகள் நமக்கு ஒரு உண்மையை அறி விக்கிறது.

கடவுள்களுக்கெல்லாம் கடவுளான மகாதேவா பட்டாரா குரு, முதலாவது கேம்லான் இசைக் குழுவைத் தோற்றுவித்தார்.

பிறகு அவர் ஒரு கோயிலைக் கட்டினர். இந்தக் கோயில் கட்டி முடிந்ததும், அதன் விழாவைத் தேவர் களும் தேவதைகளும் ஆடல் செய்து கொண்டாடி னர்கள். இவ்வாறு இக்கதை செல்கிறது.

இது எவ்வாறிருந்தபோதிலும் தொடக்கத்தில் ஆட லுக்கும், சமயச் சடங்குகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதை இந்தக் கதையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இந்தோனேஷ்யாவில் மட்டுமன்றி உலகம் முழுமை யிலும்கூடச் சமயக் கருத்துக்களை வெளியிடும் இன்றி யமையாமையிலிருந்து தான் ஆடல்கலை தோன்றி வளர்ந்தது.

வெகு காலத்திற்குப் பின்னரேதான் சமயச் சார் பற்று, சமுதாயத்தின் வாழ்க்கை நிலைகளைக் காட்டவல்ல கருவியாக ஆடல்கலை படிப்படியாக மாறிற்று. (இந்த மாற்றம் இந்தோனேஷ்யாவின் பலதீவுகளில் இன்னும் நிறைவு பெறவில்லை.)

இன்று இந்தோனேஷ்ய ஆடல்கலைகளில் ஓரளவு பொழுதுபோக்கு வகைகள் காணப்படுகின்றன.

ஆயினும் சமயச் சார்பற்ற அல்லது சார்பான ஆடல்கள் எதுவானாலும் அது உள்ளடக்கத்தில் ஒரு முழுச் சமுதாயம் அல்லது அதன் ஒரு பகுதியின் வாழ்க்கையையும் அதன் நலன்களையும் எடுத்துக் காட்டுவதாகவே இருந்து வந்திருக்கிறது.

இந்தோனேஷ்ய ஆடல்கலைக்கும் அதன் வரலாற்றடிப்படையின் மூதாதையான இந்திய நடனப்பாரம்பர்யத்திற்குமிடையே உள்ள உறவு நீண்ட காலமாகவே ஆராய்ச்சியாளர்கள் விருப்பமுடன் உரையாடல் செய்யும் ஒரு பொருளாகவே இருந்து வருகிறது.

இந்தோனேஷ்ய ஆடல்கலையின் தொடக்கம் அதாவது மூலம் எது என்பதை ஆராயும் செயலைப் பொறுத்தவரையில் இது முதன்மையானதுதான்——சிறப்பானதும் கூட.

ஆனாலும் இங்குக் கவனிக்கப்படவேண்டிய சிக்கலான நிலை என்னவென்றால், இந்தோனேஷ்ய ஆடல் கலையில் இந்தியாவின் செல்வாக்குமட்டுமன்றி, சீன, பாரசீக அராபிய, போர்ச்சுகீசிய, டச்சு வகைகளையும் அதில் சில நேரங்களில் நாம் காண்கிறோம் என்பது தான்.

இதேபோல நீண்ட கால ஆசிய வணிகப்போக்கு வரத்துகள் மூலமாகப் பண்பாடுகள் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக்கொள்ளப்பட்டதில் இந்தோனேஷ்ய ஆடல்கலை உருவங்கள் பிறநாடுகளுக்குப் பரவி, அங்கே நல்ல செல்வாக்கையும் பெற்றுள்ளன.

இதைவிட ஒரு சிறப்புமிக்க நிகழ்ச்சி இருக்கிறது. அதாவது இந்தப் பல்வேறு செல்வாக்குகளும் நன்முறை யில் உட்கொள்ளப்பட்டு, முழுக்க முழுக்க வகை வகை யான இந்தோனேஷ்ய மரபுகளாக மாற்றம்பெற்று, இன்று அளவிலும், தகுதியிலும் உலகில் தன்னிகரற்று விளங்குகின்றன.

இந்த மரபுகளிலுள்ள இந்தோனேஷ்யத் தன் மையை வரையறுத்துக்கூறுவது எளிதான செயலன்று. ஏனென்றால் அதனுடைய செல்வாக்கெல்லாம் அவ்வளவு பெரியதாயிருக்கிறது.

மொலுகசில் (இதனைச் சேர்ந்த ஸ்பைஸ் தீவுகள் இடைக்காலத்திலேயே மேலை நாடுகளில் புகழ்பெற்றி ருந்தன) பிற தீவுகளைவிடப் பல்வேறு அயல் பண்பாடு களின் செல்வாக்குகளைத் தன்வழிப்படுத்திச் சொந்த மாக்கிக் கொள்வது மேலோங்கி நிற்கிறது.

எடுத்துக்காட்டாக வடமொலுகசில் புகழ்பெற் றுள்ள லென்சா என்னும் ஆடலில், மேற்கத்திய வயலின் இஸ்லாமிய அண்மைக்கிழக்கைச் சார்ந்த கஞ்சிரா, டிபா எனப்படும் ஒரு சிறிய மத்தளம் முதலியனவெல்லாம் பயன்படுத்தப்படுகின்றன.

செலிபஸில் பண்பாட்டு மோதல்கள் வேறு வகை யான விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன. எடுத்துக்

காட்டாக மினஹாஸாவில், முன்பெல்லாம் பிறப்பு, திருமணம், அறுவடை புதுமனை புகுதல் போன்ற விழாக்களின் போது வட்ட ஆடல்கள், வரி ஆடல்கள் முதலிய பழங்கால ஆடல்களைத்தான் ஆடுவது வழக்கம். இப்போதோ இவற்றிற்குப்பதிலாக மேற்கத்திய முறை ஆடல்கள் மிகைப்பட்டு வருகின்றன.

எனினும் அண்மைக் காலத்தில், வட்டார ஆடல் போட்டிகள் பல வைத்ததன் காரணமாக, மினஹாஸாவின் சொந்த ஆடல்களில் புதிய ஊக்கமும் எழுச்சியும் பிறந்திருக்கிறது.

இதே நேரத்தில் இந்தத் தீவின் மற்றொரு பகுதியில் அதாவது தெற்கே வேறு வகையான ஆடல்கள் நடக்கின்றன.

இங்கே ஒரு காலத்தில் பெரிய அரச அவைகள் இருந்ததால், இந்த வட்டாரத்தின் சிறப்புமிகு ஆடல்கள் அரசவைப் பின்னணியோடு விளங்குகின்றன.

இத்தகைய ஆடல்களிலே உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்கள்தான் கலந்து கொள்ளமுடியும்.

அத்துடன் பழைய அரசவைகளின் சூழ்நிலைகளையொட்டி இவைகள் வீண்பெருமையையும் செருக்கையும் எதிரொலிக்கின்றன.

கலிமண்டான் என்று இப்போது அழைக்கப்பெறும் போர்னியோவின் கடற்கரைப் பகுதிகளில் வெகுகாலமாகவே அயல் பண்பாட்டுப் பிடிப்பு இருந்து வருகிறது. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆடல்களிலும் இதனைக் காணலாம்.

எடுத்துக் காட்டாக ராமர் மனைவி சீதையைப் பத்துத்தலை ராவணன், இலங்கைக்குத் தூக்கிச்சென்ற பழைய இந்திய சமயக் கதையான ராமாயணம் அங்கு இன்னும் ஆடலாக நடத்தப்படுகிறது.

இதே போன்ற ஆடல் ஜாவாவிலும் நடத்தப்படு கிறது.

கதை அமைப்பில் இந்த இரண்டு ஆடல்களும் ஒரே விதமானவைதான்.

ஆனால் போர்னியோவில் ராவணனாக வருபவன் பரம்பரையான பண்டைக்கால உடைகளை அணிவ தில்லை. அதற்குப் பதிலாக குடியேற்ற ஆட்சிக் காலத் தில் டச்சுமா முதல்வர் போன்ற உயர்நிலை ஆளுநர்கள் அணிவதுபோன்ற உடைகளைத்தான் அணிவான். இவை ஜரிகைத் தோள்பட்டைகளாலும், விருதுகளாலும் அழகு செய்யப்பட்டிருக்கும். தொப்பியில் இறகுகள் சொருகப் பட்டிருக்கும்.

இது இவ்வாறென்றால், போர்னியோவின் உட்பகுதி அதாவது டயாக்பகுதி வெகு காலமாகவே வெளி உல கோடு தொடர்பில்லாதிருந்ததொரு வட்டாரமாகும்.

ஆகவே இங்கு நாம் பழமையான ஆடல்களைத்தான் காணமுடியும்.

இத்தகைய ஆடல்களில் ஒன்று கென்யா எனப்படும் போர் ஆடல்.

இதிலே ஒருவன் கச்சம் கட்டி கைகளையும் கால் களையும் அழகு செய்து கொண்டு, கையில் ஒரு வாளேந்தி ஆடுவான்.

அவனது விறுவிறுப்பான ஆடல் அடிகளும், வாளைத் திறமையுடன் சுழற்றுவதும், போர் வெறியும் முரட்டுக் குணமும் கொண்ட பழைய போர்னியோ காட்டு மனிதர்களை நினைவூட்டும்.

இனி அடுத்தபடியாக சுமத்ராவுக்கு வருவோம்.

இதன் பல பகுதிகள் வெகு காலமாகவே உலக நாடுகளின் வாணிபத்திற்கு ஆசியாவில் நடுவிடமாக இருந்து வந்திருக்கின்றன.

இங்கே பல வகையான பண்பாட்டு முறைகளையும் ஆடல் பாரம்பர்யங்களையும் காண்கிறோம்.

இந்தத் தீவின் வட கோடியிலுள்ள 'அங்கே'யின் மிகவும் புகழ் வாய்ந்த ஆடல் சியூடாட்டி என்பதாகும். இது பொதுவாக ஒன்பது இளைஞர்களால் ஆடப்படுகிறது.

கிழக்குச் சுமத்ராவின் புகழ் வாய்ந்த ஆடல், செரம்பாங்--டுவாபெலாஸ் அல்லது ரோங்கெங் என்று அழைக்கப்படுகிறது.

இது ஆண்களும் பெண்களும் ஒன்றுபட்ட குழுக்களாகச் சேர்ந்து ஆடும் களி ஆடலாகும்.

இதில் ஆடல் நடக்க நடக்கப் படிப்படியாக இசை ஒலி மிகைப்பட்டுக்கொண்டே போகும்.

இறுதியில் ஒலியும் அசைவுகளும் அச்சம் தரும் முறையில் உணர்ச்சிநிலை அடைகின்றன.

மையச் சுமத்திரா பகுதியான மினங்காபாவ் முதலிய இடங்களில் பல ஆடல்களில், ஆடுபவர்களின் நடிப்புகளின் உட்பொருள் நன்கு விளங்குவதற்காக அரைகுறையான அடையாளப் பொருள்களைப் பயன் படுத்துகிறார்கள்.

இந்தப் பகுதிகளில் குடை ஆடல், கைக்குட்டை ஆடல் முதலியனவும் இருக்கின்றன.

இவையாவற்றையும் விடப் பெயர் பெற்றது மெழுகு வர்த்தி ஆடலாகும்.

இதில் ஆடுபவர் ஒரு தட்டில் மெழுகுவர்த்தியை எரியுமாறு செய்து கையில் வைத்துக்கொண்டு மென் மையான, சிக்கலான காலடிகளையும் கை, தோள் அசைவுகளையும் செய்கிறார்.

இதுபோக இன்னும் தெற்கே பெலம்பாங்குக்குச் செல்வோம். இது இந்தோனேஷ்யாவின் மிகப் பழை மையான பேரூரில் ஒன்றாகும்.

ஐரோப்பாவில் சார்லெமேன் தன் வல்லமையை நிலை நாட்டிக்கொண்டிருக்கையில் பேரரசன் ஸ்ரீ விஜயாவின் மாபெரும் அரசின் தலைநகரமாக பெலம்பாங் இருந்தது.

இந்தச் சிறப்புமிகு அரசு அந்தக் காலத்தில் தென் கிழக்கு ஆசியக் கடல்கள் முழுவதையுமே ஆட்சி செலுத் திக்கொண்டிருந்தது.

இத்தகைய ஒரு சிறப்புமிகு அரசு என்றோ மறைந்து போய் விட்டாலும்கூட, ஸ்ரீ விஜயா ஆடல் என்பதில் இன்றும் அதன்பெயர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆடலைச் செல்வர்கள் வழி முறையைச் சேர்ந்த பெண்கள் தான் ஆடுவார்கள்.

இவர்கள் விலை மதிப்பற்ற ஆடை அணிகளை அணிந்து, தலைமுறை உரிமையால் பெற்ற அழகுமிக்க நகைகளால் ஒப்பனை செய்துகொண்டு, வெற்றிலைப் பெட்டிகள் போன்ற வீட்டின் மங்கலப் பொருள்களைக் கையில் ஏந்தி ஆடுவார்கள். அவர்களது விரல்களில் நீண்ட தங்க நகங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

பெலம்பாங் புகழோடு விளங்கிய காலத்தில் அது சீனுவோடு கொண்டிருந்த தொடர்புக்கு இது ஒரு அறிகுறிபோலும்.

இது நிற்க, எங்கள் தீவுக் கூட்டத்திலேயே மிகவும் மக்கள் நெருக்கமுடைய ஜாவாவுக்கு இனி வருவோம்.

இங்குப் புகழ் வாய்ந்துள்ள ஆடலானது, டோபெங் என்னும் முகமூடி ஆடலாகும்.

இந்த ஆடல்பற்றிப் பதினான்காவது நூற்றாண்டின் இலக்கிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னும் நெடுந்தொலைவு பின்னோக்கிச் சென்று பார்த்தால், இது ஒரு மாயாவித்தைக்கான ஆடலாகவும் தொடக்க காலத்திலிருந்திருக்கிறது.

எது எவ்வாறிருப்பினும் ஜாவாவிலேயே இதுதான் இன்று மிகவும் புகழ்பெற்ற ஆடலாகும்.

மேற்கு ஜாவா டோபெங் ஆடல்களை ஆறு துணைப் பிரிவுகள் கொண்டவைகளாகப் பிரிக்கலாம்.

இவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான நிறமுடைய முகமூடி, வெவ்வேறான இசை, தனித்தன்மை முதலியன உண்டு.

அமைதியாகவும், அரச மிடுக்குடனும் ஆடும் வெள்ளை முகமூடி ஆடல்கள்; மூர்க்கத் தன்மையும் போர் விருப்பமும் தோன்ற ஆடும் சிவப்பு முகமூடி ஆடல்கள்; வயிறு குலுங்க நகைக்கவைக்கும் தன்மையுடன், மற்றெல்லா ஆடல்வகையையும் விடச் சிறந்த கலை நுணுக்கமும் திறமையும் வேண்டப்படும் கோமாளி ஆடல்கள்; இவையெல்லாம் டோபெங் ஆடல் வகைகளைச் சேர்ந்தவைகளே.

மைய ஜாவாவில் சுரகர்த்தாவிலுள்ள சுசுஹுனன் அரண்மனையும், மங்குனெகாரா அரண்மனையும், யோக்ஜகர்தாவிலுள்ள சுல்தான் அரண்மனையும் நீண்ட காலமாகவே பெயர்பெற்ற ஆடல் கலைக்கூடங்களாக விளங்கி வந்திருக்கின்றன.

அரண்மனை, ஆடலாசிரியர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் மாளிகைகளில் ஒரு முதன்மையான உறுப்பேற்றிருந்தார்கள்.

அதே நேரத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், செல்வர்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்களும் இந்தக் கலையில் மிகையான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாடும் இருந்தது.

அணிமைக் காலமாக அரண்மனைக்கு வெளியேயுள்ள வட்டாரங்களில்கூட ஜாவா ஆடல் கலையைப் பற்றிய தொரு புதிய ஊக்கம் பிறந்திருக்கிறது.

ஜோக்ஜகர்தாவில் சுல்தானின் அரண்மனையில் ஒரு பகுதியில் அமைந்துள்ள, இந்தோனேஷ்யாவின் சிறந்த கல்வி நிலையங்களில் ஒன்றான காஜாமாடா பல் கலைக் கழகத்தில் இன்று பல மாணவர் குழுக்கள் திறமை மிக்க ஆடற் குழுக்களாக உருவாகி வருகின்றன.

இஃதன்றி மையஜ்ஜாவாவில் இன்னொரு சிறப்பு மிக்க ஆடல் பாரம்பர்யமும் இருக்கிறது.

இது வேயாங் ஓராங் என அழைக்கப்படுகிறது.

வேயாங் ஓராங் என்றால் மனிதர்கள் பொம்மைகளின் பாகத்தில் நடிக்கும் பொம்மை நாடகம் எனப் பொருள் படும்.

இந்த ஆடல் நாடகம் பழங்காலத்து ஹிந்து-ஜாவா கதைகளை எடுத்துக் காட்டுகிறது.

இப்போது வரவரக் குடியேற்ற ஆட்சிக் கால நிகழ்ச்சிகளையும், விடுதலைப் போராட்டக்கால நிகழ்ச்சி களையும் விளக்கும் கதைகள்கூட நடத்தப்படுகின்றன.

இந்த ஆடல் நாடக வகையைச் சேர்ந்த வேயாங் குலிட் எனப்படும் நிழல் நாடகமும் மிகவும் புகழ் பெற்றது.

திருவிழாக் காலங்களில் இந்தோனேஷ்யா முழு மையும் கிராமம் கிராமமாக இதுபோன்ற நிழல் நாடகங் கள் நடைபெறுவதைக் காணலாம். தற்காலிகமான ஒரு

மேடை: அதில் ஒரு வெள்ளைத் திரை தொங்கவிடப் பட்டிருக்கும். பின்னால் ஒரு விளக்கு பொருத்திவைக்கப் பட்டு திரை ஒளிமயமாக இருக்கும்.

பொம்மலாட்டக்காரர்கள் தோலாலான பொம்மைகளின் கால், கைகளைக் குச்சிகளில் கட்டிக்கொண்டு, மேடையில் இரு மருங்கிலும் நின்று, திரைக்குப் பின்னால் அவற்றை இயக்குவார்கள்.

அப்போது இந்தப் பொம்மைகளின் நிழல் ஒளி மிக்க திரையில் விழுந்து தொன்மை வாய்ந்த புராணக் கதைகளை வியத்தகு முறையில் நடித்துக்காட்டும்.

இந்த நடிப்புக்கேற்றவாறு மேடைக்குப் பின்னாலிருந்து இருவர் உரையாடல் நடத்துவார்கள்.

ஒரு வேயாங் உருவம் இந்தத் தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ள படங்களில் விளக்கப்பட்டுள்ளது.

ஆக, சுருங்கச் சொன்னால், ஜாவா ஆடல்கலை அரசர் தலைமுறை வழியைச் சார்ந்தது.

ஆனால் பாலி ஆடல் கலை அவ்வாறானதல்ல. அது பாலி மக்களோடு ஒன்றிப் போய்விட்ட ஆடல்; உயர்ந்தவர் முதல் தாழ்ந்தவர் வரை ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையோடும் பிரிக்க முடியாதவாறு இணைந்து பிணைந்துவிட்ட ஆடல், எந்த வகையான விழாவும், விடுமுறையும் ஆடலின்றிக் கழிவதில்லை.

சிறு பருவம் முதலே குழந்தைக்குப் பாலோடு ஆடலும் ஊட்டி வளர்க்கப்படுகிறது.

இந்தோனேஷ்ய ஆடல்கலைகள் எல்லாவற்றையும் விட வெளி உலகிற்கு நன்கு தெரிந்த ஆடல் நெறி பாலி ஒன்று தான்.

அதிலும் இந்தப் பாலி ஆடல்களிலும் மிகவும் சிறப்புடையது லெகாங் ஆடலாகும்.

இதில் இரண்டு சிறு பெண்கள் தான் முக்கிய பங்கு வகிப்பார்கள்.

முன் காலத்தில் லெகாங் ஆடுவதென்றால் கிட்டத் தட்ட இரண்டு மணி நேரம் உடல் வாட்டி வதைக்கப் பட்டுவிடும்.

ஆனால் இப்போதோ பிற இந்தோனேஷ்ய ஆடல் களைப் போலவே, புதுமைக்காலச் சுவைக்கேற்பச் சுருக் கிக் குறைக்கப்பட்டுவிட்டது.

இதற்கு அடுத்தபடியாகப் பெயர்பெற்ற ஆடல் கெபுவார் என்பதாகும்.

இது ஒரு பரந்த வெளியில் முக்கோணத்திற்குள், மூன்று புறங்களிலும் காம்லான் இசைக்குழு முழங்க, ஒரே ஒரு ஆள் ஆடுவது.

இந்த இசைக்கருவிகளை வாசிப்பவர்கள் தரையில் உட்கார்ந்திருப்பார்கள்.

லெகாங், கெபுவார் ஆடல்கலைகள், விரல்கள், கைகள், கண்கள், தலை, கழுத்து, தோள்கள் முதலிய வற்றின் நுட்பமான திறமையான அசைவுகளைக் கொண்டது.

இவற்றிற்கு முற்றிலும் மாறுனது கெச்சா அல்லது குரங்கு ஆடலாகும்.

ராமாயணத்தில் ராமர் ஒரு பெரிய குரங்குப் படையைக் கொண்டு ராவணனது பேரரசைத் தாக்குவதை விளக்கிக்காட்டும் குழு ஆடலாகும் இக்கெச்சா அல்லது குரங்கு ஆடல்.

பாலி மக்களைப் பொறுத்தவரையில் ஆடல்கலை சமயத்திலிருந்து பிரிக்க முடியாதது, சமயமோ அவர்களது வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாது.

ஆக இன்று இந்தோனேஷ்யாவில் எங்கு நோக்கினுலும் ஆடல்கலையைக் காண்கிறேம்.

இந்த ஆடல்கலைகள் ஒவ்வொன்றும் அழகோடு திகழ்கிறது. மக்கள் வாழ்க்கையின் ஒரு தேவையை நிறைவு செய்கிறது. இந்தோனேஷ்யாவின் கலையுள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

எங்கள் ஆடல்கலைகள் கண்களுக்கும் செவிகளுக்கும் மட்டும் விருந்தல்ல. அவற்றை நோக்குபவர்களின் உயிர்நிலைக்கும்கூட விருந்தாகிறது.

இந்த ஆடல்களைப் பார்ப்பவர்கள் இந்த எளிமை மிக்க உலகிலிருந்து ஒரு பரந்த—விரிந்த—உன்னதமான—அழிவில்லாத ஒரு உலகிற்குச் சென்றுவிட்டதாகவே உணர்வார்கள்.

# 11. இந்தோனேஷ்யாவின் சமயநெறிகள்

எழுதியவர் :

**ஆர். முகமது கப்ராவி**

இந்தோனேஷ்யாவின் வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் சமயம் வகிக்கும் இடம் பற்றி மேலைநாட்டினருக்கு விளக்கிக் கூறுவது என்பது சற்றுக் கடினமான செயலாகும்.

என்றபோதிலும் ஒருவகையில் எங்கள் நாட்டு வாழ்க்கையின் உட்பொருள் முழுவதையும் சமயம் உள்ளடக்கி நிற்கிறது என்று கூறலாம்.

இதைப் புரிந்துகொள்ளாதவரை வெளிநாட்டினர் எங்கள் அரசியல் சமுதாய அமைப்புக்களின் தன்மையைப் பொருள் செய்துகொள்ள முடியாது.

இந்தோனேஷ்யாவைப் பற்றிய சில செய்திகள் மேலை நாட்டினர்களுக்குச் சிறிது குழப்பமளிப்பதாக இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, இந்தோனேஷ்ய அரசு ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தெய்வ அரசாட்சியாக விளங்குகிறது.

பஞ்சசீலா எனப்படும் ஐந்து கொள்கைகள் என்னும் செம்பொருட்டுணிவின் அடிப்படையில் இந்த அரசுஅமைக்கப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் மேலான ஆண்டவன் ஒருவர் இருக்கிறார் அவரிடமிருந்து தான் எல்லா உரிமைகளும் கிட்டுகின்றன என்பதை இந்த ஐந்து கொள்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

அடுத்தப்படியாக, எல்லா மக்களின் உயிர்ப் பொருள் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே வரையறுக்கப்பட்டு, இதற்கென்றே ஒரு தனி அமைச்சர் ஆளுகையும் அமைக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் சமயத்தையும் ஆட்சியையும் தனியாகப் பிரித்து, ஒவ்வொருவரும் எந்தச் சமயத்தையும் பின்பற்றும் உரிமையையும் வழங்கியுள்ளோம்.

மக்களைப் பொறுத்தவரையில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காட்டிற்கு மேலானோர் முஸ்லிம்களாக இருக்கிறார்கள்.

இந்தப் புதுமை உலகில் இஸ்லாமைப் பின் பற்றும் ஒரு முக்கிய இடமாக இந்தோனேஷ்யா இன்று விளங்கு கிறது.

ஆனல் அதே நேரம் ஏனைய முஸ்லிம் நாடுகளுக்கு முற்றிலும் மாருன முறையில் எங்கள் சொந்தப் பழக்க வழக்கங்கள், பண்பாடுகளையே பின்பற்றுகிறேம்.

எடுத்துக்காட்டாக எங்கள் பெண்கள் கோஷா முறையைக் கைக்கொள்வதில்லை,

அவர்கள் தம் விருப்பம்போல எங்கு வேண்டு மாலுைம், போகலாம், வரலாம்.

மேலும் ஏற்கனவே பல பெண்கள் இந்தோ னேஷ்யக் குடியரசில் அரசியல் மன்ற உறுப்பினர்களாக வும், அமைச்சர்களாவும் இருக்கிருர்கள்.

முஸ்லிம்களைத் தவிரப் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நாற்பது லக்ஷம் கிறித்தவர்கள் இருக்கிருர்கள்.

இதோடு இருபது லக்ஷம் ஹிந்துக்களும் உள்ளார் கள். இவர்கள் பெரும்பாலும் பாலித்தீவில் வாழ்கிருர்கள்.

பௌத்த சமயத்தைப் பின்பற்றும் பதினைந்து லக்ஷம் மக்களும் இருக்கிருர்கள். இவர்களில் பெரும் பாலோர் சீனப் பரம்பரையினர்.

இவர்களெல்லாம் போக இயற்கையை வழிபடும் எங்கள் முன்னேரின் தொன்மையான சமயத்தைச்

சேர்ந்த சுமார் பத்து லக்ஷம் பேர்கள் எங்கள் நாட்டின் கிழக்குக் கோடியில் இருக்கிறார்கள்.

இந்தச் சமயங்களிலே கடைசியில் கூறப்பட்டதைத் தவிர மற்றவை யெல்லாம் ஆசியாவின் சிறப்பு மிகு நிலப்பகுதியிலிருந்து வந்த பண்பாட்டுப் படை எடுப்புக்களின் போது எங்கள் நாட்டில் உட்புகுந்தவைகளாகும்.

இவை ஒவ்வொன்றும் எங்கள சொந்தப்பண்புகளோடு கலந்துபோய், இன்று பல வகை நிறங்களோடு நெருக்கமாக நெய்யப்பட்ட ஒரு ரத்தினக் கம்பளம் போல் தோற்ற மளிக்கிறது.

இதனால் தான் முஸ்லிம்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் ஒரு நாட்டில் ஹிந்து சமயத்தை நினைவூட்டும் பெயர்களையும், பழக்க வழக்கங்களையும் ஆங்காங்குக் காண்கிறோம்.

எங்கள் நாட்டிற்கு வந்த முதல் சமயம் இந்த ஹிந்து சமயம்தான்.

இதன் ஏராளமான கடவுள்களும் சமயச் சடங்குகளும் இயற்கையை வழிபடும் உள் நாட்டின் சமயத்துடன் எளிதாக ஒன்றிப்போக முடிந்தன.

இதற்குப் பிறகு பற்றின்மையை (ஜீவன்முக்தியை) வலியுறுத்தும் புத்த சமயம் வந்தது.

பின்னர் பதின்மூன்றும் நூற்றாண்டில் பாரசீகர்களின் மதக் கொள்கைகள் உச்ச நிலை அடைந்திருந்த

காலத்தில் கடல் கடந்து இஸ்லாம் சுமத்திராவுக்குள் நுழைந்தது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிறித்தவப் பாதிரிமார்கள் தங்கள் பணிகளைச் செய்வதற்காக இந்தோனேஷ்யாவிற்கு வந்த பொழுது, இங்கே நீண்ட காலமாகவே, ஒரு சிறப்பு மிக்க சமயப் பாரம்பர்யத்தைக் கொண்டிருந்த மக்களைப் பார்த்தார்கள்; இந்த மக்கள் சமயக்கடன்களில் ஆழ்ந்து மூழ்கியிருப்பதையும் கண்டார்கள்.

ஆக இன்று வழிபாட்டிலும், சடங்கிலும், கலையிலும் கிழக்கின் வளமிக்க பண்பாட்டுப் பேறுகளில் ஒன்ருக இந்தோனேஷ்யாவின் சமயநெறி திகழ்கிறது, இன்னும் 'உயிரின் ஆட்சி' இந்தோனேஷ்யர்களது வாழ்வின் எண்ணத்தின் அடிமட்டம் வரை பாய்ந்து படர்ந்திருக்கிறது.

# இந்தோனேஷ்ய ஓவியக்கலை மரபின் தடத்தை விளக்கும் படங்கள்


| எண். | விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தோனேஷ்யாவின் சந்தைத்தோற்றம்<br>தொகுப்பு : இந்தோனேஷ்யக் குடியரசு<br>நிழற்படம் : ஓலிவர் பேக்கர் | 65 |
| 2. | இயற்கை எழில்<br>தொகுப்பு : முதல்வர் சுகர்னோ | 66 |
| 3. | மாயையின் கனவு<br>தொகுப்பு : இந்தோனேஷ்யக் குடியரசு<br>நிழற்படம் : ஓலிவர் பேக்கர் | 83 |
| 4. | ஹிந்து சமயப் பழங்கதையில் ஒரு காட்சி<br>தொகுப்பு : லோதர் உல்ப் தம்பதிகள்<br>நிழற்படம் : அலெக்சாண்டார் மார்ஷாக் | 84 |

5. வாயாங் குலிட் நிழலாட்ட அரங்கில் பயன் படுத்தப்படும் தோலினுல் செய்யப்பட்ட 19 அங்குல உயரமுள்ள ஒரு பாவையின் உருவம் 101
தொகுப்பு: உல்ப் தம்பதிகள்

6. பாலித்தீவின் குரங்குக் கடவுள். 20 அங்குல உயரத்திற்கு மரத்தால் செய்யப்பட்டது. 102
தொகுப்பு: உல்ப் தம்பதிகள்

7. கருடன். 11 அங்குள உயரத்தில் வெண் கலத்தில் செய்யபபட்ட உருவம் 119
தொகுப்பு: உல்ப் தம்பதிகள்

8. பாலித்தீவின் கிராமப் புறத்தோற்றம் 120
தொகுப்பு: உல்ப் தம்பதிகள்
நிழற்படம்: ஒலிவர் பேக்கர்

# REPRODUCTIONS
## OF
# INDONESIAN ART


| Figure | Particulars | Page |
|---|---|---|
| 1. | AFFANDI: Market Place in India<br>Collection The Republic of Indonesia<br>Photo Oliver Baker | 65 |
| 2. | KARTONO JUDÓKUSOMO: Diang<br>Collection President Sukarno | 66 |
| 3. | OTTO DJAJA: Dream of Maya<br>Collection The Republic of Indonesia<br>Photo Oliver Baker | 83 |

4. ANONYMOUS BALINESE PAINTER:
Scenes from a Hindu Legend 84
Collection Mr. & Mrs. Lothar Wolff, New York
Photo Alexander Marshack

5. A leather puppet figure from the wayang kulit shadow-play theater (19 inches high) 101
Collection Mr. & Mrs. Wolff

6. A Balinese monkey god
Wood (20 inches high) 102
Collection Mr. & Mrs. Wolff

7. Garuda. Bronze Javanese figure (11 inches high) 119
Collection Mr. & Mrs. Wolff

8. I. REDING: Balinese Rural Scene 120
Collection Mr. & Mrs. Wolff
Photo Oliver Baker

Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras-3[illegible]


BURMA
Rangoon
Luang Prabang
Vientiane
Hanoi
N. VIET NAM
HAINAN
LAOS
THAILAND
Bangkok
CAMBODIA
S. VIET NAM
Phnom Penh
Saigon
Gulf of Siam
SOUTH CHINA SEA
PACIFIC OCEAN
PHILIPPINE ISLANDS
Manila
Sulu Sea
Strait of Malacca
Penang
MALAYA
Kuala Lumpur
Singapore
ACHE
Medan
SUMATRA
NIAS I.
Pariaman
Padang
Sungai Penuh
Kerinchi
MINANGKABAU
Palembang
BANGKA
Jesselton
N. BORNEO
BRUNEI
SARAWAK
Kuching
Kapuas River
BORNEO (KALIMANTAN)
Bandjarmasin
Celebes Sea
Minahassa Penin.
Molucca Sea
HALMAHERA
Equator
Makassar Strait
CELEBES (SULAWESI)
Makassar
BURU
CERAM
Ambon
NEW GUINEA (WEST IRIAN)
Digul River
0
250
500
750
Scale of Miles
JAVA SEA
INDIAN OCEAN
KRAKATAU I.
Jakarta
Jatinegara
Bandung
Sukabumi
Semarang
Blora
Surabaya
JAVA
Borobudur
Jogjakarta
Prambanan
Surakarta (Solo)
BALI
Ubud
KOMODO
FLORES
SUMBAWA
SUMBA
Banda Sea
TIMOR
Timor Sea
ARAFURA SEA
AUSTRALIA
Dorothy de Fontaine

## INDONESIA

(A collection)

### இந் நூல்:

ஒரு நாட்டின் உண்மை நிலையை அறிந்து கொள்ளவேண்டுமானால் நேரில் சென்றுகண்டு தெளிவது தான் முறைமையாகும். ஒரு நேரம் இம்முறையும் தோல்வியடையக் கூடும், தகுந்த வழிகாட்டிகள் அமையவில்லையென்றால். ஆனால், நல்ல அறிவும், நாட்டின்பால் தாயன்பும் கொண்ட பேரறிஞர்களால் எழுதப்பட்ட நூல்கள் உறுதியாகச் சீரான பயன் தரும் என்ப – தற்கு இந்நூல் சான்றாகும். –

யுனெஸ்கோ உதவியுடன்
தென்மொழிகள் புத்தக ட்ரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது.



**AVVAI NOOLAGAM**
**4/141, BROADWAY, MADRAS-1**

Wrapper Printed at Gnanodaya Press,
Madras-1.